வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 ஆடி திங்கள் 28-ம் நாள் (12—8—1962) ஞாயிற்றுக்கிழமை ரபி. அவ் 10 | இதழ் 11

# அரிசி வெட்டு வாபஸாகுமா?

## இலங்கையரின் வெளிநாட்டு ஆஸ்திகள் பறிபோகுமா?

### கௌரவப் பிரஜைகளும் பாதிக்கப்படுவர்

இலங்கைப் பிரஜைகளுக்கு (கௌரவப் பிரஜைகள் உட்பட) சொந்தமாக வெளி நாடுகளிலுள்ள ஆஸ்திகளை அவர்கள் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டுமென வற்புறுத்தும் மசோதாவொன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாமென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

அரசாங்கத்தின் வெளிநாட்டு ஸ்டர்லிங் கையிருப்பு மட்டமடமென்று சரிந்து அரசாங்கத்திற்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. அரிசி வெட்டின் மூலம் வெளிநாட்டுக் கையிருப்பை ஸ்திரப்படுத்தலாமென நிதி மந்திரி திட்டமிட்டிருந்தார் எனினும், அரிசி வெட்டு வாபஸ் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதால் ஸ்டர்லிங் கையிருப்பை அதிகரிக்கச் செய்ய வேறு வழி கள் காணப்பட்டிருக்கின்றன.

அதன்படி முதற்படியாக இலங்கைப் பிரஜைகளுக்கு (வம்சாவளிப் பிரஜைகளாக விருந்தாலும் சரி, பதிவுப் பிரஜைகளாயிருந்தாலும் சரி கௌரவப் பிரஜைகளாயிருந்தாலும் சரி) வெளி நாடுகளில் சொந்தமாக உள்ள ஆஸ்திகளை அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கை எடுக்கப்படலாமென்று கூறப்படுகிறது.

இம்மாதிரியான நடவடிக்கைகளைப் பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கானும் எடுத்துள்ளார் என்று அரசாங்க வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

### ஆதரவளிக்க பறந்து வந்தார்!

கடந்த வியாழக்கிழமை ஜனப் பிரதிநிதிகள் சபையில் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. மகாநாம சமரவீரா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்துக்கு வரவிருந்ததால் உடனே வந்து அரசாங்கத்தின் சார்பில் வாக்களிக்குமாறு யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவுக்குத் தந்தி அனுப்பப்பட்டது. அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காக அவரும் உடனே யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு விமானத்தில் பறந்து வந்தார் என்று கூறப்படுகிறது. அரசாங்கத்தைக் கட்டிக் காப்பதில் அவருக்குள்ள ஆர்வத்தை அரசாங்க எம். பி. கள் சிலர் பெரிதும் பாராட்டினார்களாம்.

## அரசாங்கக் கட்சியில் குமுறும் கொந்தளிப்பின் எதிரொலி

## தூரதிருஷ்டியற்ற செயலால் ஏற்பட்டுள்ள சங்கடம்

(நமது பாராளுமன்ற நிருபர்)

பங்கீட்டு அரிசி வெட்டும் வாபஸ் செய்யப்படலாம் என்று பாராளுமன்ற வட்டாரங்களிலே பலத்த வதந்தி அடிபடுகிறது.

அரசாங்கப் பாராளுமன்றக் கட்சிக்குள்ளே ஏற்பட்டுள்ள குத்து வெட்டு, மந்திரிகளிடையே பலத்த கருத்து வேற்றுமை, நாட்டிலே பொங்கி வரும் கொந்தளிப்பு, தொழிற் சங்கங்கள் ஒரு போராட்டத்துக்குத் தயாராவது, எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒரே அணியில் திரண்டு நிற்பது, எதிர்க் கட்சித் தலைவர்கள் நாடெங்கும் பொதுக் கூட்டங்களை நடத்தி அரசாங்கத்துக்கெதிராக மக்கள் எதிர்ப்பைத் திரட்டி வருதல் முதலியவை அரசாங்கத்தைக் கதிகலங்கச் செய்துள்ளன. ஆகவே அரிசி வெட்டை வாபஸ் செய்வதற்கான நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு அதிகரித்து வருகிறது.

அரிசி வெட்டை வாபஸ் செய்யாவிட்டால், வரவு-செலவுத் திட்டம் நிறைவேறுதென்றும், அரசாங்கம் வீழ்ச்சியடையுமென்றும் நாட்டிலே ஹர்த்தால் போராட்டங்கள் ஏற்படக் கூடுமென்றும் அரசாங்க எம். பி.கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனராம்.

மந்திரிகள் சிலர் அரிசி வெட்டை எதிர்த்துப் புரட்சி செய்வதும் அரசாங்கத்தைக் கிடுகிடுக்கச் செய்துள்ளது. பாராளுமன்றத்தில் வரவு—செலவுத் திட்ட விவாதம் ஒத்திவைக்கப்பட்டது அரசாங்கத்திற்கு ஒரு தோல்வியென்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்த நிலைமையில் அரிசி வெட்டை வாபஸ் வாங்குவதைத் தவிர வேறுவழி கிடையாதெனப் பாராளுமன்ற வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

விற்பனை வரியை வாபஸ் செய்ததால் வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட பற்றுக் குறையை சுங்கவரியைக் கூட்டுவதின் மூலம் ஓரளவுதான் சரிசெய்ய முடிந்தது. மீதித் தொகையை எவ்வாறு சேகரிப்பது என்ற பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அத்தோடு அரிசி வெட்டையும் வாபஸ் செய்தால் பற்றுக் குறையைச் சமாளிக்க வேறு வழிகளைத்தான் தேடியாகவேண்டும். அது சம்பந்தமாக அரசாங்க வட்டாரங்களில் விவாதம் நடைபெறுவதாக அறியப்படுகிறது.

(9-ம் பக்கம் பார்க்க)

## பிரதம மந்திரி வெளிநடப்பு

## மந்திரி சபைக் கூட்டம் திடீரெனக் கலைந்தது

கடந்த திங்கட்கிழமை இரவு அலரிமாளிகையில் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் அரிசிப் பங்கீடு வெட்டைப்பற்றி விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே கூட்டம் திடீரெனக் கைவிடப்பட்டதாகத் தெரிகிறது.

விவாதம் சூடாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு கட்டத்தில் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மிகக் கோபத்துடன் மந்திரிசபைக் கூட்டத்திலிருந்து எழுந்து போய்விட்டாரென்று அறியப்படுகிறது.

பிரதமரைக் கூட்டத்திற்கு மீண்டும் அழைத்து வரச் சென்ற மந்திரி ஒருவர் "என்னை நன்றாகத் திட்டி விட்டார்" என்று கூறிக்கொண்டு திரும்ப வந்தார். அடுத்தபடியாக வேறு சில மந்திரிகளும் சென்று அவரைச் சமாதானப்படுத்தி, கூட்டத்திற்கு அழைத்துவரப் பெரும் முயற்சி செய்தனராம். முயற்சி பயனளிக்காமற் போகவே கூட்டம் திடீரென முடிவுற்றது.

என்ன நேர்ந்தாலும் சரி வரவு - செலவுத்திட்டத்தை மாற்ற முடியாது என்று பிரதமர் தெட்டத்தெளிவாகக் கூறினாராம்.

இதுவரை நடந்த மந்திரி சபைக் கூட்டங்களில் மிகச் சூடான விவாதம் நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டம் திங்கட்கிழமை இரவு நடைபெற்ற கூட்டந்தான் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

### "இதுதான் வழி"

"ஏற்றுக்கொள்வதாயின் ஏற்றுக்கொள்ளுங்கள். இல்லையேல் கை விடுங்கள்" என்ற முறையில்தான் பிரதமர் பேசினாராம். நிதி மந்திரியின் கருத்துக்களை அவர் அப்படியே அங்கீகரித்தார்.

விவாதத்தின்போது ஒரு கட்டத்தில் பிரதமர் அழுது கண்ணீர் சிந்தினராம். மந்திரிகளை நம்பியே தான் பதவி ஏற்றதா[illegible], நெருக்கடியான கட்ட[illegible] அவர்கள் கைவிடுவ[illegible]

(8-ம் பக்கம் பா[illegible])

சகலவித மூலநோய் நிவாரணி
ரிச்செலட்ஸ் ப்ளட் பியூரிபயர்
(RICHELET'S BLOOD PURIFIER)
இரத்த சுத்தி செய்து


மூலம்
சொறி சிரங்கு
படை
(ECZEMA)
மாத விடாய்
கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானுகவே ஏற்படும்.
எங்கும் கிடைக்கும்.
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன்: 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

பாராளுமன்றத்தில் திரு. அ. அமிர்தலிங்கம்:

# தமிழுக்கு உரிமை கிடைக்கும் வரை

# சிங்களத்தை ஏற்கமாட்டோம்

## இதை அரசாங்கம் உணர வேண்டும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

ஆனபடியால், எந்த வகையான பலாத்காரச் செயல்களிலும் இறங்காது, ஜனநாயக விரோதமான எந்தக் காரியத்திலும் ஈடுபடாது இருக்கும் இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடை செய்தது ஜனநாயகத்துக்கு முரணான ஒரு நடவடிக்கை என்பதைக் குறிப்பிடுவதோடு, கனம் உடுவில் பிரதிநிதி அவர்கள் குறிப்பிடுவது போல், இது ஒரு பெரிய ஆபத்தான முன்மாதிரியான நடவடிக்கையுமாகும் என்பதையும் கூற விரும்புகின்றேன். இதை முன்மாதிரியாகக் கொண்டு மற்ற எதிர்க்கட்சிகளையும் இந்த அரசாங்கம் தடை செய்யலாம். கம்யூனிஸ்ட் கட்சியைத் தடை செய்யலாம்; சமசமாஜக்கட்சியைத்தடை செய்யலாம்; ஒருவேளை ஐக்கிய தேசியக் கட்சியையும் கூடத் தடை செய்யலாம்; அவ்வாறு தடை செய்வதற்கு ஒரு காரணமும் காட்டத் தேவையில்லை. வெலிமடைப் பிரதிநிதி சொன்னால் போதும், அடுத்த நாளே அரசாங்கம் அதை நிறைவேற்றிவிடும். இது தமிழ் பேசும் மக்கள் மாத்திரமல்ல, இந்த நாட்டில் ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரும் கண்டிக்க வேண்டிய ஒரு நடவடிக்கை என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

அவர்கள் சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மீது வழக்குத் தொடருங்கள். அதற்காக அவர்களைத் தண்டியுங்கள். அதை எவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால் ஒரு ஸ்தாபனத்தைத் தடை செய்வது—அவர்களின் நோக்கங்கள் உங்களுக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்துக்காகத் தடை செய்வது—ஒரு ஆபத்தான முன்மாதிரியாக, உங்களுடைய போக்குக்கு முரணாக இருக்கும் எதிர்க்கட்சி அத்தனையையும் அழிப்பதற்கு நடவடிக்கையாக இருக்குமென்பதை நான் இச்சந்தர்ப்பத்திலே எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

### சரித்திரம் படியுங்கள்!

இலங்கையில் இருப்பது போன்ற நிலைமை சுவிற்சர்லந்திலிருக்கின்றது. அங்கு ஜெர்மன் மக்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். அங்குள்ள ஜெர்மனிய மக்கள் எந்த நேரத்திலாவது ஜெர்மனியோடு சேர்ந்துகொள்ள விரும்பவில்லை. ஹிட்லர் அவர்களைத் தன் பக்கம் திருப்பச் செய்த தந்திரங்கள் பலிக்கவில்லை. ஏனெனில் அவர்கள் ஜெர்மனியர்களாக இருந்தாலும் அவர்களுடைய மொழிக்குச் சம அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கின்றது. தமது மாகாணத்தில் தம்மைத்தாமே ஆளக்கூடியவர்களாக அந்த சுவிற்சர்லந்து ஜெர்மனிய மக்கள் இருக்கின்றார்கள். அதனால் சுவிற்சர்லந்து எல்லைக்கு வெளியே ஜெர்மனியர்களும் பிரெஞ்சுக்காரர்களும் சூழ்ந்துகொண்ட பொழுது அங்குள்ள பிரெஞ்சு மொழி பேசும் மக்களும் ஜெர்மன் மொழி பேசும் மக்களும் இத்தாலி மொழி பேசும் மக்களும் ஒற்றுமையாக ஒரு நாட்டைச் சேர்ந்த மக்களைப் போன்றே இருந்தார்கள். ஆனபடியால் கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்தன) அவர்களும் கௌரவ வெலிமடைப் பிரதிநிதி (திரு. கே. எம். பி. ராஜரத்தின) அவர்களும், சரித்திரத்தில்இருந்து—மற்றநாடுகளில் இருந்து—படிக்க வேண்டிய பாடத்தைப் படிக்கத் தவற வேண்டாமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்த்தன) கூறினார் "நாங்கள் சிங்களந்தான் ஆட்சி மொழி என்று தீர்மானித்து விட்டோம். நீங்கள் சிங்களம் படிக்கத்தான் வேண்டும்" என்று.

யார் இவர் எங்களைச் சிங்களம் படிக்கச் சொல்வதற்கு? அவருக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்? இந்த நாட்டில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் சார்பாக நான் கூறுகிறேன் "நாங்கள் தீர்மானித்து விட்டோம், தமிழுக்கு உரிமை கிடைக்கும் வரை சிங்களத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்று.

### மானமுள்ள தமிழ் மக்கள் படிக்க மாட்டார்

கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்த்தன) கூறினார், "சிலர் இரகசியமாகச் சிங்களம்படிக்கிறார்கள்" என்று. வயிற்றுப் பிழைப்புக்காகச் சிலர் சிங்களம் படிக்கலாம். தென்னிலங்கையில் உத்தியோகங்களை விரும்பும் ஒரு சிலர் இருக்கலாம். ஆனால் மானத்தோடு கூடிய தமிழ் மக்கள் சிங்களத்தைப்படிக்க மாட்டார்கள். அதற்கு மாறாக ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறும்வரை சிங்களம் படிக்க ஆயத்தமாக இல்லை என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். சிங்களத்தைப் படிப்பவர்கள் மொத்த ஜனத் தொகையில் எத்தனை சதவிகிதம் என்று எண்ணிப்பார்த்தீர்களா? தமிழ் பேசும் மக்களுடைய மொத்த சனத் தொகையில், நூற்றுக்கு இரண்டு சதவிகிதத்தினர் தானும் அரசாங்க சேவையில் இல்லை. அவர்களில் பத்தில் ஒரு பங்கினராவது கூடச் சிங்களம் கற்கவில்லை.

உண்மை இப்படி இருக்க அரசாங்கம் செய்திகளைத் திரித்துக் கூறி வருகிறது. 18,000 பேர் சிங்கள பரீட்சைக்குத்தோன்றியுள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. இவர்களில் தமிழர் தொகை என்ன? சிங்களவர்களின் தொகை எவ்வளவு என்று கூறவில்லை. அரசாங்க சேவையில் உள்ள தமிழரின் எண்ணிக்கை 10,000-க்கு மேற்படாது. இப்படி இருக்க 18,000 பேர் சிங்களப் பரீட்சை எடுத்ததாக அரசாங்கம் கூறுகிறது. பொய்யான விபரங்களைக் கொடுத்துத் தமிழ் மக்களின் எதிர்ப்பை—சுதந்திர தாகத்தை அழித்து விடலாம் என்று அரசாங்கமும் கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்த்தன) அவர்களும் கனவு கண்டால் அது ஒருபோதும் நடைபெறாது.

போலந்து தேசத்தில் போலந்து மொழியை ... படிக்க வேண்டுமென்று ஜார் மன்னர் சட்டம் வைத்தான். தோட்டப் பகுதி மக்கள் சிங்களமே படிக்க வேண்டுமென்று கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்த்தன) குறிப்பிட்டார். போலந்து சரித்திரத்தை—மட்டும் கியூபா சரித்திரத்தைப் பார்த்தால் ஒரு மொழியைத் திணிக்க முடியாதென்பது புலப்படும். போலந்து தேச மக்கள் எல்லா அடக்குமுறைமுயற்சிகளையும் எதிர்த்து நல்லபடி வாழவே செய்தார்கள்.

நீங்கள் "நாங்கள் தீர்மானித்து விட்டோம், நீங்கள் சிங்களம் படிக்கத்தான் வேண்டும்," என்கிறீர்கள். ஆனால் நாமோ நாமாகத் தீர்மானிக்கும் வரை சிங்களம் படிக்க மாட்டோம். 1956-க்கு முன் நமது கல்லூரிகளில் சிங்களத்தைப் படிப்பித்தோம் நமது சகோதரர்கள் மொழி என்று சிங்களத்தைத் தமிழ் மக்கள் விரும்பிப் படித்தார்கள். சகோதரர்களுடைய மொழி, அவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்காகச் சிங்களம் படிக்க வேண்டுமென்று படித்தார்கள். 1956-ம் ஆண்டிலே இந்த நிலைமை மாறி "சகோதரர்கள் மொழியில்லை; எஜமானர்களுடைய மொழி, ஏற்றுக்கொள்ளுங்கள்" என்ற நிலைப்போக்கு வந்தவுடன் அவர்கள் சிங்களம் படிப்பதை நிறுத்திவிட்டார்கள், பாடசாலைகளில் சிங்களம் படித்துக் கொடுப்பதையும் நிறுத்திவிட்டார்கள். இத்தகைய, இலங்கைச் சரித்திரத்திலே உள்ள பாடங்களையும் அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்த்தன) அவர்கள் படித்துக் கொள்ள வேண்டுமென்று தான் நான் இங்கே இதனைக் குறிப்பிடுகின்றேன்.

### காலஞ்சென்ற பிரதமரின் கொள்கையா இது?

இந்த அரசாங்கத்தினர் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களுடைய கொள்கைகளைத்தான் தாங்கள் கைக்கொண்டு நடப்பதாகக் கூறுகின்றனர். மொழி விஷயத்திலுஞ் சரி, மற்றெந்த விடயங்களிலும் சரி, தாங்கள் பண்டாரநாயக்கா அவர்களுடைய கொள்கைகளைத்தான் பின்பற்றி வருவதாகக் கூறுகின்றார்கள். இவ்வாறு கூறிக்கொண்டு தான் இவர்கள் நாட்டு மக்களுடைய வாக்குகளைப் பெற்று வருகின்றார்கள். சமீபத்தில் நடைபெற்ற அனுராதபுர இடைத் தேர்தலிலுங்கூட நான் கேள்விப்பட்டேன், அவருடைய "கடைசியாத்திரை" எனும் மரண ஊர்வலப் படத்தை ஊருராகக் காட்டி வாக்குப் பெற்றார்கள். திரு. பண்டாரநாயக்காவின் பெயரைச் சொல்லிக் கேட்கின்றேன் மொழி விஷயத்தில் காலஞ்சென்ற பிரதமருடைய கொள்கையை எவ்வளவு தூரம் நீங்கள் கடைப்பிடித்து வருகின்றீர்களென. 1958-ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 25-ந் தேதி இச்சபையிலே காலஞ்சென்ற பிரதமர் கூறியிருப்பதை நான் இங்கேயுள்ள அரசாங்கக் கட்சி அங்கத்தவர்களுக்கு வாசித்துக் காட்ட விரும்புகின்றேன். ஹன்சாட், 27-வது தொகுதி 267-ம் பத்தி, இதிலே காலஞ்சென்ற பிரதமர்—

It has always been the policy of the Government Party that although the circumstances of the situation were such that the Sinhalese language had to be declared the official language of this country there was no intention in fact to cause any undue hardship or injustice to those whose language is other than Sinhalese in the implementation of that Act. In other words, the policy that the Government intends to follow is that while accepting Sinhalese as the official language, citizens who do not know Sinhalese and who are probably educated in a different medium should not suffer inconvenience, embarrassment or any trouble as a result of that.

காலஞ்சென்ற பிரதமருடைய கொள்கையைப் பின்பற்றுகிறீர்களா, அல்லது தங்களுடைய சொந்தக் கொள்கைகளைப் பின்பற்றுகிறீர்களா என்று நான் உங்களைக் கேட்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் வாழுகின்ற ஒரு தமிழ்த் தொழிலாளி, மட்டக்களப்பில் வாழுகின்ற தமிழ்த் தொழிலாளி கைத்தொழில் கோட்டுக்கு—லேபர் றைபியூனல்—தனக்குச் செய்யப்பட்ட ஒரு குறையைப் பற்றி தமிழிலே ஒரு மனு அனுப்பினால் அவனுக்குச் சிங்களத்தில் பதில் கிடைக்கின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக ஊழியர்கள் சங்கம் ஒரு தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்டதையிட்டு அனுப்பிய மனுவுக்கு சிங்களத்தில் பதில் கிடைத்தது. அவர்கள் அதன் கருத்து விளங்காமல் எவ்வளவோ திண்டாடினார்கள். நேற்றையதினம் கூட ஐக்கிய சங்கத்திலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஒரு தொழிலாளி என்னிடம் வந்து லேபர் றைபியூனலுக்குத் தாம் தமிழில் அனுப்பிய மனுவுக்குச் சிங்களத்தில் பதில் வந்திருப்பதாகவும், அவரது ஊரிலே இதை வாசிப்பதற்கு ஒருவரும் இல்லை என்றும் கூறி, தாம் இதற்கு என்ன செய்வதென்று கேட்டார்! காலஞ்சென்ற பிரதமருடைய கொள்கையையா பின்பற்றுகின்றீர்கள் என்று இந்த அரசாங்கத்தின் அமைச்சர்களைக் கேட்கின்றேன்—

டொக்டர் நாகநாதன்: அமைச்சர் ஒருவர்தானும் இங்கில்லை, ஆ...... அதோ ஒருவர் இருக்கின்றார்.

திரு. அமிர்தலிங்கம்: அது மாத்திரமன்று, வருமான வரிப் பத்திரம் அனுப்புங்கள் என்று கல்லூரி அதிபர் திருவாளர் வீரசிங்கம் கேட்டெழுதியதற்கு ஆங்கிலத்தில், சிங்களத்தில்தான் அப்பத்திரங்களை அனுப்பினார்கள். அப்படியானால் நான் அப்பத்திரத்தை நிரப்பி அனுப்ப முடியாது; தமிழில் தான் அனுப்புங்கள் என்று கேட்டார். அவருக்குத் தமிழ்ப் பத்திரம் அனுப்ப மறுத்து, வருமானவரி பத்திரத்தை நிரப்பி அனுப்பவில்லை என்ற குற்றத்துக்காகக் கொழும்புக் கோட்டிலே 75 ரூபாத் தெண்டம் அல்லது ஒரு மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சிங்களம் தெரியாத மக்களுக்கு எந்த வகையான கஷ்டங்களுமின்றி இந்த மொழிச் சட்டம் அமுல் நடத்தப்படுமென்ற காலஞ்சென்ற பிரதமரின் கொள்கை இதுதானா என்று இந்த அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன்.

அரசாங்க ஊழியர்களைப் பற்றிய திட்டவட்டமான

(6-ம் பக்கம் பார்க்க)

Dial 2739




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன்: 2739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதயசூரியன்", இறக்குவானை.

கே: பெற்றோர் சிலர் தங்கள் பிள்ளைகளைச் "சனியன்" என்று அழைக்கின்றனரே! அந்தச் சனியனுக்கும், துப்பாக்கி முனையில் பொருத்தப்பட்டுள்ள சனியனுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா?

ப: உண்டு—இரண்டும் தீங்கிழைப்பவைகளே. ஒரு சனியன் சற்பனை-மற்றது ஆயுதம். முன்னையது தீங்கு செய்யும் என்று நம்பப்படுகிறது. பின்னையது நிச்சயமாகத் தீங்கிழைக்கும்.

ஃ

மோ. யேசுதாசன், கன்னாகம்.

கே: வர்த்தக விளம்பரங்களில் பெரும்பாலும் பெண்களின் படங்கள் அச்சிடப்பட்டிருப்பதேன்?

ப: பெண்களின் உள்ளத்தைக் கவரவே-அழகான பெண்களின் படங்கள் அச்சிடப்பட்டுள்ள விளம்பரத்தைப் பெண்கள் விரும்பிப் பார்ப்பார்கள் என்பது விளம்பரதாரர்களுக்குத் தெரியும்.

ஃ

ஏ. ஏ. காதர், கல்முனை.

கே: வயது உயர்ந்த பெண்ணை வயது குறைந்த வாலிபர் விவாகம் செய்வது கூடாது என்கிறார்களே! ஏன்?

ப: தரம்புத் தளர்ச்சி ஏற்படுமாம்.

கே: வயதில் குறைந்த ஒரு பெண்ணை முதியவர் விவாகம் செய்வதால் வரும் நன்மை என்ன?

ப: அது ஒரு டொனிக் அல்லது காயகற்பம் மாதிரி—முதியவருக்கு வாலிபம் திரும்பும்.

ஃ

வை. துரைச்சாமி, லிண்டுலா.

கே: மலை நாட்டிலே சிங்கள அதிபர்கள் இருந்து நடத்தும் அரசாங்கப் பாடசாலைகளில் தமிழ்ப் பகுதிக்கு இழைக்கப்படும் தீங்குகளைத் திரு. தொண்டமானிடம் முறையிடும் போது, அவர் தொழிலாளர்களுக்காக நான் பேசுவேனே தவிர அவர்களின் குழந்தைகளைப் பற்றி எனக்குப் பேச முடியாது என்கிறாரே! இது நியாயமா?

ப: நியாயந்தான். ஏனெனில் அவர் ஒரு தொழிலாளர் சங்கத்தின் தலைவர். தனது சங்க அங்கத்தினர்க்காக மட்டுமே பேச முடியும். நீங்கள் ஒரு குழந்தைகள் சங்கத்தைத் திறுவி, அதன் தலைமைப் பதவியை அவருக்கு அளியுங்கள். அதற்குப் பிறகு உங்களின் முறைப்பீட்டை உடனடியாகக் கவனிப்பார்.

ஃ

டி. எஸ். கோவிந்தராஜா, கந்தப்பளை.

கே: எனக்கு அடுத்த வாரம் திருமணம். என் திருமணத்திற்குத் தாங்கள் என்ன பரிசு அனுப்புவீர்கள்?

ப: என்ன பரிசு அனுப்புவீர்களென்று முதலில் கேட்காமல், எனக்கும் திருமண அழைப்பு அனுப்பி வையுங்கள். "சுதந்திரன்" பிரதியொன்றைத் திருமணப் பரிசாக அளிப்பதென முடிவு செய்திருக்கிறேன்.

ஃ

ப. ஜெயகுமாரன், பருத்தித்துறை.

கே: நான் சந்திர மண்டலத்திற்குக் கால் நடையாகப் போகத் தீர்மானித்திருக்கிறேன். நீரும் வருகிறீரா?

ப: கால் நடையாகவே புறப்படுகிறீரா! ரஷ்யர்களை, அமெரிக்கர்களைப் போல நாம் ரொக்கட்டுகளை உற்பத்தி செய்திருக்கிறோமா, என்ன? நமக்குள்ளது நடராஜா சர்விஸ் மட்டும்தானே. சந்திர மண்டலத்துக்குப் போகிற வழியில், அப்படியே யமனுலகத்துக்கும் சென்று வாருங்கள். உங்களுடன் வர எனக்கும் ஆசைதான்.




வாசகர்கள் அனுமதிக்க வேண்டுபட!

ஃ

வி. கதிர்வேல், கொழும்பு-13.

கே: நான் ஒரு கொடியவன். என்னை ஒரு பணக்காரப் பெண்ணும் ஓர் ஏழைப் பெண்ணும் காதலிக்கிறார்கள். யாரை மணந்து கொள்ளலாம்?

ப: நீர் கொடியவராதலின் பணக்காரப் பெண்ணையே மணந்து கொள்ளும்.

ஃ

வெ. சுப்பையா, மண்டூர்.

கே: இ. தி. மு. க. தடை எவ்வளவு காலம் நீடிக்கும்?

ப: அவசரக்காலச் சட்டம் நீடிக்கும் வரை

ஃ

ஆர். கணபதி, கேகாலை.

கே: நமது உணவு மந்திரி திடீர் என்று அரைக் கொத்து அரிசியைக் குறைத்து விட்டாரே! அவரை நாம் என்ன செய்யலாம்?

ப: ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் ஏற்கனவே தனது சொந்தப் பங்கீட்டு அரிசியில் ஒரு கொத்தைக் குறைத்துக் கொண்டு விட்டார்—உடற் பருமனைக் குறைப்பதற்காக.

ஃ

மா. க. வைத்தியநாதன், இரத்தினபுரி.

கே: சிம்மாசனப் பிரசங்கத்தின் போது அரசாங்கத்தை (ஆளும் கட்சியை) ஆதரித்து வாக்களித்த தொண்டமான், அஸிஸ் துரையப்பா ஆகியோரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: சிற்பபடிவுள்ள கட்டியக்காரர்கள்.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் பண்டாரநாயகா இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: சங்கடமான நிதி அமைச்சைக் கைவிட்டு, மற்றொரு அமைச்சுக்குத் தாவ தருணம் பார்த்துக் கொண்டிருக்கிறார். கைத்தொழில் இலாகாவும், வர்த்தக இலாகாவும் அவருக்கு மிகவும் பிடித்தமாம்.

ஃ

எம். எம். எஸியா, பெரிய கிண்ணியா.

கே: கல்வி மந்திரி அவர்களின் வானொலி பதவி பறி போனதற்குக் காரணம் என்ன என்பதைத் தங்களுக்குச் சொல்ல முடியுமா?

ப: கோட்டைக்குள் ஏற்பட்ட குத்து வெட்டுதான். கல்வி மந்திரியின் ஆட்சியின் கீழ் வானொலிப் பகுதியினுள் இதற்கு முன்பு என்றுமே ஏற்பட்டிராத அளவுக்கு இன பேத, மத பேத கூச்சல்கள், முற்போக்கு, பிற்போக்கு பூசல்கள் ஆசாபாசங்கள் எல்லாம் ஏற்பட்டு பொலிஸாரும் தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டதாம். கல்வி மந்திரியின் பதவி மட்டுமென்ன! வேறு சில மந்திரிகளின் பதவிகளும் கைமாறப் போகின்றனவாம். விடியும் போது தான் நல்ல நல்ல வேடிக்கைகளைப் பார்க்கலாம்.

ஃ

டி. ஆர். குப்புசாமி, கொழும்பு-3

கே: ஒரு தமிழ்த் [illegible] 32 ஆண்டுகள் உயிர் வாழ்ந்துவிட்ட பெருமையில் தான் [illegible] வாழ்வு பெற்றுவிட்டதாகவும், சுடச் சுட செய்திகள் கொடுப்பதாகவும் பீதிக் கொள்கிறதே! 'சுடச் சுட' என்றால் என்ன?

ப: 24 மணி நேரத்துக்கு முன்பே இதர பத்திரிகைகளில் வெளி வந்து புளித்துப் போன பழைய செய்திகளைப் பெருமையுடன் பிரசுரிப்பதற்கு அத்தினசரி சூட்டியுள்ள பெயர்தான் 'சுடச் சுட' என்பது.

ஃ

கே. கே. சாமி, எட்டியாந்தோட்டை.

கே: நீங்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?

ப: தமிழ் பேசும் மக்கள் எந்தக் கட்சியோ அந்தக் கட்சிதான் நான்.

கே: தமிழரசுக் கட்சியை மலை நாட்டுத் தமிழ் மக்களிடையேயும் புகுத்தினால் என்ன?

ப: புகுத்தல், திணித்தல், ஊடுருவல் போன்ற தந்திரோபாயங்களைக் கையாளும் கட்சியல்ல தமிழரசுக் கட்சி. இந்தியாவில் சுதந்திரப் போராட்ட காலத்தில் இந்திய தேசியக் காங்கிரஸ் இருந்ததைப் போல தமிழரசுக் கட்சியும் ஒரு பிரமாண்டமான அரசியல் இயக்கம். மலை நாட்டு தமிழ் மக்களும் இவ்வியக்கத்தினுள் அடங்கியவர்களே!

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

ஃ

கு. ந. ராஜா, பருத்தித்துறை.

கே: விற்பனைவரி திடீரென வாபஸாகிய காரணம் என்ன?

ப: அரசாங்கம் ஆட்டம் கண்டதுதான் காரணம். விற்பனை வரி அமுலுக்கு வந்ததும் திடீரென விலைவாசிகள் கூடியதால் மக்களிடையே பலத்த எதிர்ப்பு கிளம்பியது. விற்பனை வரியை வாபஸ் செய்திரா விட்டால் அரசாங்கம் வீழ்ச்சியுற்றிருக்கும்.

ஃ

ந. அம்பலவன், தலாத்து ஓயா.

கே: திருத்தியமைக்கப்படவிருக்கும் மந்திரி சபையில் மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது அவர்களுக்கு ஏதாவது கிடைக்குமா?

ப: அவரிடம் உங்களுக்குள்ள அபிமானம் நன்றாகத் தெரிகிறதே!

ஃ

ஆர். எம். முருகேஷ், புளியம் பொக்கனை.

கே: வரும் தேர்தலுக்குள் சிறிமா அரசாங்கம் தமிழருக்குச் செய்யப் போவதென்ன?

ப: பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைப்பதற்காகத் தமிழ் பிரதேசத்தில் சாத்தியமான இடங்களிலெல்லாம் சிங்களத் தொகுதிகளை ஏற்படுத்தல்.

ஃ

பன்னீர்ச் செல்வன், நாரஹேன்பிட்டி.

கே: இங்குள்ள இ. தொ. கா. தலைவர்கள் சொல்கிறார்கள் வவு[illegible] க்கு நிலம் கொடுக்க இருந்த[illegible] தமிழரசுக் கட்சியும் [illegible] தவும் சேர்ந்துதான் கெடுத்தது என்று. அதைப்பற்றித் தங்களுடைய கருத்தென்ன?

ப: அரசாங்கக் கட்சி செய்ய வேண்டியதை இ. தொ. கா. செய்கிறது. மலை நாட்டுத் தமிழர்களைக் குடியேற்றுவதைப் போல பாசாங்கு செய்து சிங்களவர்களை வவுனியாவில் குடியேற்றுவதை அம்பலப்படுத்தியது ஒரு குற்றமா? உண்மை வெளி வந்ததால் இ. தொ. காவுக்கு பரிசல் ஏற்பட்டிருக்கிறது போலும்.

ஃ

அ. கிருஷ்ணராஜா, ஹெட்டன்.

கே: ஏழை மக்கள் மீது தாங்க முடியாத வரியை விதிக்கும் இந்த அரசாங்கம் எம். பி. களினதும் மந்திரிகளினதும் சம்பளத்தில் 250-00 ரூபாவை குறைத்து நிதி நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டால் என்ன?

ப: அடா! நீர் அடிமடியிலேயே கையை வைக்கிறீரே! இலங்கை எம். பிகளையும் மந்திரிகளையும் இந்திய ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் என்று நினைத்து விட்டீரோ!

ஃ

எஸ். சாத்தப்பன், ஒப்பநாயக்க

கே: ஈழத் தமிழர்கள் சமஷ்டிக் கொள்கையைக் கைவிட்டு, பிரிவினையை வற்புறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அதன் காரணமாக காலப் போக்கில் ஒரு உள் நாட்டு யுத்தம் மூண்டால், அதே கால கட்டத்தில் தாய் நாட்டில் திராவிட நாடு அல்லது தனித் தமிழ் நாடு ஸ்தாபிக்கப்பட்டிருந்தால், சிங்கள ஆட்சியாளரின் கதி என்னவாகும்?

ப: ஏற்பட்டால்...மூண்டால்...ஸ்தாபிக்கப்பட்டிருந்தால்...என்ன ஆள் ஐயா நீர், ஒரே "ஆல்" மயமாயிருக்கிறது? ஏன், சும்மா அலட்டிக்கொள்கிறீர்?



# தலைவலிக்கு

ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்

**108 மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது**

இதனைத் தலைக்கு வைத்துவரின் குணமாகும் வியாதிகள்:

கண் எரிச்சல், கண்சிவப்பு, கண்ணீர் வடிதல் பூ விழுதல், கண் அரிப்பு, காதில் சீழ் வடிதல், காதுக்குத்து, பீனிசம், செவிடு, காது இரைச்சல், காது மந்தம், மூக்கிலிருந்து நீர் வடிதல், ரத்தம் வருதல், ஓயாத் தும்மல், நாற்ற உணர்ச்சி காணல், வாசனை உணர்ச்சி இல்லாதிருப்பது, மண்டையிடி, மண்டைக் கரப்பான், பிடரி வலி, ரோமம் உதிர்தல் முதலியவைகளைக் குணப்படுத்துவதோடு தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு அடர்த்தியாக வளரச் செய்யும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

**புட்டி 1க்கு ரூ. 5-75**
**அரைப் புட்டி ரூ. 3-00**

தபால் செலவு -/95

**ஞானசுந்தர வைத்தியசாலை,**
187, செட்டியார் தெரு, கொழும்பு.

**சிறந்தது சிக்கனமானது சிந்தனையூட்டுவது**

**யானை பீடி**
ஸ்பெஷல்




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்குப்புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையேபுகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலையே புகையுங்கள்.

**யானை பீடி கம்பெனி**
62, மெசெஞ்சர் வீதி கொழும்பு. தொ.பே. 7651

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை நகரசபை

கடந்த வாரம் "திருமலை நகரசபை சம்பந்தமாக அப்பாக்குட்டி அம்மானுக்குக் கிடைத்த தகவல்கள் யாவும் பொய்யானவை" என்று கூறும் ஒரு வாசகரின் கடிதத்தைப் பிரசுரித்திருந்தோம். அக்கடிதத்தில் கூறியவை யாவும் தவருனவை, திருமலை நகரசபைத் தலைவரிடம் எழுத்து விற்றுப் பிழைக்கும் ஒருவரின் போலிப் பெயர் சூடிய கடிதமே அது என்றும், அம்மானின் தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும் எமக்கு பல கடிதங்கள் வந்து குவிந்துள்ளன. (இன்னும் வருமோ என்று பயமாகவிருக்கிறது).

திருமலை நகரசபையின் ஏழாம் வட்டார உறுப்பினர் திரு. இ. சோமசுந்தரம், கீழ்க்கண்ட கடிதத்தை அனுப்பியுள்ளார். அவர் பிரசுரித்த துண்டுப் பிரசுரம் ஒன்றில், நகரசபையில் நிகழ்ந்த பல ஊழல்களை விபர்த்துள்ளார். தனக்குச் சாதகமான ஒரு சிலரை தம்வசப் படுத்திக் கொண்டு தமிழ் பேசும் இனத்துக்கும், தொழிலாளவர்க்கத்துக்கும் இடுக்கண் விளைவிப்பதாக நகர சபைத் தலைவரைப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளார். உப தலைவர் நியமனத்திலும், செயலாளர் நியமனத்திலும், கேவலமான ஊழல்கள் மலிந்துள்ளதாகவும்; இவற்றையிட்டு சபையில் கேள்விகள் கேட்க முனைந்த தம்மை பொலிசாரின் உதவியுடன் வெளியேற்றியதாகவும் கூறப்பட்டுள்ளது. நகரசபையில் தலைவருக்கு எதிராகவிருப்பதற்குப் பழிக்குப் பழி வாங்கும் நோக்குடன் தாம் அங்கம் வகிக்கும் ஏழாம் வட்டாரம் பல்துறைகளிலும் ஒதுக்கப்படுவதாகவும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் காணப்படுகிறது.

பொதுமக்களை நகரசபைக் கூட்டங்களுக்கு வந்து பார்த்து உண்மையை அறிந்துகொள்ளும்படியும் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

திரு. சோமசுந்தரத்தின் கடிதம் பின்வருமாறு:—

"திருமலை நகரசபையின் ஊழல்களை அவ்வப்போது துண்டுப் பிரசுர மூலமாக நாம் வெளியிட்டு வந்துள்ளோம். திருமலை நகரசபைத் தலைவர் இதுநாள் வரை மறுத்துஅறிக்கைவிடவில்லை. அத்தோடு கடந்த நகரசபையில் ஊழல் இருந்ததாகச் சொல்லப்படுவது உண்மையானால், இவர் அச் சபையில் அங்கம் வகித்த வேளைகளில் அத்தவறுகளைச் சுட்டிக் காட்டாதது ஏன்? என்ற கேள்வியை நாம் கேட்க விரும்புகிறோம்.

"முன்னுள் ஊழல்கள் தலைதூக்குவதாக" சொல்லப்படுகிறதே அது யார் காலத்துத் தவறுகள்? 1952-ம் ஆண்டு தொடக்கம் தமிழரசுக் கட்சிக்காகவும் நகரின் நலனுக்காகவும், பாடுபட்டு தனது சொத்து சுகம் யாவற்றையும் இழந்து திருமலையை விட்டுப் போன மாணிக்கராசா காலத்திலா; அல்லது மூதூர் பாராளுமன்ற முதல் அங்கத்தவரும் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான காலஞ் சென்ற திரு. ஏகாம்பரம் காலத்திலா? அதைச் சொல்லாமல் ஊழல் தலைதூக்குவதாகச் சொல்லப்படுகிறதே! உண்மையினை திருமலை மக்கள் நன்கு அறிவார்கள்.

அவரது பதவியை இராஜினுமாச் செய்து விட்டு அவரது கொள்கைகளை முன்வைத்து நான் அங்கம் வகிக்கும் ஏழாம் வட்டாரத்தில் போட்டிபோட வருமாறு நான் தலைவருக்கு பகிரங்க சவால் விடுத்தேன்: தலைவர் தனது கொள்கை முடை நாற்றம் வெளியாகி விடும் என்ற அச்சத்தில் பதவியை விடாமல் ஆலிங்கனம் செய்வதையும் மக்கள் அறிவார்கள்.

"சிறிமாவோ புரம்" என்ற பெயருடன் ஒரு புதிய நகரம் திருமலையில் உண்டாக்கப்பட்டதே? அங்கத்தவருக்குத் தெரியுமா? தலைவருக்குத்தான் தெரியுமா? தலைவர் விடுமுறையில் கதிர்காமம் சென்றிருந்த போது உப தலைவர் திரு. சோமபாலா தலைவராகக் கடமையாற்றிய போது இது நடந்தது. அவர் தமிழ் சூழலில் வாழ்கிருர் என்று சொல்வது பொருந்துமா? நாம் சிங்கள வெறியுள்ள எந்த மனிதனையும் எதிர்க்க வேண்டும். சோமபாலாவை உப தலைவராக வைத்துப் பெரிய தியாகம் செய்வதாகச் சொல்லப்படுகிறதே, அப்படியானுல் தமிழ் மொழிபற்றிய ஒவ்வொரு தீர்மானத்தையும் அவர் ஏன் எதிர்க்க வேண்டும்?

செயலாளர் சேரசிங்க திருமலைக்கு அனுப்பப்பட்ட காரணம், திருமலை நகரசபையில் தனித் தமிழில் நிர்வாகம் நடை பெருமல் தடுக்கவும் சிங்களப் பொது மக்களுக்கு பட்டும் நன்மைகள் பல செய்யவும் தான் என்பதை நான் பகிரங்கமாகச் சொல்கிறேன்.

தமிழ் பேசத் தெரிந்த செயலாளர் வேண்டுமென்று விண்ணப்பித்தாராம். ஏன் இந்தப் பொய்? செயலாளர் சம்பந்தமான விவாதத்தில் தலைவர் அளித்த பதில், கூட்ட நிகழ்ச்சியில் இடம் பெற்றுள்ளது. அந்தப் பதில் தலைவரது அந்தரங்கக் கருத்தை வெளிக்காட்டுகிறது.

---

# சந்தித்து வந்தவை

**காலைகண்டன்**

### துரோகத்தின் முதல்வர்

அரசாங்க இலாகாக்களில் சிங்கள ஊழியர்களில் பெரும்பாலோரர் அலுவல்களைச் சிங்களத்தில் நடத்துவதில் அக்கறை காட்டுவதில்லை. அதில் அவர்களுக்கு அதிக ஆர்வமும் கிடையாது.

ஆனல் மேசையிலிருந்து வீசப்படும் எலும்புத் துண்டுகளுக்கு ஆசைப்பட்ட விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில தமிழ் ஊழியர்கள் சிங்களத்தில் கருமமாற்றவும், சிங்கள மொழியை வளர்க்கவும், சிங்கள இலக்கியத்தை அபிவிருத்தி செய்யவும் வரிந்து கட்டிக்கொண்டு முன்வந்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

அரசாங்கக் கணக்காளர் பகுதியிலே கடமையாற்றும் [illegible] பேர்வழிகளில் ஒருவர் என்று ஒரு செய்தி கூறுகிறது. சிங்கள அதிகாரிகளால் வாசித்துப் புரிந்துகொள்ள முடியாத சிங்களக் கடிதங்களையும் கூட உடனுக்குடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதோடு, ஆங்கிலக் கடிதங்களையும் சிங்களத்துக்கு மொழிபெயர்ப்பதில் பெரிதும் பாடுபட்டு உழைக்கிருராம் இந்த நபர்.

துரோகத்தின் உச்சக் கட்டம் எதுவெனில், அவர் தனது சிங்கள அறிவை உபயோகிப்பதை அரசாங்க அலுவல்களோடு நிறுத்திக்கொள்ளாமல் சிங்கள மொழி வளர்ச்சிக்காகவும், சிங்கள இலக்கிய அபிவிருத்திக்காகவும் உழைக்க ஆரம்பித்திருப்பது தான்.

சிங்கள இலக்கிய சேவையில் இறங்கிய இந்த ஆசாமி சென்ற மாதம் 5-ந் திகதி தனது இலாகாவில் கடமையாற்றும் சிங்களவர்களைக் கூட்டி ஒரு சிங்கள இலக்கிய சங்கம் அமைத்தாராம். அத்தோடு அவர் விடவில்லை. அந்தச் சங்கத்தின் கூட்டுக்காரியதரிசி பதவிக்கும் தன்னையே நியமித்துக் கொண்டாராம். என்னே அவரது சிங்கள ஆர்வம்! சிங்கள இலக்கிய சேவை!

அவர் தனது சிங்களக் காதலை, தன் மகனுக்குப் பெயரிடுவதின் மூலமும் காட்டிக் கொண்டிருப்பதாகப் பறைசாற்றுகிருர். தமிழரசுக் கட்சி சிங்கள சிறி—எதிர்ப்புப் போராட்டம் நடத்திய சமயத்திலே அவருக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு ஸ்ரீ காந்தன் என்று பெயரிட்டிருக்கிருராம். தமிழரின் சிங்கள சிறி எதிர்ப்புப்போராட்டத்தைக் கண்டிப்பதற்காகவே தனது மகனுக்கு அந்தப்பெயரைச் சூட்டியதாகச் சிங்களவர்களிடம் கூறித் திரிகிருராம்.

ஒரு தமிழன் தாய் மொழியை அடியோடு புறக்கணித்து, அத்தோடு நில்லாமல் தாய் மொழியை நசுக்கி வரும் மற்ருெரு மொழிக்குக் கட்டியம் கூறிச் சேவை செய்வதென்ருல் அதனை மன்னிக்க முடியாத துரோகமென்று சொல்லுவதா? வடிகட்டிய சுய நலம் என்று கூறுவதா?

இனம் நாசமானுலும், தாய் மொழி குட்டிச்சுவரானுலும் கும்பிக்கு கூழ் வேண்டுமென்பதற்காக இலாகா அலுவல்களை மட்டும் சிங்களத்தில் செய்கிறேன் என்று திருராஜசிங்கம் தனது இழி செயலுக்குக் காரணம் கூறுவராயின் அவர்மீது ஓரளவு அனுதாபம் கொள்ளலாம். ஆனல் அவர் சிங்களத்தையே தூக்கித் தலைமீது வைத்து ஆட ஆரம்பித்துவிட்டாரே! இது யாரை ஏமாற்ற? யாருக்குக் காக்காய் பிடிக்க? இவ்வாறு தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் சுய நலப் புலிகளைக் கண்டுபிடித்து சந்தியில் நிறுத்த அம்மான் என்றுமே தயங்கமாட்டார்.

### தான்பெற்ற இன்பம்...

யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமையாற்றும் ஒரு குமாஸ்தா—அவர் ஒரு திருக்குட்டை ராசா—சமீபத்தில் ஒரு வழக்குக்குச் சாட்சி சொல்லுவதற்காக, இரத்தினபுரி சென்றிருந்தார். அப்பொழுது அங்கு கடமையாற்றும் தமிழ் ஊழியர்களிடம் தமது விரப் பிரதாபங்களை யிட்டுப் பிரஸ்தாபித்துள்ளாராம். தான் சிங்களத்தில் வல்லுனராக விருப்பதால் சொந்த இடமான யாழ்ப்பாணத்தில் தொழில் புரிய வசதி கிடைத்துள்ளது என்றும், ஏனையோரும் (யாழ்ப்பாணத்துக்கு வெளியே கடமை பார்ப்போரும்) தன்னைப் பின்பற்றினுல் விரைவில் சொந்த ஊர்களில் கடமையாற்ற முடியும் என்றும் தம்பட்டம் அடித்தாராம்.

இப்படித் திருவாய் மலர்ந்தருளிய திருக்குட்டைராசா அவர்களின் லீலா விநோதங்கள்—தகிடு தத்தங்கள்—பல நமது அம்மானிடம் சிக்கியுள்ளன. இரத்தினபுரியிலும் அநுராதபுரியிலும் அவர் கடமைபார்க்கும்போது செய்த திருகுதாளங்கள் யாவும் தெரியவந்துள்ளன. ஆகவே அவை விரைவில் சந்திக்கு வரலாம். கொஞ்சம் இனத்துரோகச் செய்கைகளைக் குறைத்துக்கொள்ளுவது நன்று.

### பட்டியல் நீளுகிறது

தங்களுக்குத் தெரிந்த அரைகுறைச் சிங்களத்தின் மூலம், அதிகாரிகளைக் காக்காய் பிடித்து தமது அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முனையும் பலருடைய நாமாவளிகள் அம்மானுக்குவந்து சேர்ந்துள்ளன.

கொழும்பு பொலிஸ் தலைமை நிலையத்தில் கடமை பார்க்கும் ஒரு 'யெமன்' தேசிய மொழியில் இடாப்பில் கையெழுத்திடுகின்ருராம். அதே காரியாலயத்தில் மேலும் பதிெருரு 'தேசியப் புலிகள்' சிங்கள வகுப்புக்களில் நாட்டம் செலுத்தி வருகின்றனராம். அவர்களுடைய பட்டியல் அம்மானிடம் இருக்கிறது. அவசியம் ஏற்படின் வெளியிடப்படலாம்.

சிங்களம் படிப்பதன்மூலம் உத்தியோகம் நிலைபெறவோ அல்லது உயர்வு பெறவோ விரும்பும் "தேசியப் பித்தர்"களுக்கு ஒரு எடுத்துக்காட்டு:

### தலைமை தபால் நிலையத்தில்...

உத்தியோக உயர்வுக்காக சிங்களத்தை எவ்வளவு கற்ருலும் எள்ளளவு பயனும் கிடைக்கப் போவதில்லை என்பது கண் கூடு. தலைமைத் தபால் நிலைய அதிபராக இதுகாலவரை கடமையாற்றியவர் ஒரு தமிழர். அவர் இறந்ததும், அப் பதவி வகிக்க அருகதையுள்ள தமிழ் ஊழியர்கள் வரிசைக் கிரமமாக உள்ளனர். சிங்களத்தில் போதிய தேர்ச்சியும் சிலருக்குண்டு. ஆனல், அந்த இலாகாவில் தொழில் புரியாத ஒருவரை இப்பொழுது வலிந்து இழுத்துக்கொண்டு வந்து தலைமை தபால் அதிபராக நியமித்துள்ளனர். வேருெரு பகுதியில் ஊழியம் செய்த திரு. தயரத்ன தான் இன்று அப் பதவிக்கு நியமனம் பெற்றிருக்கிருர்.

---

### முகம்மதலிக்கு வரவேற்பு

மூதூர் முதலாம் எம். பி. ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி, கடந்த இரண்டு வாரங்களாக தம்பலகாமம், ஆலங்கேணி, கிணுக்குடா, கந்தளாய் வட்டுக்காச்சி, மூதூர், மல்லிகைத் தீவு, சம்பூர், கூனித் தீவு, கட்டை பறிச்சான், சேனையூர், அக்கரைச் சேனை, பட்டித் திடல் ஆகிய கிராமங்களுக்குச் சென்ருர்.

சென்றவிடமெல்லாம் ஜனுப் முகம்மதலி அவர்களுக்குப் பல வரவேற்புபசாரங்கள் நடந்தேறின. அலி அவர்களை ஒவ்வொரு கிராமத்திலும் ஊர்வலமாக இட்டுச் சென்று மலர் மாலை அணிவித்துகெளரவித்தனர்.

வரவேற்பின்போது சாதி, மத வேறுபாடின்றி தன்னுல் இயன்ற சேவைகளை நேர்மையான முறையில் செய்வேன் என்று அவர் உறுதி கூறினுர்.


மனங்கவர் எழிலிற்கும்!!
மட்டற்ற சேவைக்கும்!!
மெளலானு
அச்சடி சீத்தைகள்!!!



மனங்கவர் மங்காத பல நிறங்கள்!
மகிழ்விக்கும் மனோரம்மிய நவீன டிசைன்கள்!
நீடித்த சேவை அனைத்தும் கொண்ட மெளலானு அச்சடி சீத்தைகளை அணிந்து உயர்ச்சி மிகு கவர்ச்சி பெறுங்கள்!!
மெளலானு (சிலோன்) லிமிட்.
கொழும்பு, மருதானை, கண்டி.
—MYLADS/MC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிவழி சமஷ்டி எங்குமே இல்லையாம்!

## கவிதைப் பூங்கா

## நான் வென்றேன்!

கா. சி. ஆனந்தன்

காஎல் மரவாழை கண்டிருக்கும்...! இருளுக்குள்
நாண முகத்தை நகைபழுசி, நீ முயன்று
பொத்தி மறைத்தாயே, போடி, எனக்கென்ன
வித்தை தெரியாதா? விரலென்ற பூக்கள்
முகப்பூவை மூட முடியுமா? ஏடி,
நகப்பூவைக் கொண்டு நயனப்பூ மூடிநீ
என்னதான் கண்டாய்? எழில்மகளிர் நாணுவது
சின்ன வயதில் சிறப்புத்தான் என்றாலும்
அத்தானின் முன்னே அடம் பிடித்தாய்... வென்றாயா?
பத்து விரலும் பளிங்கு முகத்திற்கு
வேலி அமைத்த விதம்தெரியும்! அப்போது
கோல மயிலே குனிந்தாய்; முடிவென்ன?
தப்பியா விட்டாய்? தடைபோட்டாய் என்னபயன்?
செப்படி பெண்ணே! சிறுவேலி போராடி
நின்றாய்... நெளிந்தாய்... நெருங்கி வரமறுத்தாய்!
என்றாலும் என்ன? இருளிற், செடிஅருகில்,
நீள மதிலுக்கு நேரே ஒருநொடியில்
தோளோடு சாய்ந்தாய்..., தொடவிட்டாய்! பூம்புதரில்
இச்சென்ற ஓசை எழுந்தவுடன் நாணத்தைப்
'புச்'சென்று விட்டாய்! புரிந்துகொண்டாய் அல்லவா?
ஆணென்ற ஒன்றை அறியா இளம்பெண்ணே,
வீணன்றோ? வெட்கம் விழலன்றோ? மண்ணில்
முகம்மறைத்தால் மட்டும் முடிந்ததா வேலை?
அகம்மறைக்க ஆர்வருவார்? அதனாலே நான்வென்றேன்!

## உருவாக்கு தமிழரசு....

சுபத்திரா தங்கவடிவேல்

கால் முட்டக் கால்சட்டை அணிந்துவிட்டால்
கக்குவது இங்கிலிசுத் தான்தான் தம்பி
கால் மாக்சின் பெயர்மட்டும் தெரிந்துவிட்டால்
கதைப்பதுவோ பசிபற்றி வேறொன்றில்லை,
ஆள் மட்டும் தமிழன்தான் ஆனால்ஒன்று
ஆள்பவர்க்குப் பந்தந்தான் பிடிப்பார் இன்று
கேள் தம்பி 'குறள்'ஒன்று தெரியாதென்பார்
கேவலத்திற் கேவலந்தான் இந்தச் சாதி!

வால் வெட்டிச் சாம்பல்தனைப் பூசிவிட்ட
வாலியென வஞ்சியர்கள் தெருவில் சுற்ற
பால் அற்ற பாலகர்கள், ஆயா ஊட்டும்
பால் புட்டிப் பாலுடனே, சிங்களத்தை
தாலாட்டத் தமிழ் மறக்கும் தமிழன்பிள்ளை
தாலாட்டுக் கேட்டறியா அவலம் தன்னை
'ஏன்?'என்று கேட்பதற்கு ஆளே இல்லை
என் செய்வோம்? தாய்மைக்கு மதிப்பேயில்லை.

உலகத்தின் முதல்குழந்தை தமிழன் என்பார்
ஊரில்லை, கொடியில்லை, ஆட்சியில்லை.
மலந்தூக்கிப் பிழைக்கின்ற பிழைப்புமிங்கு
மாற்றான்கை மாறுதற்குச் சட்டமுண்டு
தமிழா!உன் எதிர்காலம் தன்னைச் சற்று
எண்ணிப்பார் ஏழைநீ பணமா உண்டு?
உமிகுத்த எண்ணாதே; உனக்கு இங்கு
உருவாக்கு தமிழரசு! உறுதி கொண்டு.

## கூசாமல் பொய் சொல்லுகிறார் கொம்யூனிஸ்ட் எம். பி.

## தமிழரசுக் கட்சி மீது பாய்ச்சல்

## இந்திய அமைச்சரைத் தெரியாதென மழுப்பல்

**"சமஷ்டிக் கட்சி என்று அழிகிறதோ அன்றுதான் தமிழர்களுக்கு விமோசனம். சோவியத் யூனியனிலும், கனடா, சுவிட்சர்லாந்து, யுகோஸ்லேவியா ஆகிய நாடுகளிலும் எல்லாம் மொழி வழி சமஷ்டி கிடையாது. அங்கு மாகாண சுயாட்சிகளும் தேசிய இராச்சிய அமைப்புகளுமே உள்ளன. மொழி வழி சமஷ்டி உலகில் எங்கும் கிடையாது. ஹுமாயூன் கபீர் என்றால் யார் என்று எனக்குத் தெரியாது.**

**"இந்தியாவிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் திரைப் படங்கள் மூலமும், பத்திரிகைகள், புத்தகங்கள், வெளியீடுகள் மூலமும், தம் கொள்கையை இலங்கைத் தமிழ் மக்களிடையே பரப்புகின்றது. இத்திங்கு பரவாதிருக்க நாம உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்." இவ்வாறு இலங்கை பொது உடமைக் கட்சியின் பொதுச் செயலாளரும், கொழும்பு மத்தி இரண்டாவது பிரதிநிதியுமான திரு. பீட்டர் கெனமன இலங்கைப் பல்கலைக் கழக சோசலிஸ சங்கத்தின் சார்பில் பேசுகையில் குறிப்பிட்டார்.**

**புதிய வரவு செலவுத் திட்டம், ஐக்கிய தேசியக் கட்சியின் பிற்போக்குக் கொள்கைகள், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போக்கு ஆகியவற்றைக் கண்டித்துப் பேசி, தமது உரையை முடித்தானதும் மாணவர்களால் கேள்விகள் கேட்கப்பட்டன. பதிலிறுக்க முடியாது மழுப்பிவிட்டார் திரு. கெனமன்.**

சிங்கள மாணவர் ஒருவர் கீழ்க்காணும் கேள்வியை முதலில் கேட்டார்:—

கேள்வி: நீங்கள் தென் இலங்கையைப் பற்றித்தானே முழு நேரமும் பேசினீர்கள்? வட கிழக்கு இலங்கையில் உள்ள பிரிவினையை விரும்பும், வகுப்புவாத வெறி பிடித்த சமஷ்டிக் கட்சியை ஒழிப்பது பற்றி ஏன் ஒன்றும் கூறவில்லை?

திரு. கெனமன்: நாங்கள் ஒரு சிலரைப்போல் தெற்கே இருந்து கொண்டு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சமஷ்டிக் கட்சியை எதிர்த்துப் போராடுவதில்லை. வடக்கிலேயே நாங்கள் சமஷ்டிக் கட்சியை எதிர்க்கிறோம். வெற்றியும் கண்டிருக்கிறோம். சமஷ்டிக் கட்சி என்று அழிகிறதோ அன்று தான் தமிழருக்கு விமோசனம் கிடைக்கும். சமஷ்டிக் கட்சியை ஒழிப்பது அதைத் தடைசெய்வதால் அல்ல. தி.மு.க வைத் தடைசெய்வதால் அது ஒழிந்து விடப் போவதில்லை. சமஷ்டிக் கட்சியை ஒழிக்கவேண்டுமானால் தமிழருடைய உரிமைகளைக் கொடுக்க வேண்டும். அதற்கு நாம் கூறும் வழி பின்வருமாறு:-

### பிரதேச சுயாட்சி

சிங்களம் மட்டுமே அரசகரும மொழியாக இருக்க வேண்டும். தமிழர் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் தமிழ் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும். தமிழர் பெரும்பான்மையாக உள்ள இடங்களில் தமிழருக்குப் 'பிரதேச சுயாட்சி' கொடுக்கப்பட வேண்டும். தமிழ்ப்பகுதியிலுள்ள கிராம நீதிமன்றங்களும், மாவட்ட நீதிமன்றங்களும் தமிழில் இயங்க வேண்டும். ஆனால் தமிழ்ப் பகுதியிலுள்ள உயர் நீதிமன்றம் சிங்களத்தில் தான் கருமமாற்ற வேண்டும். இச் சலுகைகளை அளித்தால் பிரச்சினை தீர்ந்து விடும்.

இவ்வேளையில் தமிழ் மாணவர் ஒருவர் ஒரு கேள்வியைக் கேட்டார். அது பின்வருமாறு:-

நீங்கள் கூறிய 'பிரதேச சுயாட்சி'க்கும தமிழரசுக் கட்சி கேட்கும் சமஷ்டி அரசியலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? தி. மு. க. வைத் தடைசெய்வது ஜனநாயகத்துக்கு முரணானது என்பதை ஒத்துக் கொள்வீர்களா?

### தி. மு. க.

திரு. கெனமன்: இரண்டா [illegible] பதில் கூறுகிறேன். தி. மு. க. வைத் தடைசெய்தது ஜனநாயகத்துக்கு முரணானது தான். ஆனால் இலங்கையிலுள்ள தி. மு. கழகங்களால் அபாயம் ஒன்றுமில்லை என்பது எனது அபிப்பிராயம். இந்தியாவிலுள்ள தி. மு. க. திரைப்படங்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் தம் கொள்கைகளை இலங்கைத் தமிழர்களிடையே பரப்புகின்றனர். இவற்றுக்கு எதிராகத்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக முதலாவது கேள்வியை எடுப்போம். இலங்கையிலுள்ள எல்லாக் கட்சிகளுள்ளும் சமஷ்டிக் கட்சிதான் மிகவும் பழமை தழுவும் கட்சி. இக்கட்சி தெற்காசிய மசோதா போன்ற முற்போக்கு மசோதாக்களை எதிர்த்தது. திருமலை கடற்படைத் தளத்தை பிரிட்டிஷாரிடம் இருந்து பெறுவதை எதிர்த்தது. மக்கள் வங்கியை எதிர்க்கிறது. இக்கட்சி கூறும் சமஷ்டி ஆட்சியில் இரு இராச்சியங்கள் இருக்கும். அவை ஒரு சில விடயங்களைத் தவிர மற்றவைகளில் சுயேச்சையாகவே இயங்கும். ஆனால் நாம் கூறும் 'பிரதேச சுயாட்சி' ஓர் ஒற்றையாட்சித் திட்டத்தினுள் அடங்கிய சுயாட்சி. அதுதான் போகட்டும். சமஷ்டி ஆட்சி ஏற்படின் அவ்வமைப்பினுள் எத்தனை இராச்சியங்கள் இருக்கும் என்பது பற்றி அபிப்பிராய பேதம் இருக்கிறது.

பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்துக்குப் பின் சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அழகக்கோன் மன்னாருக்கு ஒரு தனிப பிரதேசசபைவேண்டுமென்றார். மட்டக்களப்புச் சமஷ்டிவாதிகள் தங்களுக்கு ஒரு தனிப் பிரதேச சபை வேண்டும் என்றனர் இன்று கூட மட்டக்களப்புத் தமிழருக்கும் யாழ்ப்பாணத் தமிழருக்கும் இடையில் வேற்றுமை இருக்கிறது. இந்தக் கோலத்தில்தானா அவர்கள் சமஷ்டி ஆட்சி அமைக்கப் போகிறார்கள்? சமஷ்டி ஆட்சியால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. நிறத்துவேஷமுள்ள அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் தென் ஆபிரிக்கக் குடியரசிலும் சமஷ்டி ஆட்சியுள்ளதென்பதை நாம் மறக்கக் கூடாது.

நேரம் ஆகிவிட்டது. நான் 6-30க்கு இன்னுமொரு கூட்டத்துக்குப் போகவேண்டும். ஆகவே இத்துடன் நிறுத்த விரும்புகிறேன். (அப்பொழுது நேரம் 6-25).

தமிழ் மாணவர்: ஒரு நிமிட அவகாசம் அளியுங்கள். நீங்கள் கூறியதில் தவறு இருக்

(9-ம் பக்கம் பார்க்க)


### வேல் தைலம்
### மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S மனுவேல் நாடார் அன் கோ.,**
**34, செட்டியார் தெரு,**
கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலஞ்சென்ற பிரதமரின் கொள்கையை பின்பற்றும் அரசாங்கமே!

## சமஷ்டி பற்றி அந்த அரசியல் ஞானி கூறியதென்ன தெரியுமா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கைகளைக் காலஞ்சென்ற பிரதமர் அவர்களும் அந்நேரத்தில் நிதியமைச்சராய் இருந்தவரும் திறைசேரியின் சுற்று நிருபங்கள் மூலம் வெளியிட்டிருந்தார்கள். 1956-ம் ஆண்டுக்கு முன் அரசாங்க சேவையில் சேர்ந்தவர்களுக்கு எந்த வகையான கஷ்டங்களும் ஏற்படாமல் அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுமென்று அவர்கள் கூறினர்கள். இப்போது நடப்பது என்ன? காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கொள்கையைக் கடைப்பிடித்து நடக்கின்றோம் என்று கூறும் இந்த அரசாங்கம் "1963 ஆண்டுக்கிடையே நீங்கள் சிங்களத்தில் தேர்ச்சியடையாவிட்டால் உங்களை அரசாங்க சேவையைவிட்டே விரட்டி விடுவோம்" என்று கூறுகின்றது. இப்பொழுது கூட, முதலாவது பரீட்சையில் சித்தியடையாத அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு நிற்பாட்டப்பட்டு அதனுல் அவர்கள் சொல்லொணுக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்கள்.

### ஏன் எதிர்த்தோம்?

அரசாங்க ஊழியர்கள் மாத்திரம் தாம் இவ்வித நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருக்கின்றார்கள் என்பதல்ல. 1960-ம் ஆண்டிலே பாடசாலைகளை அரசாங்கம் கையேற்கச் சட்டம் கொண்டுவரப்பட்ட பொழுது நாம் அதை எதிர்த்தோம். எங்களைப் பிற்போக்குவாதிகள் என்று அப்போது சொன்னார்கள் எங்கள் முற்போக்கு நண்பர்கள் சிலர். நாம் அந்நேரத்தில் கூறினோம், கொள்கையளவில் அரசாங்கம் பாடசாலைகளை நிருவகிப்பதையும் கல்விக்குப் பொறுப்பாய் இருப்பதையும் நாம் எதிர்க்கவில்லை; ஆனல் தனிச் சிங்களம் வகுப்பு வாத அரசாங்கம் இந்நாட்டின் கல்வியை மேற்கொள்ளுமாயிருந்தால் கல்வித் துறையில் கூடத் தமிழ் பேசும் மக்களுக்கு இடையூறுகள் ஏற்படும்; அனுபவமில்லாதவர்களால் தான் நாம் இதை எதிர்க்கின்றோம் என்று.

தமிழ் பேசும் மக்களின் மத்தியிலிருந்து சில ஆசிரியர்கள், சில பிரமுகர்கள் எங்கள் பேச்சை அப்பொழுது நம்பவில்லை. நாம் செய்தது தவறு என்று அப்போது அவர்கள் சொன்னர்கள். இப்பொழுது நடப்பதென்ன? உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளில் ஆசிரியர்களாய் இருந்தவர்கள் சிங்களத்திலே எந்த வகையான காரியமும் நடத்த வேண்டிய தேவையற்றவர்களாய் இருந்தார்கள். சிங்களத்தைத் தமது வாழ்நாளில் என்றுவது உபயோகிக்கத் தேவையற்றவர்கள் அவர்கள். அவர்கட்கெல்லாம் நீங்கள் சிங்களத்தில் சித்தியடையாவிட்டால் சம்பள உயர்வு கிடையாது என்று சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. எத்தனையோ ஆசிரியர்களின் சம்பள உயர்வு நிற்பாட்டப்பட்டிருக்கின்றது.

ஆங்கிலம் இந்நாட்டின் ஆட்சி மொழியாய் இருந்த காலத்திலும் சிங்கள ஆசிரியர்களோ, தமிழ் ஆசிரியர்களோ, ஆங்கிலத்தில் சித்தியடைய வேண்டுமென்ற சட்டம் இருக்கவில்லை. ஆங்கிலத்தில் சித்தபெற விட்டால் சம்பள உயர்வு இல்லை என்ற விதி இருக்கவில்லை. இப்பொழுதோவெனில், ஐம்பது வயதுடைந்த ஒரு தமிழ் ஆசிரியர் தன்னுடைய வேலையைவிட்டு இளைப்பாறுகின்ற நேரத்தில், அந்தக் கடைசி காலத்தில் உயர்ந்த சம்பளம் பெற்று தன் குடும்பத்தைச் சிறப்பாக நடத்த எண்ணிக் கொண்டிருக்கையில், இந்த அரசாங்கம் "நீ சிங்களத்தில் சித்திபெற விட்டால் சம்பள உயர்வு இல்லை" என்று கூறுமானல் இதைவிடப் பெரிய அநியாயம் என்ன இருக்கின்றது?

டொக்டர் நாகநாதன்: வெட்கம், வெட்கம்!

அரசாங்கத்தை நடத்துபவர் யார்?

திரு. அமிர்தலிங்கம்: அன்று ஆங்கில அரசாங்க மொழியாக இருந்த காலத்தில் தமிழ் மூலமும் சிங்களம் மூலமும் நடத்தப்பட்ட பரீட்சைகளில் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆங்கிலம் கற்க வேண்டுமென்ற நிபந்தனையிருக்கவில்லை. எத்தனையோ வகையான உத்தியோகத்தர்கட்கு—யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பில், வவுனியாவில், மன்னரில், ஒரு கிராமச் சங்கத்தில் வேலை பார்க்கும் ஒரு கிளார்க்குக்கு, ஒரு தமிழ் உத்தியோகத்தருக்கு, ஒரு இஸ்லாமிய உத்தியோகத்தருக்கு எதற்குச் சிங்களம்? அங்கு நூற்றுக்கு நூறு வீதம் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்றபோது அவர்களும் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டுமென்று அரசாங்கம் நிர்ப்பந்தித்தால் அதை நியாயமென்று கூற முடியுமா? இதைக் கேட்டால் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் ஆவி அந்தரத்திலிருந்து கொண்டு பதைக்கும். இவ்விதம் செய்யவேண்டாமென்று தம் அருமை பத்தினிக்குக் கூறத் துடிக்கும். ஆனல் அவரைப் பொம்மையாக வைத்துக் கொண்டு இதைச் செய்பவர்கள் வேறு இருக்கின்றார்கள். அதைச் செய்வது இந்த அரசாங்கம் என்று கூடச் சொல்ல முடியாத நிலையிலிருக்கின்றது. ஏனெனில் இந்த அரசாங்கத்துக்கும் மேலான வெளிமடைப் பிரதிநிதி போன்றவர்கள் தாம் இருக்கின்றார்கள். அவர்கள் இன்று ஒரு விடயத்தைக் கூறினல் அதை நாளையே செய்ய இந்த அரசாங்கம் காத்திருக்கின்றது. இவ்விதமான அக்கிரம நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில இந்த அரசாங்கத்தை நடத்துவது—தமிழ் பேசும் மக்களுக்கெதிராக அரசாங்கத்தின் நிருவாகத்தை நடத்துவது—அரசாங்கமா, அல்லது வெளிமடைப் பிரதிநிதி போன்றவர்களா எனக் கேட்க விரும்புகின்றேன். இப்பொழுது இந்த அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்கின்றேன். நீங்கள் கொண்டு நடத்துவது காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் கொள்கையா? அல்லது வெளிமடைப் பிரதிநிதி போன்றவர்களின் கொள்கையா?

1926-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி "Ceylon Morning Leader" என்னும் பத்திரிகையில் காலஞ்சென்ற பிரதமர் என்ன கூறினர்? ஆங்கிலம் வாசிக்கத் தெரியாதவர்கள் சிங்களத்தில் மொழி பெயர்த்து, அதை வாசித்துப் பார்க்கலாம்.

### 1926-ம் ஆண்டில்...!

1926-ம் ஆண்டு—அதாவது நான் பிறக்கமுன்—காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் எழுதிய கட்டுரையை நான் வாசிக்கின்றேன்.

The minorities, Mr. Bandaranaike said, looked with mistrust at one another. It was wrong to think that the differences were not fundamental. A hundred years ago there were no such differences. They did not appear because the Englishman sat on the heads of the Tamils, the Low Country Sinhalese and the Kandyan Sinhalese. The moment they began to speak of taking the Government into their hands, then the differences that were lying dormant brought forth.

If they examined past history they would see that these communities, the Tamils, Low Country Sinhalese and the Kandyan Sinhalese have lived for over thousand years and have not shown any tendency to merge. They preserved their customs, their language and their religion. He would be a very rash man who would pin his faith on the gradual disappearance of these differences.

கௌரவ அவிசாவலைப் பிரதிநிதி (திரு. டி. பி. ஆர். குணவர்த்தன) அவர்களோ தமிழ் பேசும் மக்களை சிங்கள இனம் விழுங்கி விடுவதில் தீர்த்து விடலாம் என்று கூறினர். ஆனல் அரசியல் ஞானி, தீர்க்கதரிசியான காலஞ்சென்ற பிரதமர் என்ன கூறினர்?

He would be a very rash man who would pin his faith on the gradual disappearances of these differences.

என்று குறிப்பிட்டார். தொடர்ந்து அவர் கூறினர்:

In a federal government each federal unit had complete powers over themselves, yet they united and had one or two assemblies to discuss matters affecting the whole country. That was the form of Government in the U. S. A. All self-governing dominions like Canada, Australia and South Africa had the same system. Switzerland afforded a better example for Ceylon.

நான் எனது பேச்சில் சுவிஸ் தேச அரசியல் முறை பற்றிக் குறிப்பிட்டேன. காலஞ்சென்ற பிரதமர் அன்று கூறிய கொள்கையும் அது தான். 1926-ம் ஆண்டிலேயே சுவிஸ் நாட்டு அரசியல் அமைப்பு முறையே இலங்கைக்கும் முன்மாதிரி என்று அவர் அப்போது கூறினர்.

It was a small country but three races lived there, the French, Germans and Italians. Yet Switzerland was a country where the federal form of government was very successful. Every canton managed its own affairs but questions of foreign affairs, commerce, defence, etc., about which differences and controversies would be at a minimum were dealt with by the federal assembly.

In Ceylon each province should have complete autonomy. There should be one or two assemblies to deal with the special revenues of the Island.

Thousand and one objections could be raised against this system but when objections were dissipated some form of federal government would be the only solution.

### சிந்தித்துப் பாருங்கள்!

காலஞ்சென்ற பிரதமர் அவர்கள் குறிப்பிட்டதை சிந்தித்துப் பாருங்கள் என்று அரசாங்கக் கட்சியினரைக் (13-ம் பக்கம் பார்க்க)

## உரும்பராய் வாலிப முன்னணிக் கூட்டம்

### 'பொது ஸ்தாபனங்களில் அரசியல் புகுத்தக்கூடாது'

"நாம் பொது நோக்கிற்காக செய்யும் எந்த ஒரு காரியத்திலும் போட்டி பூசல்கள் இருத்தல் கூடாது. அதுபோலவே நமது பொது ஸ்தாபனங்களில் அரசியல் புகுவதனுல், கொள்கை அடிப்படையில் கோஷ்டிகள் பிரிந்து, நல்லதைச் செய்தால் என்ன கெட்டதைச் செய்தால் என்ன கோஷ்டிக்குக் கோஷ்டி விட்டுக்கொடாது போட்டி வளர்ந்து ஸ்தாபனம் சீர்குலைந்து போகிறது. எனவே பொது ஸ்தாபனம் திறம்பட இயங்க வேண்டுமேயானல் இவ் ஸ்தாபனங்களுள் அரசியல் புகுத்தப்படக் கூடாது" இவ்வாறு உரும்பராய் வாலிப முன்னணிக் கூட்டத்தில் யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் உதவிச் செயலாளர் திரு. சி. சண்முகலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:—

"இலங்கையிலே முதல்தரமான ஸ்தாபனமாக விளங்கும் யாழ் மாவட்ட சனசமூகம் இவ்வளவு தூரம் சிறப்படைவதற்கு, அதன் ஆரம்பகாலம் தொட்டு இற்றைவரையும் தலைவராக இருந்து வரும் அரசவாசல் முதலியார் சி. தியாகராசா அவர்கள் எந்த ஒரு அரசியல் கட்சியையும் சாராது வயது சென்றாலும் துளரும் வாலிப உள்ளத்துடன் "பணி புரி பலனை எதிர்பாராதே" என்ற பொன்மொழியைக் கூறிச் சேவை புரிவதே முக்கிய காரணம். இவரைப் போன்று எல்லோரும் முன்வந்து சேவை புரிவார்களேயானல் பொதுசன ஸ்தாபனங்கள் சீர் பெற்று நாடு நலம் பெறும்" என்று அவர் குறிப்பிட்டார்.

வாலிப முன்னணித் தலைவர் திரு. ச. ஏகாம்பரநாதன் தலைமை வகித்தார். திருவாளர்கள் க. இராசலிங்கம், க. பாலசிங்கம், ச. பத்மநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள். பின் சங்கத்தின் செயலாளராகிய திரு. த. சண்முகநாதன் நன்றியுரை கூறினர்.

### டெய்சி இல்லம் வென்றது


மட்டக்களப்பு கார்மேல் கழக தமிழ் பாடசாலை இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. வணக்கத்துக்குரிய மேற்றிராணியார் இக்னேசியஸ் கிளென்னி அவர்கள் விளையாட்டுப் போட்டியின் பிரதான அதிதியாக அழைக்கப்பட்டிருந்தார்.

விளையாட்டுப் போட்டியில் டெய்சி இல்லம் 63 புள்ளிகளைப் பெற்று முதன்மை பெற்றது. வீரமணிகளுக்கான விருதையும், டெய்சி இல்லமே சுவீகரித்துக் கொண்டது.

பரிசுகளை மேற்றிராணியார் அவர்கள் வழங்கினர். பாலிகளின் விளையாட்டுக்கள் இம்முறை புதுமையுடன் இயங்கின—என்பது குறிப்பிடத்தக்கது. இடைவேளைகளில் நடனம் போன்ற கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

நம்பிக்கையான

நைலோன்



வலைகளுக்கும், நூல்களுக்கும்

சேகரம் அன் சன்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 613

தந்தி: சேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வளர்த்த முஸ்லிம் புலவர்கள் (6)

## எளிய தமிழில் இனிய பாடல்களை இயற்றிய அப்துல்லா புலவர்

ஈழத்து முஸ்லிம் தமிழ்ப் புலவர்களுள் யாழ்ப்பாணம் அப்துல்லா புலவரும் குறிப்பிடத் தக்கவர். 1906-ம் ஆண்டில் பிறந்த இவர் இளமையில் குர் ஆனை ஓதி முடித்து; மதக் கல்வியிலும் ஓரளவு அறிவு பெற்ற பின்னர் தமிழ் கற்பதில் கவனஞ்செலுத்தினார். யாழ்ப்பாணம் சென். பற்ரிக்ஸ் கல்லூரியில் தமிழ் கற்றுத் தேறினார். இவரது சகோதரர் ஒருவர் சாவகச்சேரியில் வியாபாரஞ் செய்த போது அப்துல்லா அங்கு சென்று அவரோடு ஐந்தாண்டுகள் தங்கியிருந்தார். அப்போது வித்வான் சா. பொன்னம்பலம் என்பவரிடத்தில் தமிழ் கற்றுத் தேறி, செய்யுளியற்றும் வன்மை பெற்றார்.

இவர் தமது இருபதாவது வயதில் கொழும்பு ஹமீதியாப் பாடசாலையில் சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். கண்ணில் நோயொன்று ஏற்பட்டதன் காரணமாக ஆசிரிய சேவையிலிருந்து விலக நேரிட்டது. பின் சாவகச்சேரி பள்ளிவாசலொன்றில் கதீபாகவும், குர்ஆன் கற்பிக்கும் ஆசிரியராகவும் பணி செய்தார். ஈற்றில் யாழ்ப்பாணம் 'மன்பஉல் உலாம்' என்ற பாடசாலையில் ஆசிரியராகக் கடமை செய்தார்.

### இறைவன் மீது பாடல்கள்

அப்துல்லா புலவர் "நல்வழிக் கவிதை", "குருபு நாயகர் பாமாலை" "திருநபிக் கவிதைகள்", "திருநபி புகழ்க்கீதம்", "காஜா முஹிதீன் நாயகர் புகழ்க் கீதம்" முதலிய நூல்களை ஆக்கியளித்தார். இவரது "நல்வழிக் கவிதை" என்ற நூல் முஸ்லிம் மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடியது. இந்நூலில் இறைவன் மீதும், வேதங்கள், நபிமார், இறுதி நாள், இறை நாட்டம் ஆகியவைகள் மீதும் நம்பிக்கை (ஈமான்) கொள்ளும் முறையை புதுமைக் கவிகளில் புனைந்திருக்கிறார்; எளிய தமிழில் இனிமை சொட்டும் பாவில் மாணவர் மாண்பு, நற் பண்புகள், இறை வணக்கம் இந்நூலில் விளக்குகிறார். இத்தகைய சில பாடல்களைக் கண்டு தெளிந்து களிப்புள்ளம் கொள்வோமாக! இறைவன் மீது நம்பிக்கை வைக்கும் முறையை பாவில் பகர்கிறார்:

"ஈமான் விபர மறிவோமே
இறைவனையே யொருவ
னுணர்வோமே
தந்தை தாயு மில்லானே
தானுய் நின்ற
வல்லோனே
இறப்பும் பிறப்பு மில்லானே
இணையுந்துணையு
மில்லானே
பக்கந் திசையு மில்லானே
பகரும் வடிவு மில்லானே"

அடுத்து அமரர்மீது நம்பிக்கை கொள்ளும் முறையும் கூறுகிறார்.

"வானோர் விபர மறிவோமே
வல்லோ னொளியால்
படைத்தானே
ஆணும் பெண்ணு மல்லாரே
அன்னை, தந்தை யில்லாரே
ஊணுங் குடிப்பு மில்லாரே
உறகநந் தாறு மில்லாரே
வானில பூவி லமர்ந்தாரே
வழுவா தேவற்
கமைந்தாரே"
தொகையை எவரு மறியாரே
தூயோன் தானே
யறிவானே"

### சிறுவர்களுக்கேற்ற எளிய பாடல்கள்

சிறுவர்களுக்கேற்ற எளிய தமிழில் மாணவா கடமைகளைப் புலவர் விளக்கும் முறை போற்றத் தக்கது. மாணவர் மாண்பைக் கூறும் சில பாடல்களை உந்திப் பார்ப்போம்;

### யூ. எல். தாவூத்

"கல்விச் சாலை செல்வோமே
கருத்தாய்ப் பாடம்
படிப்போமே
உண்மை பேசி யுணர்வோமே
உலகம் போற்ற
நடப்போமே
தந்தை சொல் தவறோமே
சான்றோர் (நுரை) மறவோமே
நாளும் நன்மை புரிவோமே
நாடு சிறக்க
முயல்வோமே"

சிறுவர்களுக்கென புலவர் பாடிய பாடல்கள் பெரியோர்க்கும் பயன் தரத்தக்கன. இதோ அனைவருக்கும் பயனல்கும் நல்வழிகளைப் புலவர் பாடலாக இசைக்கிறார்.

"எந்நாளு மிறையோனை
வணக்க வேண்டும்
இனியமொழி திருமறையை
ஓத வேண்டும்
ஈமானின் உறுதியினைப்
பூண வேண்டும்
இஸ்லாத்தின் கடமையினைப்
புரிய வேண்டும்
பெரியோரைக் கனம்பண்ணி
மதிக்க வேண்டும்
பெற்றோரின் சொற்கேட்டு
நடக்க வேண்டும்
கற்பிக்கு மாசானுக்
கமைய வேண்டும்
கருத்துடனே பாடங்கள்
கற்க வேண்டும்
வேர்வைவர உடற்பயிற்சி
செய்ய வேண்டும்
வேதனைகள் செய்யாது
விலக வேண்டும்
இவ்வகையாம் நற்குணங்கள்
கொள்ள வேண்டும்
இவையெல்லாம் உள்ளத்தில்
பதிய வேண்டும்"

இத்தகைய உயரிய அறிவுரைகளை உள்ளடக்கியதே புலவரின் "நல்வழிக் கவிதை."

### நபி நாயகத்தைப் போற்றி.........

"திருநபி புகழ்க்கீதம்" என்பது அப்துல்லா புலவரின் சிறியதொரு நூலாகும். இந்நூலில் நாயகப் பெருந்தகையின் வரலாற்றுச் சிறப்பு, அவர்களது போதனைகள் முதலியவைகளைப் புலவர் தீந்தமிழ்ப் பாவாக இசைக்கிறார் நபிகள் நாயகத்தின் போதனைகளை விளக்கும் பாக்களிற் சில வருமாறு:

"சினம் புனிதம் ஆடவர்
மகளிர்
சீர் பெறக் கல்வியைத்
தேடுமென
ஈன மொழிந்திட நல்லுரை
வழங்கிய
எங்கள் நாயகம்
நந்நபியே"
"தன்னை யறிந்தவர்
தன்னிறை வன்தனை
தானே யறிந்திடு
வானென வே
பன்னிய மெஞ்ஞான
சாத்வீக ராகிய
பார் புகழ் வள்ளல்
நந்நபியே"

அடுத்து வள்ளல் நபி அவர்களின் வாழ்க்கையில் நடந்தேறிய சில விசேட நிகழ்ச்சிகளையும் புலவர் கவிதையில் விளக்குகிறார்.

"தேடு மிகலவர் கண்கள்
மறைந்திட
சிலந்தி வலையைப்
பின்னிடவே
நீடிய தென்று மலைக்குகை
தங்கிய
நிமலராம் ஹாஷிது
நந்நபியே"
மானைப் பிடித்திடு வேடன்
மனந்தனில்
மன்னிய ஈமான்
நிலைத்திடவே
தீனைத்தழுவியே திகழ்ந்திட
அருளிய
திங்கள் முகர்மது
நந்நபியே"

### பாரதியாரைப் பின்பற்றி.. .. ...

இவர் பாரதியாரின் 'ஓடி விளையாடு பாப்பா" என்ற பாப்பாப் பாடல்களைப் பின்பற்றி சில பாக்களை இயற்றியுள்ளார்.

"செல்வர்க் கழகு தருஞ்
செய்கை—தம்
செழுங்கிளை தாங்குயர்
கொள்கை
சொல்லுந் திருமறையின்
வாக்யம்—நீர்
துதித்து நடந்திடுவீர் பாக்யம்"
கல்விக் கழகுதனைக்
கேளும்—அதைக்
கற்ற படியொழுக லாகும்
நல்வினை முயன்றுதினம்
சூழும்—நீர்
நல்லோர் சபைதனையே
கூடும்"
"வஞ்சம் பொய்களவு
நீக்கும்—அவை
நெஞ்சிற் பிரபைதனை
யாக்கும்
சஞ்சலம்நீங்கிடயார்க்கும்—நீர்
சாந்தமுட னுதவி
தனையாற்றும்

இத்தகைய உயரிய தமிழ்ப் பாக்களை அள்ளி அள்ளிச் சொரிந்த புலவர் அப்துலா அண்மையில் தான் இறையடி சேர்ந்தார்.

### சுல்தான் தம்பிப் பாவலர்

யாழ்ப்பாணத்தில் சுல்தான் தம்பிப் பாவலர் என்றொரு புலவர் வாழ்ந்திருக்கிறார். இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் முற்பகுதியில் வாழ்ந்தவர். ஈழத்து முஸ்லிம் புலவர்களுள் இவரே காலத்தால் முந்தியவரெனக் கொள்ளப்படுகிறது. இவரின் பள்ளிப் படிப்பு வறுமையால் தடைப்பட்டாலும் தமிழில் நிரம்பிய அறிவு பெற்றிருந்தார். இவர் நீண்ட காலம் மாத்தறையில் வியாபாரஞ் செய்தார். ஓய்வு நேரத்தைத் தமிழ் கற்பதிலேயே செலவிட்டார். இப்புலவர் இயற்றிய "ஆரண முகம்மது காரணக் கும்மி" என்ற நூல் இன்று கிடைக்கக் கூடிய

(15-ம் பக்கம் பார்க்க)

---

## மக்கள் குரல்

# தமிழ் ஆசிரியர்களுக்குச் சிங்களம் எதற்கு?

நாம் தமிழ் ஆசிரியர்கள், தமிழையே பிரதான மொழியாகப் படித்தவர்கள். தமிழ் மொழியைக் கற்பிப்பதாகத் தமிழ் ஆசிரிய கலாசாலைக்குச் சென்று பயிற்சி பெற்று வெளியேறியவர்கள். இன்று வரை தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழையே ஊட்டுபவர்கள். இப்படிப்பட்ட எங்களைச் சிங்களம் படிக்க வேண்டுமென்று அரசியலார் வற்புறுத்துகின்றனர். நாம் எதற்காகச் சிங்களம் படிக்க வேண்டும்? சிங்களக் குழந்தைகளுக்கு நாம் கல்வி கற்பிக்கப் போகின்றோமா? இல்லை. ஏனெனில் படித்த வேலையற்ற நிலையில் எத்தனையோ சிங்கள வாலிபர் தொழிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தமிழ்க் குழந்தைகளுக்குச் சிங்களம் படிப்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது போலும்.

தமிழ் ஆசிரியர்களாகிய எங்களுக்கு இது ஒரு சோதனை காலம். இக் காரணத்தால் சம்பள உயர்வுகள், பதவியுயர்வுகள் தடைப்படலாம். துன்பத்திற்குயேல் துன்பங்களைச் சுமத்தி எங்களைச் சிங்களம் படிக்கும்படி நிர்ப்பந்திக்கலாம். எங்கள் தொழிலுக்கும் சிங்களம் கற்கவேண்டும் என்ற கொள்கைக்கும் எந்த விதமான தொடர்புமில்லை. ஆங்கிலேயர் கூட தங்கள் ஆட்சிக் காலத்தில் தமிழ் ஆசிரியர்கள்மீது ஆங்கிலத்தைத் திணிக்க முயற்சிக்கவில்லை. ஆனல் சுதந்திர நாட்டிலே இன்று பலாத்காரத்தின் மூலம் எங்கள் தொண்டைகளுள் சிங்களத்தைத் திணிக்க முயலுகின்றனர்.

வருடங்கள் பல எடுத்தாலும் நாங்கள் அனைவரும் சிங்களம் படிப்பதையோ தகுதிகாண் பரீட்சை எடுப்பதையோ கவனத்தில் கொள்ளக்கூடாது. சிங்களம் படியாதிருப்பதன்மூலம் தமிழ் ஆசிரியர்களாகிய நாங்கள் அனைவரும் எங்கள் ஏகோபித்த எதிர்ப்பைக் காட்டினல் அரசாங்கம் எங்கள் கோரிக்கைக்கு நிச்சயம் செவிசாய்க்கும் காலம் வந்தே தீரும். ஏனெனில் எங்கள் கோரிக்கை நியாயமானதே. யாராவது மறைமுகமாகச் சிங்களம் படிக்க முயன்றால் அவர்கள் எங்கள் போராட்டத்தைப் பலவீனப்படுத்துபவர்கள் ஆவார்கள். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே.

ஆ. சவரிப்பிள்ளை,
செயலாளர்
சுற்றன் வட்டாரத்
தமிழாசிரியர் சங்கம்.

---

# வெள்ளத்தைத் தடுக்க வாரீர்!

சில பாடசாலை முகாமைக்காரர்கள் பாடசாலைக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதிலும் மற்றும் சில விடயங்களிலும் சமூகம் வெறுக்கத்தக்க சில முறைகளைக் கையாண்டனர் என்பது தெளிவு அரசாங்கம் பாடசாலைகளைத் தேசிய மயமாக்கினல் தாம் பாடசாலை முகாமைக்காரரின் பிடியில் இருந்து சுதந்திரம் அடைவது மட்டுமின்றி தங்களுக்குக் கூடிய சில சலுகைகளும் கிடைக்கும் என்று சில ஆசிரியர்கள் கனவு கண்டார்கள்.

சில அரசியற் கட்சிகள் இந்த தேசியமயக் கொள்கையின் அடிப்படை நோக்கம் என்ன என்பதை மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு உள்ளும் புறமும் பல முறை தீர்க்கதரிசனத்துடன் எடுத்துரைத்தார்கள். அவர்களின் பேச்சை அலட்சியப் படுத்தி சில ஆசிரியர்கள் பாடசாலைகள் தேசிய மயமாக்கப்படுவதற்கு [illegible]டிய ஒத்துழைப் [illegible] தயங்காது அளித்தனர்.

இன்று நடைபெற்றது என்ன?

ஆசிரியர்களுக்கு அடிக்கடி இடமாற்றம், அரசியல் உரிமை பறிக்கப்பட்டது. எதிர்பார்த்த சலுகைகள் அளிக்கப்படவில்லை. ஆசிரியர்களும் கட்டாய சிங்கள அறிவு பெற வேண்டும். இவைதான் தேசிய மயத்தின் கீழ் ஆசியர்கள் கண்ட பெறுபேறுகள்.

இந்த நாட்டின் ஆட்சி மொழி ஆங்கிலமாய் இருந்த பொழுது தமிழ் ஆசிரியர்களோ அல்லது சிங்கள ஆசிரியர்களோ அரசியல் மொழியான ஆங்கில மொழியறிவு பெற்றிருத்தல் வேண்டும், அல்லாவிடில் உத்தியோக உயர்வோ அல்லது சம்பள உயர்வோ கிடையாது என்ற எந்த நிபந்தனையும் இருந்ததில்லை. அவர்களுக்கு உத்தியோக மொழியான ஆங்கிலம் தங்கள் கருமங்களை ஆற்றத் தேவைப்படவும் இல்லை. எனவே இன்று [illegible] மொழியறிவு தமிழ் ஆசிரி[illegible]

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பறறுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஆகஸ்ட் மாதம் 12-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலைபேசி எண் : 3411 த. பெ. 1183

# நாடெங்கும் அதிருப்தி

நாட்டின் நிலை கலக நிலையாக மாறி வருகிறது. நாடெங்கும் அதிருப்தி, வெறுப்பு, கொந்தளிப்பு—குறுகிய கண்ணோட்டத்தில் தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் விளைவுதான் இது.

ஆட்சியாளரின் தவறான கொள்கை, பிற்போக்கான எண்ணம், பிழையான போக்கு, குறுகிய நோக்கம், திறமையற்ற நிர்வாகம், இவற்றின் திரட்டுதான் இவ்வருட வரவு-செலவுத் திட்டம். பற்றுக் குறையை நிரப்ப குறுக்கு வழியில் பணம் திரட்ட முயன்றதால் நாட்டிலே குமுறல்.

பொருளாதார நெருக்கடி, வர்த்தக மந்தம், அரசாங்கம் 'திவால்', இவற்றைத்தான் படம் பிடித்துக் காட்டுகிறது வரவு-செலவுத் திட்டம். நெருக்கடியைத் தவிர்க்க விற்பனை வரி என்னும் அணுகுண்டைத் தூக்கி மக்கள் தலையில் போட்டனர். விலைவாசிகள் திடீரென ஏற்றம் கண்டன—மக்கள் கொதித்தெழுந்தனர். அரசாங்கம் ஆட்டம் கண்டது. வேறுவழியின்றி, அணுகுண்டு வரி வாபஸாயிற்று.

தலைவலி போய் திருகுவலி வந்ததென்பார்கள். அம்மாதிரி விற்பனை வரி போய் இறக்குமதி வரி 20% கூடிவிட்டது. இரண்டின் விளைவும் ஒன்றே. அதுதான் விலைவாசிகளின் ஏற்றம். நிமிடத்துக்கு நிமிடம், மணிக்கு மணி அகவிலை விஷம்போல ஏறுகிறது.

"பயப்படாதீர்கள்! பணக்காரர்கள்மீது தான் கைவைப்பேன்" என்று அன்று முழங்கினார் நிதி மந்திரி. இன்றோ ஏழை எளியவர்களின் வயிற்றில் அடித்து விட்டார் பங்கீட்டரிசியை வெட்டி.

அரைக் கொத்து அரிசியைப் பிடுங்கியதால் தோட்டத் தமிழர்கள் அரைவயிற்றோடு உழைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் கடுமையான உழைப்பாளிகள். இரண்டு கொத்து அரிசியே அவர்களுக்குப் போதாது. அதிலும் அரைக் கொத்து 'அபேஸ்'. இனி அவர்கள் வாரம் இரு நாட்கள் உபவாசம்தானா? பசி பட்டினியோடு மலையேறி இறங்க முடியுமா? நாட்டின் முதுகெலும்பான மலைநாட்டுத் தமிழருக்கா இந்தக் கதி?

அரசாங்கம் கொடுத்தாலும் சரி—தோட்ட நிர்வாகம் கொடுத்தாலும் சரி, 2 கொத்து அரிசி எவ்வகையிலும் அவர்களுக்குக் கொடுத்தேயாக வேண்டும். தோட்டத் தொழிலாளர் சங்கங்களும், காங்கிரஸ்களும் இதற்கு என்ன செய்யப் போகின்றன?

பசி வந்தால் பத்தும் பறந்து போகும்; "பசியோடு பாடுபடமாட்டோம்" என்று பத்து நாட்கள் அவர்கள் "லயின்"களில் படுத்து விட்டால், நாட்டின் பொருளாதாரமே படுத்துவிடுமென்று எச்சரிக்கின்றோம்.

அரிசி வெட்டால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் கிராமாந்தர ஏழை மக்களே! நகரங்களில் தொழிலாளர்களும் நடுத்தர வகுப்பினரும் இனி அரைப் பட்டினிதான். கள்ளச் சந்தையில் அரிசி வாங்கும் அளவுக்கு அவர்கள் கையில் பசையில்லை. பங்கீடு வெட்டு என்பது அரிசி விலை ஏற்றமே, பங்கீட்டு அரிசி 2 கொத்தின் விலை 50 சதம். இனி அது சுமார் 75 சதமாகிவிடும்.

விலைவாசிகள் கூடியதேயன்றி வேதனம் கூடவில்லை. அகவிலைக்கேற்ப சம்பளம் உயர வேண்டும். இல்லையேல் ஊசலாடும் உயிரை, உடலோடு பிணைக்க உழைப்பாளிகளால் முடியாது அதற்காகப் போராட்டப் பாதையிலே இறங்கவும் பாட்டாளி மக்கள் தயாராகின்றனர்.

நிலைமையைச் சமாளிக்க அரசாங்கம் பணப் புழக்கத்தைப் பெருக்கலாம். நாணய நோட்டுக்களை அச்சிட்டுத் தள்ளலாம். அதன் விளைவு பணவீக்கம் ஏற்படுவதே. பணவீக்கம் வர்த்தக மந்தத்தைக் கொண்டு வரும். கடுமையான நெருக்கடிகள் தோன்றும். உணவுக் கலகங்கள் எங்கும் தலைதூக்கும். பட்டினிச் சாவுகள் அதிகரிக்கும். நாடு அல்லோல கல்லோலப்படும்.

விற்பனைவரி அமுல் 48 மணி நேரத்துள் அது வாபஸ், இறக்குமதி வரி திடீர் உயர்வு, அரிசி வெட்டு என்பவை மக்களை எழுச்சிபெறச் செய்துள்ளன. அரசாங்கத்தின் மீது எல்லாத் திசைகளிலிருந்தும் கண்டனக் கணைகள் வீசப்படுகின்றன. வரவு-செலவுத் திட்டம் ஒரு கேலிக் கூத்தாகிவிட்டது.

அரசாங்கக் கட்சியினுள்ளேயே குத்து வெட்டு—கட்சியின் கட்டுக்கோப்பு கலகலத்துவிட்டது. சில எம். பிகள் புரட்சி செய்கின்றனர். கடந்த கட்சிக் கூட்டம் எம். பிகளின் அதிருப்தியை அம்பலப்படுத்திவிட்டது.

'பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவேன்' என்ற பிரதமரின் பயமுறுத்தல் என்றும் பயனளிக்குமா? பாராளுமன்றக் கட்சியிலிருந்து சிலர் வெளியேறுவது நிச்சயம். இதனால் அரசாங்கத்தின் பலம் குறைந்துவிடும். நிலையற்ற தன்மை ஏற்படும். ஆபத்து சூழ்ந்துவிடும். இதற்கிடையே தொழிற் சங்கங்களும் வேறு நடவடிக்கைகளுக்குத் தயாராகின்றன.

மந்திரி சபைக்குள்ளும் கெடுபிடிப்போர் என்று ஒரு செய்தி கூறுகிறது. அங்கே கோஷ்டிச் சண்டைகள், பூசல்கள்; இன்றுள்ள நிலையில் மந்திரிசபையில் பெரும் வெடிப்பு ஏற்படக் கூடுமென்பது அவதானிகள் கருத்து.

யானை தன் தலையிலே மண்ணை வாரிப் போட்டுக்கொள்ளும். அம்மாதிரி 'அரிசி வெட்டை அமுல் நடத்தியே தீருவோம்' என்ற அரசாங்கத்தின் பிடிவாதம் அரசாங்கத்திற்கே உலைவைக்கிறது. அன்று தமக்கு ஆதரவளித்த நண்பர்களையெல்லாம் ஆட்சியாளர் இன்று இழந்துவிட்டனர். அதுமட்டுமா? எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒரே அணியில் திரண்டு நிற்கவும் வழி வகுத்துவிட்டனர்.

வெளியிலும் எதிர்ப்பு—உள்ளேயும் எதிர்ப்பு. இந் நிலையில் அரசாங்கம் எத்தனை நாளைக்குத்தான் நிலைத்திருக்கப் போகிறது? பதவியைவிட்டு ஓடும் நிலைமை ஏற்படு[illegible] அரசாங்கம் தானாகவே ராஜிநாமா செய்தல் அறிவுடைமையாகும்.

# இன்னல் நீங்க வழி பிறக்கும்

## ஒன்றுபட்டால் விரைவில் வெற்றி

## மன்னார் மாநாடு பற்றி இராசமாணிக்கம்

மன்னாரில் நடைபெறவிருக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமிழரசுக் கட்சி மாநாடு பல வழிகளிலும் இம் முறை சிறப்பாக அமையும். நமது இன்னல்கள்யாவும் விரைவில் நீங்கிவிட வழி பிறக்கும். இவ்வாறு இ. த. அ. கட்சி தலைவரும், பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் நமது நிருபரிடம் கூறினார்.

இன்று ஏற்பட்டுள்ள அரசியல் சூழ் நிலையில் எமது உரிமைப் போராட்டம் வலுப்பெற்றது மாத்திரமின்றி, போதிய வெற்றியும் பெற்றது. நாங்கள் ஒன்றுபட்டுப் போராடும் வலிமையிலேயே எமது இறுதி வெற்றி தங்கியிருக்கிறது. இதுவரை தமிழ் பேசும் மக்கள் செய்து வந்த தியாகத்தின் பலாபலன்கள் அண்மையிலேயே அனுபவிக்கக் கூடிய நிலை உருவாகியுள்ளது.

இம்மாத இறுதியில் நடைபெறவிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வருடாந்த மாநாடு, பல வழிகளிலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக விருக்கும். நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பலதரப்பட்ட பிரச்சினைகளின் மத்தியில், எதிர்கால நடவடிக்கைகளையிட்டு மிகவும் முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவிருக்கின்றன.

சென்ற மகாநாட்டின் போது நடந்தவிடய ஆலோசனைக் கூட்டத்தின் தீர்மானப்படி தயாரிக்கப்பட்ட கட்சியின் புதிய அமைப்பு விதிகள் இவ்வருட மன்னார் மகாநாட்டின் போது சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறும். அமைப்பு விதிகளில் இருக்கும் பல உப விதிகளுக்கு அமைவாக கட்சியின் அமைப்பு, உத்தியோகத்தர்கள் தெரிவு, பொதுக் குழு ஆகியன அமைக்கப்படும். உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர இயலாத சில விதிகள் 1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் திகதியுடன் அமுலாக்கப்படும்.

கட்சியின் கட்டுக்கோப்பைப் பலப்படுத்துவதோடு, கிளைகளையும், அங்கத்துவத்தையும் உறுதிப்படுத்துவதற்கான பல புதிய விதிகள் அமைப்பு விதியில இடம் பெற்றுள்ளன.

கட்சியின் உத்தியோகத்தர்களோ, அங்கத்தவர்களோ, கட்சியின் கொள்கைகளுக்கு விரோதமான காரியங்களைச் செய்தாலோ, கட்சிக்கு இழுக்குண்டாகும் வகையில் நடந்து கொண்டாலோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் சட்டதிட்டங்களில் புதிய பல விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் எமது உரிமைப் போராட்டம் மேலும் வலுப் பெற்றுள்ளது மாத்திரமின்றி, போதிய வெற்றியையும் அடைந்துள்ளது. நாங்கள் எங்களிடமுள்ள சிறு சிறு பிளவுகளை மறந்து ஒன்றுபட்டுப் போராடும் வலிமையிலேயே நமது இறுதி வெற்றி தங்கியிருக்கிறது.

இதுவரை தமிழ் பேசும் மக்கள் செய்து வந்த தியாகம் வீண் போகவில்லை; நாம் அனுபவித்த துன்பத்தின் பலாபலன்களை அனுபவிக்கப் போகும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதை இவ் வேளையில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மன்னாரில் நடைபெறவுள்ள நமது மகாநாட்டுக்கு வடக்கு, கிழக்கு, மலைநாடு ஆகிய பகுதிகளிலிருந்து ஏராளமானவர்கள் வரவுள்ளனர். மாநாட்டுக்காக வரும் ஆயிரக்கணக்கானவர்களைத் தக்க முறையில் உபசரித்து ஆவன செய்ய வரவேற்புக் குழுவினர் தக்க ஆயத்தங்கள் செய்து வருகின்றனர்.

### விண்ணப்பம்

மன்னார் மகாநாட்டின் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவிருக்கும் தீர்மானங்களையிட்டு தங்கள் பிரேரணைகளை 17-8-62-க்கு பிந்தாமல் யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள இ. த. அ. கட்சி காரியாலயத்திற்கு, பொதுச் செயலாளருக்குக் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பிவைக்குமாறு, கட்சிக்கிளைகளையும், தனிப்பட்ட உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

# பிரதம மந்திரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வென்றும் அரிசி வெட்டை எதிர்க்கும் மந்திரிகளைப் பார்த்து அவர் கூறியதாகவும் தெரிகிறது.

படிப்படியாக மோசமடைந்துவரும் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்ய அரிசிப் பங்கீட்டை வெட்டுவதைத்தவிர வேறு வழியே கிடையாதெனப் பிரதமர் வாதித்தாராம். அத்தோடு வெளிநாட்டு ஆஸ்தியை மிச்சம் பிடிக்கவும் அதுதான் வழியென்றாராம்.

பிரதமரின் உறுதி, அரிசி பங்கீடு வெட்டை எதிர்த்த மந்திரிகளையும், அடிபணிய வைத்துவிட்டதென்று கூறப்படுகிறது.

அரிசி வெட்டை வன்மையாக எதிர்த்த நான்கு மந்திரிகள் அடுத்த நாட்காலை பிரதம மந்திரியைப் பேட்டிகண்டு தங்களின் பூரண அங்கீகாரத்தைத் தெரிவித்துக் கொண்டார்களென்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது.

### சலசலப்பு

திங்கட்கிழமை பகலில் நடைபெற்ற பாராளுமன்றக் கட்சிக் கூட்டத்தில் அரிசிப் பங்கீட்டை எதிர்த்து பலத்த விவாதம் நடைபெறும்போது ஒரு எம். பி. கோபத்துடன் கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார் என்று கூறப்படுகிறது.

அரிசிப் பங்கீடு வெட்டை எதிர்க்கும் வென்னப்புவ எம். பி. திரு. ஹியூ பர்னாந்தும் அவரது சகாக்களும் அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகக் கலைப் பயிற்சியில் கல்வி இலாகாவின் பாரபட்சம்

## அ. இ. வர்த்தகக் கலை மன்றத்தின் புகார்

'எமது மன்றம் எத்தனையோ தடவைகளாகக் காலம் தங்கிய கல்வி மந்திரி அவர்களிடம், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள கல்லூரிகள் மூலம் தமிழ் பேசும் இளைஞர் வர்த்தகக் கலை பயில வசதி செய்தளிக்கும்படி வேண்டியிருந்தது வட, கிழக்கு எம். பிக்களும் இதுபற்றிக் கல்வி மந்திரியிடம் கூறி, உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டனர். ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.'

இவ்வாறு, அகில இலங்கை வர்த்தகக் கலை மன்றம் பிரதம மந்திரி, எதிர்க்கட்சித் தலைவர், மந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர், செனேட் அங்கத்தவர்கள் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கூறியுள்ளது. அது அம்மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

வர்த்தகக் கலைப் பயிற்சி பெறுவதில் தமிழ் பேசும் இளைஞர்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதைப் பின்வரும் புள்ளி விபரம் தெளிவுபடுத்தும்: வர்த்தகக் கலைப்பயிற்சி அளிக்கும் வசதி கொண்ட பள்ளிக்கூடங்கள், சிங்களத் தொகுதிகளில் 195 இருக்கும் நிலையில், இந்தகைய பள்ளிக்கூடங்கள் ஆகப் பதினைந்தே வட, கிழக்கில் உள்ளன. கோப்பாய், உடுவில், சாவகச்சேரி, உடுப்பிட்டி, காங்கேசன் துறை ஆகிய தொகுதிகளில், வர்த்தகக் கலை பயிற்றும் வசதி பெற்ற ஒரு பள்ளிக்கூடமேனும் கிடையாது.

இப்படிப்பட்ட ஓர் நிலைக்கு, தமிழ், ஆங்கிலம் மூலம் வர்த்தகக் கலையில் [illegible] பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் பற்றாக்குறையே காரணமாக விருக்கக்கூடும். ஆனாலும் இதிலும் கூட, தமிழ் ஆசிரியர்களுக்கு வர்த்தகக் கலையில் பயிற்சி அளிக்க வசதிகள் செய்து தரக் கல்வி மந்திரி தவறிவிட்டார்!

இன்று மகரகமவிலுள்ள அரசாங்க ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலும், கொழும்பிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியிலும் சிங்களம் மூலம் ஆசிரியர்களுக்கு வர்த்தகக் கலைப் பாடங்களில் பயிற்சி அளிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், பலாலியிலுள்ள ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலோ அல்லது கொக்குவிலிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரியிலோ இத்தகைய வசதிகள் அளிக்கப்படவில்லை.

1957-ம் ஆண்டு தொடக்கம் இந்த அநீதியான நிலை இருந்து வருகிறது.

கோப்பாய்ப் பிரதிநிதிக்கு அண்மையில் எழுதியுள்ள ஓர் கடிதத்தில், வர்த்தகக் கலை பயின்ற தமிழ் ஆசிரியர்கள் 37 பேர், பாடங்கள் போதிக்காமல் இருப்பதாகக் கல்விஇலாகாவின் சிரேஷ்ட காரியதரிசி குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று உண்மையாயின், இவர்களுக்கு முழு நேர வேலை கொடுத்து, இவர்களைக் கல்லூரிகளில் ஏன் இன்னும் கல்வி இலாகா நியமிக்கவில்லை? வடமாகாணத்திலேயே, ஏறத்தாழ 85 கல்லூரி அதிபர்கள் தங்களுக்குத் தமிழில் வர்த்தகக் கலை பயின்ற ஆசிரியர்கள் முழு நேர வேலைக்குத் தேவை என்று கல்வி இலாகாவிடம் எழுத்து மூலம் விண்ணப்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பீலிக்ஸ் வெளி விவகார மந்திரியாவார்?

# திரு. சி. பி. டி. சில்வாவுக்கு நிதி மந்திரி பதவி கிடைக்குமாம்

## மந்திரி சபையில் ஏற்படவிருக்கும் மாறுதல்கள்

வரவு—செலவுத் திட்டத்தின் எதிரொலியாக மந்திரி சபையில் முக்கிய மாறுதல்கள் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வரவு-செலவுத் திட்டம் மந்திரிகளிடையே கோஷ்டிச் சண்டையை வலுப்படுத்தியுள்ளது. மந்திரிகள் சிலர் நிதி மந்திரிமீது சுடு சரங்களை ஏவுகின்றனராம்.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொடர்ந்து நிதி மந்திரியாக இருந்தால் நெருக்கடிகளைத் தவிர்க்க முடியாது என்ற அபிப்பிராயம் அரசாங்கக் கட்சிக்குள் வலுவடைந்து வருவதாகத் தெரிகிறது. அவரும் சங்கடமான நிதி மந்திரி பதவியை விரும்பவில்லையாம். மற்ற மந்திரிகளும் இந்தப் பளுவைச் சுமந்து பார்க்கட்டுமே என்று கூறுகிருராம்.

எனவே வரவு செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்ததும் மந்திரிப் பதவிகளில் பலத்த மாறுதல்கள் ஏற்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சி. பி. டி. சில்வாவுக்கு நிதிமந்திரிப் பதவி அளிக்கப்படலாமென்று கூறப்படுகிறது.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொழில், வெளிவிவகார மந்திரியாவாராம். அவர் தொடர்ந்து பிரதமரின் பாராளுமன்றக் காரியதரிசியாகவோ பிரதமருக்கு ஆலோசகராகவோ கடமையாற்றுவாரென அறியப்படுகிறது.

பாராளுமன்றத்தில் பிரதமர் சார்பாகப் பேசும் வாய்ப்பு தன்னிடமே இருக்க வேண்டுமென்று கருதுகிருராம்.

வேறு சில மாறுதல்களும் மந்திரிசபையில் ஏற்படக் கூடுமென விஷயம் தெரிந்த வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

## அரிசி வெட்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரிசி வெட்டை வாபஸ் வாங்கவும் ஒரு நொண்டிச் சாக்குக் கூற வேண்டுமல்லவா? இல்லையேல் அரசாங்கம் பீதியடைந்து சரணுகதி அடைந்து விட்டது என்றல்லவா பரிகாசம் செய்வார்கள்? ஆகவே முன்னேற்பாடாக ஆபுக் குடியரசு நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்திலே இலங்கைக்குக் கைகொடுக்க முன் வந்திருக்கிறதென்றும், இலங்கைக்கு 50,000 டன் அரிசியை அனுப்பி வைக்க இணங்கியிருக்கிறதென்றும் செய்தி வந்துள்ளது. அரிசி வெட்டை வாபஸ் வாங்க இது காரணமாகக் காட்டப்படக் கூடுமென்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.


### "சங்கப்பலகை"

(திங்களிருமுறை ஏடு)

ஆசிரியர்: நக்கீரன்

இது ஈழத்தின் தரமான அரசியல் ஏடு, இலக்கிய ஏடு.

எழுத்தாளர்கள், இலக்கிய ரசிகர்கள், வாசகர்கள் அனைவரும் போற்றும் பூக்காடு.

- அனல் கக்கும் அரசியல் விமர்சனம்.
- தேன் சொட்டும் கவிதைகள்
- விறைப்பான கேள்விகள், உறைப்பான பதில்கள்.
- இலக்கிய சர்ச்சை, உருவகக் கதை, சிறுகதை, கலை விமர்சனம் பிறவற்றுடன் பிரதி மாதமும் 5, 20-ம் தேதிகளில் வெளிவருகிறது.

தனிப் பிரதி சதம் 15.
வருட சந்தா ரூ. 5-00

எல்லா இடங்களிலும் முற்பணம் கட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

மன்னூர் மாநாட்டு மலர்

- அதிக பக்கங்கள்
- தலைவர்களது படைப்புக்கள்.
- கதை, கட்டுரை, கவிதை முதலாய சிறப்புகளுடன் ஆகஸ்ட் 20-ல் வெளிவருகிறது.

விலை சதம் 25

எல்லா விபரங்களுக்கும்
நிர்வாகி
"சங்கப்பலகை"
இணுவில், சுன்னுகம்.


## மொழிவழி சமஷ்டி.........

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. ஐக்கிய அமெரிக்க நாடுகளும் தென் ஆபிரிக்க குடியரசும் மொழிவாரிச் சமஷ்டி ஆட்சிகள் அல்ல என்பதை நான் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்.

(திரு. கெனமன் கோபத் தோடு பேசத் தொடங்கினர்)

திரு. கெனமன்: மொழிவாரிச் சமஷ்டியா? உலகில் எந்த நாட்டிலுமே மொழிவாரிச் சமஷ்டியில்லை என்பதை நீர் அறிவீரா?......

தமிழ் மாணவர்:.........நான் இந்நேரத்தில குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். சோவியத் யூனியனிலும் கனடாவிலும் சுவிற்சர்லாந்திலும் யூகோஸ்லாவியாவிலும் மொழி வாரிச் சமஷ்டி இருக்கிறது......

திரு. கெனமன்: இல்லை சோவியத் யூனியனில் இருப்பது மொழிவாரி இராச்சியங்களல்ல, தேசிய இராச்சியங்கள்.........

தமிழ் மாணவர்: அத்தேசிய இராச்சியங்கள் மொழிவாரியாக அமைந்தவை.

திரு. கெனமன்: இல்லை. ஒரு இராச்சியத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகள் இருக்கின்றன.

தமிழ் மாணவர்: அவ்வாறயினும் கூட, அவை மொழிவாரி இராச்சியங்கள்தான். சோவியத் யூனியன் ஒருபுறத்தில் இருக்கட்டும். கனடாவைப் பாருங்கள். கனடாவில் இருப்பது மொழிவாரி இராச்சியங்கள்.

திரு. கெனமன்: இல்லை. அவை மாகாணங்கள்.

தமிழ் மாணவர்: மாகாணமோ, இராச்சியமோ, கன்ரேனு (Canton) அவைமொழிவாரிச் சமஷ்டியே. கனடாவில் உள்ளது மொழிவாரிச் சமஷ்டி ஆட்சி. யூகோஸ்லாவியாவில் உள்ளது மொழிவாரிச் சமஷ்டி. ஏன் இந்தியாவில் உள்ளது மொழிவாரிச் சமஷ்டி......

### ஹுமாயுன் கபீரை தெரியாது!

திரு. கெனமன்: இந்தியாவில் உள்ளது சமஷ்டி ஆட்சியல்ல.

தமிழ் மாணவர்: இல்லை. இந்தியாவில் உள்ளது சமஷ்டி ஆட்சி. திரு. ஹுமாயுன் கபீர் ஹொரலைக் கூட்டத்தில் அவ்வாறு கூறியிருக்கிருர்.

திரு. கெனமன்: ஹுமாயுன் கபீர் யாரென எனக்குத் தெரியாது.

தமிழ் மாணவர்: அவர் இந்தியாவின் கலாச்சார, விஞ்ஞான மந்திரி. அவர் கூறியிருக்கிருர் இந்தியா சமஷ்டி ஆட்சியென்று.

திரு. கெனமன்: இந்தியா சமஷ்டி ஆட்சியென்ருல் ஜனுதிபதி எப்படிக் கேரள அரசாங்கத்தைக் கலைத்திருக்க முடியும்?

தமிழ் மாணவர்: இந்தியா சமஷ்டி ஆட்சியிலும் குறைந்தது என்று கூறுகிறீர்கள்? சரி....நீங்கள் சமஷ்டி ஆட்சியல்லாத இந்திய அரசியல் அமைப்பைப் போன்ற ஓர் அரசியல் அமைப்பை எமக்கு அளிக்க விரும்புவீர்களா?

திரு. கெனமன்: ...என்ன?... இந்தியா அமைப்புக்கும் இலங்கை அமைப்புக்கும் இடையில் பல வேற்றுமைகள் உள்ளன. இந்தியாவில் பல்வேறு இனங்கள் இருக்கின்றன. அவர்களுடைய [illegible] எமக்கல்ல. எமக்கு வேண்டியது ஒற்றை ஆட்சிதான்.


### சுதந்திரன் மாநாட்டு மலர்

தமிழரசுக்கட்சி மன்னூர் மாநாடு 24-ம், 25-ம் 26-ம் தேதிகளில் நடைபெறவுள்ளது. அவ்வேளையில் 'சுதந்திரன் மாநாட்டு மலர்' வெளிவருகிறது.

- ★ அழகிய மூவர்ண முகப்பு
- ★ பரிசு பெற்ற சிறுகதைகள்
- ★ தலைவர்களின் கட்டுரைகள்
- ★ கவிதைகள்
- ★ நகைச் சுவைத் துணுக்குகள்.

ஆகியவை இடம் பெறுகின்றன.

**36 பக்கங்கள் —*— விலை சதம் 25**

முன்கூட்டியே உங்கள் பிரதிகளுக்கு விற்பனையாளர்களிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.


# மாநாட்டு நகர் நோக்கி சைக்கிள் ஊர்வலம்

## யாழ்ப்பாணம், வவுனியாவிலிருந்தும் கோஷ்டிகள் புறப்படுகின்றன

## அமிர்தலிங்கம் ஒழுங்குகளை கவனிக்கிருர்

இலங்கைத் தமிழரசுக் கட்சி மன்னூர் மாநாட்டுக்கு யாழ்ப்பாணத்திலிருந்தும், வவுனியாவிலிருந்தும் செல்லும் தொண்டர்கள் பெரும்பாலும் சைக்கிள்களில் ஊர்வலமாகச் செல்ல ஆயத்தங்கள் செய்து வருகின்றனர். இதற்கான ஒழுங்குகளை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் செய்து வருவதாக அறியப்படுகிறது.

மன்னூரில் நடைபெறவுள்ள தமிழரசுக் கட்சி மாநாட்டுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு மாபெரும் சைக்கிள் ஊர்வலம் செல்லவிருக்கிறதாக அறிகிறேம். வட்டுக்கோட்டையிலிருந்தும், காங்கேசன்துறையிலிருந்தும் இரண்டு சைக்கிள் ஊர்வலக் கோஷ்டிகள் 22-ம் திகதி புதன்கிழமை மாலையில் புறப்படுகின்றன. இவ்விரண்டு கோஷ்டியினரும் மருதனுமடச்சந்தியில் சந்திக்கின்றனர். யாழ்ப்பாண நகரக் கோஷ்டியும் அங்கு சேர்ந்து கொள்ளுகின்றது.

மருதனுமடத்துச் சந்தியிலிருந்து புறப்படும் பவனி கோப்பாய் வழியாக அன்றிரவு சாவகச்சேரியை அடையும். அங்கு சாவகச்சேரித் தொகுதி உறுப்பினர் திரு வி. என். நவரெத்தினம் அவர்களால் வரவேற்கப்படும். இரவு தங்கல் சாவகச்சேரியில். அடுத்தநாள் வியாழக்கிழமை காலையில் கோஷ்டியினர் புறப்பட்டு கேரைதீவு துறையினூடாக பூனகரியை அடைவர். அங்கிருந்து மாலை 3 மணிக்குப் புறப்பட்டு வெள்ளாங்குளத்தில் இரவு தங்குவார்கள்.

இதேவேளையில் வவுனியாவிலிருந்தும், வவுனியா பட்டினசபைத்தலைவர் திரு எஸ். சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் ஒரு சைக்கிள் ஊர்வலக் கோஷ்டி புறப்பட்டு, வெள்ளிக்கிழமை மாலை மன்னுரை வந்தடையும். வெள்ளிக்கிழமை காலையில் வெள்ளாங்குளத்திலிருந்து புறப்படும் யாழ்ப்பாண சைக்கிள் ஊர்வலக் கோஷ்டியினரும் மாலையில் மன்னுரை வந்தடைவர். இவ்விரு கோஷ்டியினரையும் மன்னூர் மகாநாட்டுவரவேற்புக் குழுத் தலைவர் மன்னூர் நகர எல்லையில் வைத்து வரவேற்பார் எனத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் இரு சைக்கிள் ஊர்வலக் கோஷ்டிக்கும் வேண்டிய ஒழுங்குகளை வட்டுக்கோட்டை பிரதிநிதி திரு அ. அமிர்தலிங்கம் அவர்களும் திரு சி. மு. முத்தையா அவர்களும் செய்து வருகின்றனர். சாவகச்சேரியிலிருந்து புறப்படும் கோஷ்டியினருடைய சகல பொறுப்புக்களையும் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. என். நவரத்தினமும், வவுனியாக் குழுவின் பொறுப்புக்களை பட்டினசபைத் தலைவர் திரு எஸ். சுப்பிரமணியமும் ஏற்றுள்ளனர். சைக்கிள் ஊர்வலத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் ஒவ்வொருவரும் மேற் குறிப்பிட்டவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்று கோரப்படுகின்றனர்.

(நேரம் 6—45 ஆகிவிட்டது. தொடர்ந்து கேள்வி கேட்டாலும் கெனமன் எழுப்புவார் என்பது ஊர்ஜிதமாகி விட்டது. ஆகவே தமிழ் மாணவர் அத்துடன் நிறுத்திக் கொண்டார்.)




சி. சி. சி. புகையிலை பசளைக் கலவைகள்



கொழும்பு கொமர்ஷியல் கொம்பனி லிமிட்டெட்,
பசளைப்பகுதி.
அக்லண்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ், கொழும்பு-2. போன்: 7935.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# விருப்பும் வெறுப்பும்

—பவானி—

சேந்தன் தோப்பு எத்தனையோ கிராமங்களைப்போல இன்னுமொன்று. பெயரைப்போலவே தோப்புகளுக்குப் பிரசித்தமானது.

பறவை வேட்டைக்காக அங்கு பலரும் வருவதுண்டு.

முரளியும் வந்திருந்தான் ஒருநாள். புறுவொன்றைச் சுட்டு வீழ்த்தினன்.

புறுவின் மூலம் அவனுக்கும் சாருவுக்கும் சந்திப்பு ஏற்பட்டது. அது காதலாக மாறியது.

ஆனல்..............அதற்குப்பின்?..............

"இன்னும் எத்தனை நாள் இப்படியே இருந்துவிட உத்தேசம், சாரு?" சாருவின் நீண்ட, கருங் கூந்தலைப் பின்னிக்கொண்டே மெதுவாகக் கேட்டாள் சித்ரா. சாருவின் உதடுகளில் நெளிந்த ரகஸ்யப் புன்னகையை, முகத்தில் படிந்த கலவரத்தைச் சித்ரா காணவில்லை.

"கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டியதுதான், மச்சாள்! ஆகுங்காலம் வந்தால் எல்லாம்தானே நடக்கும் என்று நீங்கள்தான் அடிக்கடி சொல்வீர்களே." சாருவின் குரலில் ஒரு துள்ளல், ஒரு எழுச்சி வெளிப்பட்டது. சித்ரா ஆச்சரியத்தில் ஒரு கணம் பின்னுங்கை ஓய்ந்திருந்தாள். சாருவிடம் இந்தக் கேள்வியைச் சித்ரா கேட்டது இதுமுதல் தடவையல்ல. எத்தனையோ தடவை கேட்டு விட்டாள். ஆனல் எப்பொழுதும் அவளுக்குக் கிடைத்த பதில் அணுக முடியாத, கீறிப்பிளக்க முடியாத மௌனம்தான். சிற்சில சமயங்களில் "எனக்குச் சோறு போடுவது உங்களுக்குப் பாரமாக இருக்கிறதா, மச்சாள்?" என்று வெடுக்கென்று கேட்டு அவள் வாயை அடைத்துவிடுவாள். அதனல் சாரு பதிலளித்த விதம், அவள் குரலில் தொனித்த உல்லாசமும் நாணச் சாயலும் சித்ராவுக்குத் திகைப்பூட்டியது.

"சாரு, அப்படியானல் அண்ணனிடம் சொல்லட்டுமா?" பதிலுக்குத்தன் அரிசிப் பல்வரிசை தெரியச் சிரித்த சாரு தன் பின்னலை வெடுக்கென்று பறித்துக் கொண்டு கொல்லைக்கு ஓடினள். மடிநிறைய மல்லிகை மொட்டுக்களைப் பந்தலிலிருந்து பறித்தவள், கொல்லைப்படியில் அமர்ந்து அவற்றைத் தொடுக்கலானள். சாரு மணமுடிக்கச் சம்மதிக்கவில்லை என்பது ராகவனுக்கும் சித்ராவுக்கும் மனக்குறைதான். ஆனல் சாருவால்தான் இதுவரை தன் மனதைச் சமாதானப்படுத்திக்கொள்ளவில்லை. அதிலிருந்து முரளியின் நினைவை இதுவரை அவளால் அழிக்க முடியவில்லை. ஆனல் இனி?—தனக்குள் சிரித்துக் கொண்டாள் சாரு. இரண்டு வருடங்களாகச் சிரிக்காததாலோ என்னவோ சாருவின் உள்ளத்தில் இன்று சிரிப்புச் சதா குமிழியிட்டுக் கொண்டிருந்தது. அவள் உதடுகள் புன்னகையில் தவழ்ந்தன. இரண்டு வருடங்களாக அவள் நெஞ்சில் நிலைத்த உருவத்தைக் கல்லி எறிந்துவிட்டாளா? இல்லை. வருவேன் என்று போனவன வந்துவிட்டான். முரளிவந்துவிட்டான். அவளேன் சிரிக்கமாட்டாள்? குதூகலமாய்ப் பேசமாட்டாள்? அன்று காலை சித்ராவும் சாருவும் கடைத்தெருவுக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கி ஒரு 'கார்' வந்து கொண்டிருந்தது. சாருவும் சித்ராவும் அதற்குவழிவிட்டு ஒதுங்கி நின்றார்கள். 'கார்' அருகில் வந்து அவர்களைத் தாண்டுவதற்கிடையில் சாரு அதை ஓட்டி வந்தவனைக் கண்டுகொண்டாள். அவன்—முரளியும் தன்னைப் புரிந்துகொண்டான் என்றும் உணர்ந்துகொண்டாள். திடீரெனக் 'காரின்' வேகம் குறைந்தது. அதை ஓட்டியவன் 'காரை' நிறுத்தவோ வேண்டாமோ என்று யோசிப்பதுபோல் தோன்றியது. ஆனல் கடைசியில் 'கார்' நிற்காமல் அதே போக்கில் போயிற்று. அதோடு சாருவின் இதயபாரமும் வேதனையும் போயிற்று. அவன் தன்னிடம் பின்பு வருவான் என்று அவளுக்குத் தெரியும்..............

சாரு பெருமூச்சு விட்டாள். இரண்டு வருடங்களாக அவளை ஏங்கவைத்துவிட்டானே முரளி! முரளியும் அவளும் சந்தித்த விதமே ஏதோ கதைகளில் தோன்றும் நிகழ்ச்சி போலிருந்தது. நடைமுறை வாழ்க்கைக்கு ஒவ்வாததாகவே அவர்களின் அன்புப் பிணைப்பும் தோன்றியது. அது விபரீத ஆசையென்று இன்றைய சாருவுக்கு ஒருவேளை தோன்றியிருக்கலாம். ஆனல் அன்று சாரு வேறு பெண். அனுபவத்தின் தழும்புகள் அவள் உள்ளத்தைக் கறைப்படுத்தியிருக்கவில்லை. அது முற்றும் அவிழாத மலராகவே இருந்தது..............

சேந்தன் தோப்பு எத்தனையோ கிராமங்களைப்போல இன்னுமொன்று. பெயரைப் போலவே தோப்புகளுக்குப் பிரசித்தமானது. பக்கத்து நகரிலிருந்து பல பெரிய மனிதர்கள் பறவை வேட்டைக்காக அங்குவருவதுண்டு. ராகவனும் அவன் மனைவி சித்ராவும் தங்கை சாருவும் தோப்புக்குக் கூப்பிடு தூரத்தில் தெருவோடு குடியிருந்தனர். ராகவன் சேந்தன் தோப்புப் பாடசாலையில் ஆசிரியராயிருந்தான். சாருவுக்குத் தோப்பில் சுற்றுவதென்றால் ஒரே பித்து. அப்பொழுது, ஐந்து வருஷ மண வாழ்வின் பின்பு சித்ரா பிள்ளைப் பேற்றிற்காகப் பிறந்த வீடு சென்றிருந்தாள். அன்று சனிக்கிழமை. உண்ட மயக்கம் தீர உறங்கும் மத்தியான வேளை சாரு தோப்பில் ஒரு மாவில் மாங்காய் எறிந்து கொண்டிருந்தாள். திடீரென்று அந்தக் கிறங்கும் மத்தியான அமைதியைக் கிழித்துக்கொண்டு அண்மையில் வேட்டுச் சத்தம் எடுத்தது. அந்த வேட்டின் எதிரொலி ஓயுமுன் சிறகுகள் சடசடக்கச் சுழன்று சுழன்று வந்துசிறிது தூரத்தில் விழுந்தது ஒரு பறவை. சாரு அருகில் போய்க் குனிந்து பார்த்தாள்......புறு...இறந்து விட்டது......அருகே காய்ந்த சருகுகள் சலசலத்தன. சாரு புறுவைக் கையிலெடுத்துக் கொண்டு நிமிர்ந்தாள். எதிரே ஒரு இளைஞன் நின்றான். அவன் கையிலே புகை உமிழும் துப்பாக்கியை அணைத்திருந்தான். அவட்சியம் பொங்கும் ஆண்மை வடிவம். உலகையே விலைக்கு வாங்கிவிட்ட தோரணை.

"அந்தப் புறவை இப்படித் தருகிறாயா! நான் தான் [illegible] என்றவன் கையை அதிகாரத்தோடு நீட்டினன். சாரு பேசாமல் புறுவைக் கொடுத்துத் தானிருப்பாள். ஆனல் அவன் அலட்சியத் தோரணையோ, ஆணவமோ, ஏதோ ஒன்று அவளுக்கு எரிச்சல் மூட்டியது.

"அது சொல்லாமலே புரிகிறது!" உதட்டைப் பிதுக்கிப் புருவத்தை உயர்த்தி அவனை மேலுங் கீழும் அதிசயப் பொருள்போல் பார்த்தாள். சுற்றி விளங்கிய இயற்கையின் பிரிக்கமுடியாத அங்கமாய், அழகுருவாய்



அன்றலர்ந்த மலராய் நின்ற சாருவை அவன் கண்கள் அளவெடுத்தன.

"புரிந்துகொண்டாயல்லவா? இனியாவது புறுவைத் தருகிறாயா?" சிரித்துக் கொண்டே கேட்டான். ஆண்மையும் கவர்ச்சியும் தவழ்ந்த அவன் முகம் அவளை மயக்கியது.........

"தர முடியாது."

"என்ன?" அவன் திகைத்தான்.

"தரமுடியாது!" அழுத்தமாகச் சொன்னுள்.

"ஓஹோ! உனக்குத் தரத் தெரியாவிட்டால் உன்னிடமிருந்து எடுத்துக் கொள்ள எனக்குத் தெரியும்!" எரிச்சலோடு சொன்னவன் அதைச் செயலாக்குவது போல அவளை நோக்கி அடியெடுத்தான்.

"எடுத்துக் கொள்ளேன், பார்க்கலாம்!" வார்த்தையை வீசியவள் சட்டென்று திரும்பி மின்வெட்டுப்போல மரங்களிடையே ஓடி மறைந்தாள். இதை எதிர்பார்க்காத முரளி அப்படியே திகைத்து நின்றான்...

ஏதோ குறும்புத் தனத்தில் புறுவைத் தூக்கி ஓடிவந்து விட்டாளே தவிர யோசித்துப் பார்க்க அவளுக்குத் திக்கென்றது. தன் நடத்தையைப் பற்றிப் புகார் செய்ய அந்த மனிதர் விசாரித்துக்கொண்டு வீடு தேடி வந்து விடுவாரோ என்று பயந்தாள். ஆனல் இரண்டு நாட்களாகியும் ஒருவரும் வரவில்லை, என்று கண்டதும் மீண்டும் தோப்பை நாடலானள். ஏனே முரளியின் ஆண்மையும் மிடுக்கும் நிறை உருவம் அவள் மனதில் சதா தோன்றலாயிற்று. அவனை மீண்டும் காணவேண்டுமென்ற விழைவு ஏற்பட்டது. அந்தத் தோப்பு அவளைக் கவர்ந்திழுத்தது......... அங்குதான் முரளியும் சாருவும் தினமும் சந்தித்தார்கள். முரளியின் குறும்பும் கேலியும் அழகும் சாருவின் குழந்தையுள்ளத்தைச் சூறையாடி விட்டன. நாட்கள் வந்து போயின. அவர்கள் அன்புப் பிணைப்பும் இறுகி இணைந்தது முரளி ஒரு மாதம் சேந்தன் தோப்பில் தங்கினன். ஊர் திரும்ப வேண்டும் என்று முரளி சொன்னதும் சாருவின் கண்களில் நீர் முட்டிச் சிதறியது. சாருவுக்கு அவர்களின் சந்திப்பு, அந்த ஒருமாத காலத்தின் இன்பமெல்லாம் ஒரு கனவுத் தன்மையோடுதான் தோன்றின. அதில் உண்மையான ஒரே பொருள் முரளி என்றும், அவன் போய்விட்டால் தம்மைச்சுற்றி எழுந்த உலகமும் நொருங்கித் தூளாகி மறைந்து விடும் போல் அவளுக்குத் தோன்றியது. முரளி அவள் கண்ணீரைத் துடைத்தான்.

"இதற்கு அழுகிறாயா சாரு? நான் என் தந்தையிடம் இவ்விஷயத்தைச் சொல்லி அவரோடு முறையாகப் பெண் கேட்டு உங்கள் வீட்டுக்கு வர வேண்டாமா? சாரு, ஏழே ஏழு நாட்கள்தான், அடுத்த வாரம் வந்துவிடுவேன். எங்கே சிரி!" சிரிப்பை உதிர்த்துக் கொண்டே அவன் போய்விட்டான்.

அவன் சொன்ன ஏழு நாட்களும் அதற்கு மேலும் வந்து போயின. முரளிதான் வரவில்லை அவனிடமிருந்து எவ்வித தகவலுமில்லை. அப்பொழுதுதான், உணர்ச்சியின் வேகம் கண்ணை மறைக்காத நிலையில் நடந்ததை எண்ணிப் பார்க்கலானள். முரளியின் செல்வ நிலை, அவன் அந்தஸ்து எல்லாம் முழு உருவம் கொண்டன. அவளோ ஏழை ஆசிரியன் தங்கை. இயற்கை அளித்த அழகு ஒன்றுதான் அவளிடம் இருந்தது பள்ளத்தில் உள்ள நீர் மலையுச்சியை அடைய முடியுமா? அவள் ஏன் இதையெல்லாம் அன்று எண்ணிப் பார்க்கவில்லை? சாதாரண கதியில் ஓடும் வாழ்க்கையில் விபரீதங்கள் ஏன் ஏற்படுகின்றன? மனித யத்தனத்திற்கும் மேம்பட்ட சக்தி ஒன்றிருப்பதை மனிதன் மறந்துவிடாதிருக்கவா? முரளிமேல் அவளுக்கிருந்த நம்பிக்கையைக் கொல்ல ஆறு மாதங்கலெடுத்தன. ஆனல் அவன் மேல் கொண்ட அன்பைத்தான் என்ன முயன்றும் அவளால் கொல்ல முடியவில்லை. முரளியை அவளால் மறக்கவே முடியவில்லை. அவன் அவளை ஏமாற்றி விட்டான். ஆனல் அவளுக்கு அவன் மீது வெறுப்புத் தோன்றவே மறுத்தது...ஆனல் அவன் தான் வந்துவிட்டானே!... என்ன நடந்திருந்தாலும் அவன் வந்துவிட்டான்...

"சாரு! சாரு!" சித்ராவின் குரல் சாருவின் சிந்தனைத் தொடரை அறுத்தது. மல்லிகைச் சரத்தைப் பந்தாகச் சுருட்டி எடுத்துக் கொண்டு சாரு உள்ளே போனள்.

'சாரு, நான் அண்ணுவோடு 'டிஸ் பென்ஸரி'க்குப் போய் வருகிறேன். வீட்டைப் பார்த்துக்கொள்...

(13-ம் பக்கம் பார்க்க)

நலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம்
நீடிய உழைப்பு
இவைகளுக்கு
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND
டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தடுப்புக்காவலில் நாம்'

## அருமை மகள் அன்பரசிக்கு எழுதிய மடல்—3.

தடுப்புக் காவல் நிலையம்,

பனாகொடை,
ஹோமாகம.
21—4—1961

என் அருமை மகள்
அன்பரசிக்கு,

பனாகொடையில், மேல் மாடி தவிர வேறு எங்குமே போக முடியாது தடுத்து வைத்து நான்காவது நாள் ஆகிவிட்டது.

சென்ற மூன்று மடல்களை யும் படித்தவர்கள், அவை னுடன் மறு கடிதங்களையும் எதிர்பார்க்கவே செய்வர். நீ கூட 'அப்பாவின் மடலை' கையிலெடுத்துக் கொண்டு, 'அப்பா அப்பா' என்று ஒலிப் பது போலக் கேட்கின்றதே!

சென்ற மடலில் மல்லாகம் வழக்கறிஞர் நடராசா வருகையால் யாழ்ப்பாணப் புதினங்களை, ஆட்சியாளரின் அடக்கு முறைப் பாணங்களைக் கேட்டோம். மக்களாட்சி எனப் பேசும்—ஜனநாயகமெனக் கூறும்-சிறிமா அரசின் அட்டூழியங்களையெல்லாம் கதை கதையாக நடராசா அவர்கள் கூறினார்கள்.

நடராசா அவர்களைக் கைது செய்தமை ஒன்றே போதுமே அரசின் அட்டூழியத்தை உணர்த்த.

நாலு ஐந்து பொலீஸ் ஜீப் நடராசா அவர்களது இல்லத்தைச் சூழ்ந்தனவாம். மல்லாகம் சந்தியிலிருந்து ஒரே பொலீஸ் கும்பலாம். சிறையென்றதும் ஒழியும் தன்மை தமிழரசுக் கட்சியிடம் கிடையாதே! பின்பு எதற்காக இத்தனை ஆர்ப்பாட்டங்களோ! நடராசா அவர்களைக் கைது செய்து காங்கேசன்துறை வாடி வீட்டுக்குக் கொண்டு போனார்களாம். நடராசாவைச் சூழ்ந்திருந்த பொலீசாரும், பொலீஸ் அதிபரும் நடுவ—இராணுவத்தினர் சூழ்ந்தனராம். "P. M. G. (பி. எம். ஜி.) ......ம்! தமிழரசு பி. எம். ஜி" எனக் கூறி இடிக்க ஆரம்பித்தனராம்.

சத்தியாக்கிரகத்தின் கடைசி நாட்களில் 'தமிழரசுத் தபால் சேவையை' ஆரம்பித்தோமல்லவா? அச் சேவைக்கு 'போஸ்ற் மாஸ்ற்றர் ஜெனரல்' ஆக நடராசா அவர்களே கடமை செய்தார். அதனால் பி. எம். ஜி. என்று கூறிக் கூறி இடித்தார்கள்; அடித்தார்கள்; குத்தினார்கள்;

பாதுகாப்புச் செய்யப்பட வேண்டிய கைதி, அவசர காலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கைதி......ஈழ நாட்டின் துரைத்தனத்தில், பொலீசாரால் தண்டிக்கப் பட வேண்டிய காட்டு மிராண்டித்தனம்!

கொடுமைகள் நீதிமுன் தலை சாய்க்கும். வீறு பேசிய அரசுகள் மண்ணோடு மண்ணாகிப் புதைக்கப்பட்டவை எத்தனை எத்தனை! ஆட்சி யதிகார மமதையில் பாதை நழுவியோர் சரிந்து வீழ்ந்த சரிதைகள் ஆயிரம் ஆயிரம்! நீதி சாவதில்லை—கொடுமை நிலைப்பதில்லை. எதிர்காலம் இவற்றுக்கெல்லாம் இறுக்கும் பதிலை எங்கள் கண்களால் காண முடியும்!

அடியையும், இடியையும், குத்தையும் புன்முறுவலுடன் நடராசா அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இலட்சிய வாதியின் உள்ளத் துடிப்பு............ ஆட்சியை வெடிக்கச் செய்யும், நீதியே நீயே கேள்!

பின்பு, விசேட விமானம் நடராசா அவர்களையும் பொலீசாரையும் ஏற்றிப் பறந்து, ரத்மலானையடைந்தது; பின் எங்களது நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார்.

நேற்று உங்கே—அதாவது யாழ்ப்பாணம் பூராவும் ரிக்கற் இல்லாது மக்கள் பிரயாணஞ் செய்கின்றனராம். பொலீஸ் ஸ்தானங்கள் நிறைய, ரிக்கற் இல்லாது பிரயாணஞ் செய்தனராம். கன்னைக் குறிப்பிடக் கூடிய சிறப்புடன் இப்போராட்டத்தில் ஈடுபடுகின்றதாம். ஒத்துழையாமை இயக்கத்திலிதுவும் ஒரு வழியாகும். அடி, உதை, குண்டு, சிறை, அவசரகால நிலை.........என எத்தனையோ அச்சமூட்டும் சாதனைகள் ஆட்சி புரிந்துமென்ன......மக்கள் எழுச்சி கொண்டால், நாட்டுப்பற்றுடன் புரட்சிசெய்ய ஆரம்பித்தால்......அரசு தூளாகும். இது வரலாறு காட்டும் பேருண்மை!

நேற்றுத்தான் உன் அம்மாவுக்கு ஓர் மடல் எழுதிக் கொடுத்தேன். இரகசியப் பொலீஸ் பகுதி எப்போது சேர்ப்பிக்குமோ தெரியாது.

இன்று நல்லூர்ப் பிரதிநிதி ஈ. எம். வி. நாகநாதன் அவர்கள் கைதாகி எம்முடன் வந்து சேர்ந்தார். சிவசிதம்

### புதுமைலோலன்

பரம் காயப்பட்டாலும் சுகமேயிருக்கும் செய்தி, நாகநாதன் மூலம் உறுதியாகியது.

"நாகநாதன் அவர்களைப் பார்த்து இத்தனை நாட்களும் எங்கேயிருந்தீர்கள்" எனக் கேட்டேன்.

அவர் ஒரு அருமையான—கேட்க ஆச்சரியமடையக் கூடிய சம்பவத்தைக் கூறினார். அச் சம்பவத்தை நீயும் அறியத்தானே வேண்டும்.

அரசியல் போராட்டங்களின் போது, எத்தனையோ தலைவர்கள் தலைமறைவாக விருந்து, ஆட்சியை அசைத்திருக்கின்றனர் அல்லவா? அப்படித்தான் நாகநாதனும் செய்ய எத்தனித்தாரோ என எண்ணுகின்றாயோ!

இல்லை!

அவசரகால நிலை ஏற்படுத்திய பிறகு பாராளுமன்றம் கூடி அவசரகால நிலை ஏற்படுத்தப்பட்டமையைச் சபைக்குத் தெரிவிக்க வேண்டியதும், வாதிக்கவேண்டியதும் கடமையாகும். அப்பாராளுமன்றத்தில் பங்கு கொள்ளவேண்டுமென நாகநாதன் அவர்கள் விரும்பினார். கைதாகு முன்பு, பாராளுமன்றத்தில் முழு உண்மைகளையும் கூற ஒரு வாய்ப்பைப் பெற முனைந்தார்.

நாகநாதன் அவர்களும், சிவசிதம்பரம் அவர்களும் மாறு வேடம் போட்டனர். நாகநாதன் ஒரு பாதிரியாக மாறினார். வழுக்குத்தலையும், அவரது தோற்றமும் பொருத்தமாக அமைந்ததாம். சிவசிதம்பரம் ஒரு சாதாரண தொழிலாளி போல உருமாறினாராம். சனங்கள் குறைந்த கோண்டாவில் புகையிரத ஸ்தானத்தில் புகைவண்டி எடுத்துக் கொழும்பு சென்று, நேரே பாராளுமன்றத்துள் நுழைந்துவிடத் திட்டம். பாராளுமன்றத்தினுள் வைத்து ஒரு பிரதிநிதியைக் கைது செய்யமாட்டார்களாம். கோண்டாவில் ஸ்தானத்திலிருந்த யாருமே இவர்களைப் புரிந்து கொள்ளவில்லையாம். நாகநாதன் அவர்களும் அடிக்கடி தனது [illegible] சென்ற சாதாரணமாய் போல் நடந்து கொண்டாராம்.

எப்படி வாய் ஆட்டினார் என்பதை எமக்கு ஆட்டிக் காட்டினார்......ஆமாம்! எங்களைய நியாயமே சிரித்தோம். பொருத்தமாகச் செய்தார் வாயசைவை—

புகைவண்டி ஓடாது; ஊரடங்குச் சட்டம் அல்லவா? என்றாராம் ஸ்ரேசன் அதிபர். உடனே, சிறு சிறு வீதி வழியே மோட்டார் வண்டிமூலம் பிரயாணத்தை ஆரம்பித்தனராம். பூநகரியூடாக மன்னாரிப்பாதையடைந்து, புத்தளம் வழியாகக் கொழும்பையடைய எண்ணிப் புறப்பட்டனராம். பூநகரிக்கப்புறம் எங்குமே காவல், இராணுவ நடமாட்டம். எனவே பாராளுமன்றம் போகும் எண்ணம் தடைபட்டது. இரண்டு, மூன்று நாட்கள் தங்கி மிக முக்கியமான, கட்சித் தொண்டுகளைச் செய்து கொண்டனராம். பின்பு நல்லூரில், அவரது சொந்த வாசஸ்தலத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டாராம்.

இன்று எங்கள் தடுப்புக் காவலைச் சுற்றிக் கம்பி வேலிகருள் கருளாக அடைக்கின்றார்கள், ஐயகோ எத்துணை பாதுகாப்பு......—ம்ம்! செய்யட்டும். இன்று பொலீசார் முழுப்பேரும் மாற்றப்பட்டுள்ளனர். பொலீஸ் மூலம் எதையாவது கைதிகள் செய்து விடுவரென்ற அச்சமோ என்னமோ தெரியவில்லை. பார்த்த பொலீஸ் முகங்களை இன் காணவில்லை. இத்தனை பொலீசாரிலும் தமிழ்ப் பொலீஸ் முகம் ஒன்றையும் சந்திக்க முடியவில்லை.

மேல்மாடியிலிருந்து தூரத் தெரியும் மலைச்செறிவு, சில தென்னை மரங்கள், இராணுவக் கட்டிடங்கள், பொலீசார்.........இவையே எங்கள் கண்கள் சந்திக்கும் காட்சிகள்.

இன்று பருத்தித்துறைப் பிரதிநிதி அவர்கள் தாலாட்டொன்று பாடினார். உன் தம்பி அன்பழகனுக்குப்பாட உதவும். வீரம் செறிந்த தாலாட்டு. இத்தாலாட்டுக்களைத் தான் பழைய தமிழ்த் தாய்மார் பாடினர். பிஞ்சு உள்ளங்களிலேயே வீரத்தை விதைத்தனர். அதனால் அன்றைய தமிழன் வீர மகனாய், விறல் கண்டான். அந்த நிலை எமது நாட்டுக்கு இன்று அவசிய தேவை. கோழை வேண்டாம்! வீரரே இன்று தேவை!

அப்படியான வீரமடந்தையாக, பண்பும் வீரமும் தன் மானமும் உள்ள பெண்ணாக உன்னை வளர்க்கவே விரும்புகின்றேன். அதே போன்று ஈழநாட்டுக் குழந்தைகளும் வீரர்களாக வளரட்டும்!

பெண்களும் அரசியலில் பங்கு கொள்ளலாமா? எனக் கேட்போரும் உளர். சத்தியாக்கிரகத்தை உற்சாகம் குன்றாது நடத்தியவர்களில் பெண்களுக்கும் அரிய பங்கு உண்டல்லவா?

இதோ எங்களுடன் தடுப்புக்காவலில் உள்ள திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள். ஈழத்துச் சரித்திரத்தில் தடுப்புக் காவலில்—அரசியல் காரணமாக-வைக்கப்பட்ட முதற் பெண் மங்கையர்க்கரசியென்றே எண்ணுகின்றேன். பெண்மையும், மென்மையும் கொண்ட ஒரு பெண்—நாட்டுக்காக, தமது இரு சின்னஞ்சிறு குழந்தைகளை விட்டு... அதுவும் பெண் பிரதமர் உள்ள நாட்டில்.........இந்நிலையா?

ம்! தடுப்புக் காவலில் உள்ளோரையெல்லாம் உனக்கு எழுதவுள்ளேனே. அப்போது மங்கையர்க்கரசி பற்றியும் எழுதுவோமே—

உன் அப்பா சுகமே உள்ளார். உன் அன்பு வதனத்தைக் கற்பனை செய்து, அதில் லயித்து......அன்பரசி என என் மூச்சுப் புறப்பட வாழ்கின்றேன். காலமே ஓடு...... மற்றவை பின்பு—

அன்பு அப்பா;
புதுமைலோலன்.

---

# இ. தி. மு. கவுடன் தொடர்பு கிடையாது

## என். வி. நடராசன் கருத்து

தமிழகத்திலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், இலங்கையிலிருக்கும் தி. மு. கவிற்கும் எதுவிதத்திலும் தொடர்பு கிடையாது. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் பிரச்சினையில் எங்களுக்கு அக்கறையும் அனுதாபமும் உண்டு. ஆனால் நேரடித் தொடர்பு எதுவுமே இல்லை என்று தமிழகத்து தி. மு. க. அமைப்புச் செயலாளர் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் எமக்கும் ஸ்தாபன ரீதியான எந்த விதமான தொடர்பும் இல்லை அங்குள்ள தி. மு. க. உறுப்பினர்களிடமோ, தலைவர்களிடமோ நாங்கள் (தமிழ் நாடு தி. மு. க) தொடர்பு வைத்துள்ளோம் என்று கூறப்படும் வதந்தியில் எள்ளளவும் உண்மையில்லை. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களிடம் மலிந்துள்ள சமூகக் கேடுகளை நீக்கவே ஆரம்பிக்கப்பட்டு, எங்கள் தொடர்பு எதுவுமின்றி இயங்கி வரும் அவ்வியக்கங்களை அரசாங்கம் தடை செய்தது நியாயத்துக்குப் புறம்பானதாகும் என்றும் திரு. நடராசன் மேலும் கூறியுள்ளனர்.

"தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வுக்காகப் போராடும் ஒரு இயக்கம் இன்று தடைசெய்யப்பட்டால், நாளை தமிழ் பேசும் [illegible] விடும் மூச்சுக்கே தடை ஏற்படுத்தப்படலாம்" என்று கூறினார்.

### தி. மு. க. தடைக்கு வாலிபர் சங்கம் கண்டனம்

'இலங்கை தமிழ் பேசும் மக்கள்பால் மலிந்து கிடக்கும் பிற்போக்குத் தன்மைகளைக் களைந்தெறிய அரும்பாடுபட்டுவரும் தாபமான தி. மு. கவை அரசாங்கம் தடைசெய்ததை வன்மையாகக் கண்டிக்கிறேும். இந்நாட்டில் வகுப்புவாதத்தை உண்டுபண்ணக் கூடிய "பாலை பெரமுனை", "ஜாதிக விமுக்தி பெரமுனை" ஆகிய நிறுவனங்கள் சுயமாக இயங்கி வரும்போது கடந்த 14 வருடங்களாக நாட்டுக்கு நல்ல பணிபுரியும் ஓர் இயக்கத்தை தடை செய்வது அநீதியாகும்' என்று கைதடி கிழக்கு வாலிபர் சங்கக் கூட்டத்தில், தி. மு. கவை தடை செய்ததைக் கண்டிக்கும் முகமாக ஒரு பிரேரணையைக்கொண்டு வந்து பிரேரித்த திரு.ச. சி. மணியம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:—

---

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் கலைப் பகுதி

# ஆடல்பாடல்காட்சி



"கருந்தை எங்கே செலுத்துகின்றாய் காரிகையே?" என்று கணேஷன் கேட்டும், கண்பார்வையை நமக்களிக்கும் சாவித்திரியைப் "பார்த்தால் பசி தீரும்" அல்லவா?

# பருவத்தின் எழில் காட்டி பரவசமூட்டிய மன்ரோ மறைந்தார்

## படாதிபதிகளின் பணப் பித்துக்கு பலியாகிய பரிதாபம்!

## ஆங்கிலப் பட உலகுக்கு ஓர் இழப்பு

ஆங்கிலச் சினிமாவானின் கட்டழகுத் தாரையாக மின்னி ஒளிவிட்ட மர்லின் மன்ரோ தனது உயிரை மாய்த்துக் கொண்ட செய்தி சினிமா உலகங்களனைத்தையும் திடுக்கிடச் செய்துள்ளது. ஏழையாகப் பிறந்து, அனாதையாக வளர்ந்து, யுத்த காலத்தில் சிறு பணிகளைப் புரிந்து, தனது கவர்ச்சியான வனப்பையும் இளமையையும், அங்கத் துடிப்புக்களையும் புகைப்பட நிபுணர்களின் ஆர்வத்துக்காக வழங்கி வாழ்க்கையை ஆரம்பித்த மன்ரோ, தனது அங்க அமைப்பையே அச்சாரமாக வைத்து திரை உலகில் புகுந்தாள். ஹொலிவூட் படாதிபதிகள் மன்ரோவின் அங்க அசைவுகளைத் தங்கள் கமிராக்களுக்குள் நுழைத்துக் கோடிக்கணக்கில் லாபம் பெற்றனர்.

லட்சக்கணக்கான டொலர்களைச் சம்பாதித்த மர்லின் மன்ரோ, தன் வாழ்நாட்களில் அமைதி எதையும் கண்டவளாகக் காணப்படவில்லை. எதையோ பறிகொடுத்தவள் போலவே காணப்பட்டாள்.

### திரை உலகக் காதல் ராணி

திரை உலகக் காதல் ராணியாகத் திகழ்ந்த மர்லின் மன்ரோ முன்னர் ஒரு பொலீஸ்காரரை மணஞ்செய்து பின்னர் விவாகரத்துப் பெற்ருள். இரண்டாவதாக ஒரு விளையாட்டு வீரரை மணந்தாள். அவரையும் விவாகரத்துச் செய்துவிட்டு ஆர்தர் மில்லர் என்ற பிரசித்தி பெற்ற நாடக ஆசிரியரைத் திருமணம் செய்து, அவரையும் உதறி எறிந்துவிட்டுத் தன்னந்தனியே வாழ்ந்து வந்தாள்.

ஒருவழிப்பட்ட மனோநிலையில்லாத இந்நடிகை, ஒப்பந்தமான படங்களுக்கு ஒழுங்காக படப்பிடிப்பில் கலந்துகொள்ளுவதில்லை என்பதனால் பல்வேறு சங்கடங்கள் ஏற்பட்டன. டீன் மார்ட்டின் என்ற நகைச்சுவை நடிகரோடு நடிப்பதாயிருந்த படத்திலும் மேற்படி காரணத்தினுல் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது.

இதன் பின்னர் மர்லின் மன்ரோவின் போக்கில் விசித்திர மாற்றங்கள் தென்பட்டதாக மன்ரோவின் நெருங்கிய நண்பர்கள் கூறுகின்றனர்.

### தொல்லை தந்த மர்மக் குரல்

தொல்லை கொடுக்கும் தொலைபேசி மர்மக் குரல்களாலும் மர்லின் மன்ரோ துன்பப்பட நேர்ந்ததாக மன்ரோவின் தாதி கூறுகிருள். அடிக்கடி அகால வேளைகளில் இனந்தெரியாத ஒரு நபர் மன்ரோவுக்குத் தொலைபேசி மூலம் தொந்தரவு கொடுத்துவந்துள்ளாராம்.

தூக்க மாத்திரைகளை தேவைக்கு அதிகமாக உட்கொண்டதனுல் மன்ரோ காலமாகியுள்ளார். தனது



சினிமாஸ் திரைகளில் வெற்றிஉலா நிகழ்த்தும் "பூலோக சுந்தரியில்" ராமகிருஷ்ணவும், கிருஷ்ணகுமாரியும்,

படுக்கையில் படுத்துக்கொண்டே தற்கொலை செய்ய வேண்டுமென்ற எத்தனத்துடன் தூக்க மாத்திரைகளை உட்கொண்டுள்ளார். அவளுடைய கையில் தொலை பேசி இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

### இறந்த காரணம் என்ன?

மன்ரோவின் இறப்புக்கான முக்கிய காரணம் என்னவென்பதை தயிட்டு கைதேர்ந்த ஆராய்ச்சி நிபுணர்கள் புலன் விசாரித்து வருகின்றனர். வாழ்க்கையில் வெறுப்புத் தட்டியமையே மன்ரோவின் தற்கொலைக்குக் காரணம் என்று இப்போது கூறப்படினும், உண்மையான காரணம் விரைவில் வெளியாகிவிடும்.

மர்லின் மன்ரோவின் மரணத்துக்குக் காரணம் 'ஹொலிவூட்' சினிமா நகரத்து அதிகாரிகளின் பண ஆசையே என்றும் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர். மர்லின் மன்ரோவின் நடிப்புத் திறமையைப் பயன்படுத்த முற்படாது, மீண்டும் மீண்டும் அவரது உடற் கவர்ச்சியைக் கொண்டு, மக்களிடையே பாலுணர்ச்சியைத் தூண்டி அதன் மூலம் கோடிக்கணக்கான பணத்தைச் சம்பாதிக்கவே விரும்பினர் ஹொலிவூட் படாதிபதிகள். தனது உடலைக் காட்டி ஊதியம் பெற விரும்பாத மன்ரோ; நடிப்பு மூலம் தனது உள்ளத்துக்கு அதிகமான முக்கியத்துவம் அளிக்க விரும்பினுர். "புகழ் இன்று இருக்கும்; நாளை போகும். அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. நான் படங்களில் 'நடிக்க' விரும்புகிறேன். என்னை மக்கள் உண்மையான நடிகை எனப் புகழ வேண்டும்" என்று அவர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் அவரது உள்ளக்கிடக்கை என்னவென்பதை எடுத்துக் காட்டுகின்றன.

பணப் பித்துப் பிடித்த படாதிபதிகளின் அளவு கடந்த ஆசைக்குப் பலியாகி விட்டார் ஓர் சிறந்த நடிகை. இந்தக் குற்றச்சாட்டை ஹொலிவூட் மீது, இறந்த நடிகையின் நண்பர்களும் மற்றும் நடிகர்களும் சுமத்தியுள்ளதுடன், ரோமாபுரியிலுள்ள கத்தோலிக்கத் திருநகரான வற்றிக்கனிலிருந்தும் வெளிவந்துள்ள அறிக்கையும் இக் குற்றச்சாட்டையே ஊர்ஜிதம் செய்துள்ளது.

எக்காரணத்துக்காக இறந்தாரோ, மர்லின் மன்ரோ இறந்து விட்டார் என்பது மட்டும் நிதர்சனம். அவருடைய அகால மரணத்தின் மூலம் சினிமா உலகம் வருத்தத்தில் ஆழ்ந்திருக்கிறது. ஆனுல், வெறும் வருத்தத்துடன் நின்றுவிடாது, சினிமா உலகம் கொஞ்சம் தனது உள்ளத்தைத்தானே ஆராய்ந்து தனது நோக்கங்களைத் திருத்திக் கொள்ள முயன்று கொண்டால், மர்லின் மன்ரோவின் மரணம் வீண் போனதாகாது.

மன்ரோ இறக்கும்போது அவருக்கு வயது ஆக 36 தான்.



நீர்கொழும்பு விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்றோர் தினவிழாவின் போது மாணவிகளால் நடித்துக் காட்டப்பட்ட "வீரத்திருமகள்" நாடகத்தில் ஒரு காட்சி.
அடுத்தபடம்; ஒரு மாணவி குறத்தி நடனம் ஆடுகின்ருர்.

# விருப்பும் வெறுப்பும்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நீலாவை அடுத்த வீட்டுக் கமலி இப்போதான் அழைத்துப் போனுள். இருளும் முன் போய் நீலாவைக் கூட்டி வந்து விடு!" சரியென்று தலையாட்டிய சாரு ராகவனையும் வழியனுப்பிக் கதவைச் சாத்திஞள். மல்லிகைச் சரத்தில் சுவாமிப் படத்திற்குச் சூட்டித் தன் தலையிலும் வைத்துக்கொண்டாள். முகத்தைக் கழுவிக் கண்களுக்கு மையிட்டு நெற்றிக்குப் பொட்டு இட்டுக் கொண்டாள். வீட்டின் உள் முற்றத்தில் உட்கார்ந்து திறந்த கூரை வழியே தெரியும் அந்தி வானைப் பார்த்தவாறு யோசனையிலாழ்ந்தாள். திடீரென்று கதவு தட்டும் ஓசை கேட்டது. சாருவின் இதயம் அடித்துக் கொண்டது. தன் உள்ளத்தை ஏதோ ஒன்று அடைத்து நிரப்புவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. மெல்ல எழுந்து சென்று கதவைத் திறந்தாள். முரளிதான் வாசலில் நின்ருன். அவனைக் கண்கொட்டாமல் பார்த்தாள் சாரு. உள்ளத்தில் நின்ற உருவமே எதிரில் தோன்றுவதுண்டு. ஆனுல் கனவில் நடக்கக் கூடியது மட்டுமே அவள் விஷயத்தில் நினைவில் நடந்துவிட்டது. சாரு மெல்லப் பின் வாங்கிஞள்.

"வாருங்கள்" அவள் கை தானுக நாற்காலியைக் காட்டிற்று. முரளி பேசாமல் நாற்காலியில் அமர்ந்தான். சாருவும் அவனெதிரே அமர்ந்தாள். அவனிடம் என்னவெல்லாமோ சொல்ல வேண்டும், கேட்க வேண்டும் என்று துடித்தாள். காலையில் அவனைக் கண்டது முதல் இந்தச் சந்திப்பைப் பற்றி என்னவெல்லாமோ கற்பனை செய்துகொண்டாள், ஆனுல் இப்பொழுதோ அவளுக்கு நாவெழ மறுத்தது ஆனுல் உணர்ச்சியின் எல்லையிலே மௌனம்தானே பாஷை?... முரளிதான் முதலில் பேசினுன்.

"என்னை அதிகமாய் வெறுக்கிருயா சாரு?" கரகரத்த குரலில் கேட்டான். சாரு சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவனுக்கே உரித்தான மிடுக்கை அவனிடம் காணவில்லை. ஏதோ ஒரு அடங்கிய தன்மைதான் அவனிடம் தென்பட்டது. சாரு கஷ்டத்தோடு மெதுவாகப் பேசினுள்.

"இல்லை. வெறுக்கவில்லை. நான்... நான் உங்களை நம்பினேன்." அவன் வரண்ட சிரிப்பை உதிர்த்தான்.

"நீ என்னை நம்பினுய்... நான் அந்த நம்பிக்கையைப் பயன்படுத்தினேன்" தனக்குத் தான் பேசிக்கொள்வது போல் பேசினுன். நெடுமூச்சோடு நிமிர்ந்தான்.

"என்னை உன்னுல் மன்னிக்க முடியாதுதான் சாரு. ஆனுல் என் அன்பு நான் அளித்த துன்பத்திற்கு ஈடு செய்யும் சாரு..." அவளைக் கெஞ்சும் கண்களோடு பார்த்தான்—"சாரு, என்னை மணந்து கொள்வாயா?" மணந்துகொள்வதா? அவன் வருவான் என்றுதானே இவ்வளவு நாளும் காத்திருந்தாள்? அவனுக்காகத்தானே ஏங்கி உருகிருள்? அவன் வந்துவிட்டான். அவள் வாழ்க்கை நிறைந்து விட்டது சாரு நிமிர்ந்தாள். உணர்ச்சி வேகத்தில் வார்த்தை தடுமாறியது. 'முரளி உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்' என்று கத்த வேண்டும் போல் தோன்றியது அவளுக்கு. சாரு வாய் திறந்தாள்—

"அம்மா! அம்மா!" குழந்தை நீலாதான் கூப்பிட்டுக்கொண்டு வாசலைக் கடந்தாள். யாரோ இருப்பதைக் கண்டதும் அவளை அழைத்து வந்த கமலி வாசலோடு போய் விட்டாள். புதிய மனிதரைக் கண்டதும் நீலா மிரண்டு நின்ருள் முரளி திகைப்போடு, சந்தேகம்மனதைக் கௌவ சாருவையும் நீலாவையும் மாறி மாறிப் பார்த்தான். சாருவின் கை நீலாவை அணைத்துக்கொண்டது. அவள் கண்களில் ஒரு வேகம் தோன்றியது.

"நான் என் கணவரோடும் குழந்தையோடும் சந்தோஷமாக வாழ்கிறேன்" தெளிவாக, அமைதியாகச் சொன்னுள்.

"சாரு!" அவன் இதய மூச்சோடு எழுந்தது அச்சொல். கண்கள் கலங்கி நீர் ஊறக் கதிரையில் முடங்கிக் கிடந்தான். சற்று நேரத்தில் எழுந்தவன் தொய்ந்த தலையோடு மெல்ல மெல்ல நடந்து வெளியேறிஞன்.

தன் கண்களில் நிறைந்த நீர் சிந்தாது இமைகளைப் படபடவென்று வெட்டித் தடுத்தாள் சாரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்களும் வாழ்ந்து நாமும் வாழ வேண்டும்

( 6-ம் பக்கத் தொடர்ச்சி)

## நாம் கேட்பது அவ்வளவுதான்!

கேட கின்றேன். எதிர்க்கட்சியினரையும் கேட்கின்றேன். காலஞ்சென்ற பிரதமருடைய பிரேதத்தைக் காட்டி வாக்குப் பெற்ற அமைச்சர்களைக் கேட்கின்றேன், சிந்தித்துப் பாருங்கள் என்று.

காலஞ்சென்ற பிரதமருடைய கொள்கையை மொழி விஷயத்திற் கைக்கொண்டு நடக்கின்றீர்களா? அவருடைய கொள்கையை அரசியலமைப்பு விஷயத்திற் கைக்கொண்டு நடக்கின்றீர்களா? சமஷ்டி அரசாங்கத்தைப் பற்றி—சமஷ்டி அரசியல் அமைப்பைப்பற்றி நாங்கள் பேசியவுடன், கனம் காங்கேசன் துறைப் பிரதிநிதி (எஸ். ஜே. வி. செல்வநாயகம்) அவர்கள் பேசியவுடன், "வகுப்புவாதிகள், நாட்டைப் பிரிக்கின்றனர்" என்று பேசுகிறீர்கள்!

உங்களுடைய இரட்சகர், உங்களுடைய குருவானவர், ஏன் உங்களுடைய கடவுள் என்று கூடச் சொல்லலாம்—புத்தருக்கு அடுத்த நிலையில் இருப்பவர், காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க, இலங்கையின் பிரச்சினைகளுக்கு ஓரேயொரு திருப்திகரமான தீர்வுகாண முடியுமாயிருந்தால் அது சமஷ்டி அரசியல் மூலந்தான் முடியுமென்று கூறியிருக்கின்றார்.

ஆனபடியால் காலஞ்சென்ற பிரதமருடைய பெயரைச் சொல்லுவதற்குக்கூட உங்களுக்கு அருகதையில்லை! அவருடைய கொள்கையைக் கொன்றவர்கள் நீங்கள் என்பதை மாத்திரம் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

### ஒப்பந்தத்தை ரத்து செய்தது ஏன்?

கனம் உபசபாநாயகர் அவர்களே! மொழி விஷயத்தில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு நியாயம் அளிக்கப்படும் என்பது காலஞ்சென்ற பிரதமருடைய கொள்கை. அந்த அடிப்படையில் 1957-ம் ஆண்டு ஜூலை மாதம் எங்கள் தலைவர் காங்கேசன் துறைப் பிரதிநிதியோடு ஒரு ஒப்பந்தம் செய்தார். காலஞ்சென்ற பிரதமரைக் கொலை செய்த அதே சக்தி இந்த ஒப்பந்தத்தைத் தகர்த்தெறியக் காரணமாயிருந்தது. 1958-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ந் தேதி காலஞ்சென்ற பிரதமரே அதனை ரத்துச் செய்ய ஏற்பட்டது. எதற்காக? புத்த குருமார், புத்தரகித தேரோவின் தலைமையில் சென்று பிரதமரின் வீட்டுக்கு முன் சத்தியாக்கிரகம் செய்த காரணத்தினால் அந்த ஒப்பந்தத்தை அவர் ரத்துச் செய்தார். காலஞ்சென்ற பிரதமரை எந்தச் சக்திகள் கொலை செய்தனவோ அவைதான் இந்நாட்டில் மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழி வகுப்பதாயிருந்த அந்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதற்கும் ஏதுவாயிருந்தன என்பதை மாத்திரம் நான் இந்தச் சபையில் எடுத்துக்கூற விரும்புகின்றேன். இந்த அரசாங்கம் அந்தச் சக்திகளுடைய கொள்கையை, அவர்களுடைய மறைந்த பிரதமரைக் கொலை செய்த சக்திகளுடைய கொள்கைகளைத்தான் கொண்டு நடத்துகின்றதே அல்லாமல் காலஞ்சென்ற பிரதமருடைய கொள்கையைக் கொண்டு நடத்தவில்லை என்பதைத்தான், குற்றஞ்சாட்டிச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆகையால், எங்களுடைய கட்சி நான்கு திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்திருக்கின்றது. இலங்கையிலுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால் சமஷ்டி அரசியல் அமைப்பு ஒன்றினால்தான் முடியுமென்பது எங்களுடைய முதற் பிரேரணை. இரண்டாவது, இந்நாட்டில் மலைநாட்டில் வாழுகின்ற பத்து இலட்சம் தொழிலாளர்களுக்குரிய உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்பது. அவர்களின் உரிமைகளுக்காகப் பாடுபடுகின்ற, உழைக்கின்ற தாபனங்களைத் தடை செய்வதன் மூலம் அவ்வுரிமைக் குரலை அடக்கிவிட உங்களால் முடியாது. இம்மக்களுடைய குறைபாடுகள் திரும்வரை அவற்றுக்காகப் பாடுபடும் இயக்கங்கள் இருந்தே தீரும். இம்மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளருடைய உரிமைகள் வழங்கப்பட வேண்டும். கனம் வெலிமடைப் பிரதிநிதி குறிப்பிட்டார் இவர்கள் எல்லோரையும் திருப்பி அனுப்பவேண்டுமென்று. நீங்கள் எப்பொழுதிலிருந்து வந்தவர்களைத் திருப்பி அனுப்பப் போகிறீர்கள்? மகாவம்ச காலத்திலிருந்து நீங்கள் இவர்களைத் திருப்பி அனுப்பப் போகின்றீர்களா? விஜயனோடு கள்ளத் தோணியில் வந்தவர்களிலிருந்து திருப்பி அனுப்பப் போனால், இந்நாட்டில் எஞ்சியிருப்பவர்கள் இலங்கைத் தமிழர்களாகிய நாங்கள் மாத்திரந்தான் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

### வெலிமடை எம். பி. முதலில் போவார்!

2,500 ஆண்டுகளுக்குமுன்னிருந்து திருப்பி அனுப்பத் தொடங்கினால் இந்நாட்டில் இலங்கைத் தமிழர்கள் என்று கூறுகின்ற எங்களைத் தவிர வேறெவரும் எஞ்சியிருக்க மாட்டார்கள். கனம் வெலிமடைப் பிரதிநிதி விரைவில் போகவேண்டியிருக்கும், கனம் சபைமுதல்வர் அவர்கள் அதிசீக்கிரம் போகவேண்டியிருக்கும். அவரின் முன்னோர்களும் ஒரு காலத்திலே தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் தாம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்நாட்டுக்காக உழைத்து காடுகளையும் மேடுகளையும் திருத்திப் பண்படுத்திச் சிறந்த தேயிலைத் தோட்டங்களாகவும் இறப்பர்த் தோட்டங்களாகவும் ஆக்கிய இவர்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமாம். சர்வதேசச் சட்டத்தின்படியும் அவர்களை அனுப்ப முடியாது. பொய்யான சட்டங்களை கனம் வெலிமடைப் பிரதிநிதி எடுத்துக் காட்டினார். உண்மையான சருவதேசச் சட்டத்தின்படி அவர்களைக் அனுப்ப முடியாது. அவர்களும் வாழத்தான் வேண்டும். அவ்விதம் அவர்கள் தாங்கள் வாழவேண்டிய உரிமை கிடைக்கும் வரைக்கும் கிளர்ச்சி செய்தே தீருவார்கள்.

### தமிழ் பேசும் மக்களின் தாயகம் இது

அடுத்த திருத்தப் பிரேரணை, மொழியைப் பற்றிக் கூறுகின்றது. இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இன்று நேற்று வந்தவர்கள் அல்லர். பரம்பரை பரம்பரையாக இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டவர்கள். அவர்களின் மொழி இந்நாட்டின் ஆட்சி மொழியாகத் தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கின்றது. வெள்ளையர் [illegible] கைப்பற்றிய பொழுது கண்டியச் சாசனம் கையெழுத்திடப்பட்டபோதும் அது தமிழில்தான் கையெழுத்திடப்பட்டது. கடைசிக் கண்டிச் சாசனத்தில் தமிழில் கையொப்பமிட்ட பெயர்களில் "மொலிகொடை" என்பதும் ஒன்றாகும். அந்த நேரத்தில் இலங்கை முழுவதும் தமிழ் ஆட்சி மொழியாக இருந்தது.

இதைக் காரணமாகக் கொண்டு சிங்களத்துக்கு இடம் தேவையில்லை; தமிழுக்குத்தான் இடம் வேண்டுமென்று நான் கேட்கவில்லை. நீங்களும் வாழ வேண்டும், நாமும் வாழ வேண்டும். சிங்களமும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்; தமிழும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் நீங்கள் இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைக் காண விரும்பினால், இந்நாட்டை விருத்தி செய்ய விரும்பினால், இந்நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க விரும்பினால், உயரும் வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டுமென்று விரும்பினால், முதன்முதல் இவ்வித அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் இந்நாட்டில் தமிழ் பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் சகோதரர்களாக சமத்துவம் பெற்று வாழ வழி செய்ய வேண்டும். அதில்தான் நாட்டின் சுபீட்சம் தங்கியிருக்கின்றது. அதில்தான் நாட்டின் எதிர்காலப் பொருளாதார வளம் தங்கியிருக்கின்றது. நாட்டின் பொருளாதார வளத்துக்குத் தடையாயிருக்கும் பிரச்சினையைத் தீருங்கள். தனிச் சிங்களச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்துவோம் என்று பெருமை பாராட்டுவதனால் இப்பிரச்சினைகள் தீரப்போவதில்லை. இந்தப் பிரச்சினை, தமிழ் மொழிக்கு உரிமை கொடுக்கும் வரைக்கும் இருந்துகொண்டேயிருக்கும்.

மலைநாட்டுத் தமிழ் மக்களின் நலனுக்காக உழைக்கும், அவர்களின் பண்பாட்டுக்காக, வாழ்க்கை வளத்துக்காக உழைக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தை நீங்கள் தடை செய்தாலும் மக்களின் உணர்ச்சியைத் தடை செய்ய முடியாது. சுதந்திரம் பெற வேண்டும், உரிமை பெற வேண்டும், சமத்துவம் பெற வேண்டும் என்று மக்கள் தீர்மானித்து விட்டால் எந்தச் சக்தியாலும் அதைத் தடை செய்ய முடியாது என்று அரசாங்கத்துக்குக் கூற விரும்புகின்றேன்.

### வதைகளைத் தாங்குபவரே வெற்றி பெறுவர்

எம்மைப் போன்ற நிலையிலிருந்து தமது விடுதலைக்காகப் போராடிய அயர் தேசத்து வீரமகன் ஒருவன் கூறிய வசனத்தை ஆங்கிலத்தில் கூறி என் பேச்சை முடிக்க விரும்புகிறேன்.

"This contest is one of endurance, and it is not they who can inflict most but they who can suffer most who will conquer."

இந்தப் போராட்டம் எவ்வளவு தூரம் நம்மால் தாங்க முடியுமோ, அவ்வளவு தூரம்—மரணம்வரையில்—நடக்கும். இந்த வதைகளை எம்மால் எவ்வளவு தூரம் தாங்க முடியுமோ அவ்வளவு தூரம் இந்தப் போராட்டம் நடக்கும். இந்த வதைகளைச் செய்பவர்களல்ல, செய்யப்படுவதைத் தாங்குபவர்களே கடைசியில் போராட்டத்தில் வெற்றி பெறுவார்கள்.

1956-ம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து, காலிமுக கடற்கரையில் சத்தியாக்கிரகம் நடத்திய நாங்கள் கல்லால் அடிபட்டோம். பின்பு சிறையிலே தள்ளப்பட்டோம். எங்கள் கட்சியும் தடை செய்யப்பட்டது. எவ்வளவுதான் செய்தாலும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் நியாயமான உரிமைகள் கிடைக்கும் வரைக்கும், நீதி கிடைக்கும் வரைக்கும், எமது இயக்கம் நடந்துகொண்டேயிருக்குமென்பதைக் கூறி என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

---

# தமிழ் மக்கள் வாழ்வு நலம்பெற தீண்டாமை ஒழிய வேண்டும்

## கட்சிப் பாகுபாடற்ற சேவை தேவை

## தீண்டாமை ஒழிப்புக் குழுச் செயலாளர் திரு. ஜே. ச. சுந்தரம் வேண்டுகோள்

தீண்டாமைப் பிரச்சினை தமிழ் பேசும் மக்கள் சமுதாயத்தின் முக்கிய பிரச்சினையாகும். தமிழ் சமுதாயம் அரசியல் பொருளாதாரத் துறைகளிலே நல்வாழ்வு பெற இச்சாபக்கேடு அற்றுப் போக வேண்டும் என்பது ஆராயும் அறிவு படைத்த தமிழன் ஒவ்வொருவனும் உணர்ந்துள்ள காலம் இது. தீண்டாமை ஒழிப்புக் குழுவின் இணைச் செயலாளர்களுள் ஒருவரான திரு. ஜே. ச. சுந்தரம் இவ்வாறு ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும்: 'இப்பிரச்சினையை கட்சிப் பாகுபாடு இன்றித் தீர்த்து வைக்கும் நோக்குடனேயே தீண்டாமை ஒழிப்புக்குழு சகல கட்சித் தலைவர்களையும் அங்கமாக கொண்டிருக்கின்றது. இச் செயற்குழுவிலே பரஸ்பர ஒற்றுமையும், நல்லெண்ணமும் காணப்படுவதினால் இச்சபை செவ்வனே செயல் புரியும் என்பதற்கு அறிகுறிகள் காணப்படுகின்றன' என்று கூறப்பட்டுள்ளது.

6—7—1962-ல் நியமிக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு செயற்குழு 13—7—62-ல் கூடி தீண்டாமை ஒழிப்புக்கு எடுக்க வேண்டிய ஆரம்ப எத்தனங்களை செய்யுமாறு செயலாளரைப் பணித்தது. [illegible] அறிக்கைக் கேற்ப செயல் புரிய இம்மாதம் 11-ந் திகதி இச் செயற்குழு கூடுகின்றது.

### கோரிக்கைகள்

சமூகக் குறைபாடுகளை ஒழிக்கச் செயலில் இறங்குவதற்கு முதன்மையாக அமைந்துள்ள ஆரம்ப வேலைகள்: பாடசாலையிலே மாணவர்கள் கல்வி பயிலும் போதே சாதி பாகுபாடு நிலவுவதாக அறிய இயலாத வண்ணம் பள்ளிக்கூடத்திலே போதனைகளிருக்க வேண்டும்; அதற்காகப் பாடசாலை அதிபர்களையும் தலைமை ஆசிரியர்களையும் பணிக்குமாறு யாழ்ப்பாணகல்வி அதிகாரியைக் கேட்டுக் கொள்ளுவது; பத்திரிகைகள் மூலம் இடைவிடாது பிரசாரம் செய்வது; ஸ்தல ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பைக் கோரி முயற்சி எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.'

இந்திய துணைக் கண்டத்திலே தீண்டாமை பிரச்சினை தலைதூக்கிய போது மதிப்புக்குரிய உத்தமர் காந்தி அடிகளே தீண்டாமை ஒழிப்புக்குத் தலைமை தாங்கினார். இம் முயற்சிக்கு ஓர் பத்திரிகை இன்றியமையாதது என்பதை அவர் உணர்ந்தார். 'ஹரிஜன்' பத்திரிகையை ஆரம்பித்தார். இதற்காக உழைக்க ஒருநிறுவனம் தேவை என்பதை உணர்ந்து 'ஹரிஜன சேவா சங்கத்தை' ஆரம்பித்தார். சேரியிலேயே தனது ஆச்சிரமத்தை ஆரம்பித்தார். சாதியிலே குறைந்த குடும்பத்திலிருந்து பிள்ளைகளை எடுத்து, தன்னுடன் வைத்து வாழ்ந்தார். தீண்டாமை ஒழிப்பிற்கு இப்படிப்பட்ட வழிவகைகளைக் கையாளத் தமிழ் சமுதாயத்திலே உள்ள பெரியார்கள் முன்வர வேண்டும்.

தீண்டாமை ஒழிப்புக்குழு சமூகத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறது. நடவடிக்கைக் குழு மீண்டும் இம்மாதம் 11-ந் திகதி கூடுகிறது. ஆகவே இப்பணியிலே ஈடுபாடுடைய பெரியார்கள் எல்லோரும் தங்கள் ஒத்துழைப்பைத் தருமாறு வேண்டுகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அன்புள்ள தம்பிக்கு........

அன்புள்ள தம்பி,

முதலில் என் அன்பின் ஆசியையும் வாஞ்சையின் தாழ் தமிழ் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நீ அனுப்பிய அஞ்சல்களிரண்டும் கிடைத்தன. நன்றி. அதைப் படித்ததும் அழுவதா அல்லது சிரிப்பதா என்று கூடத் தெரியவில்லை.

இருவருமே அரசாங்க உத்தியோகத்தர்கள். நீ சொந்த ஊரிலேயே தொழில் புரிபவன்; நான் பல மைல்கள் கடந்து வந்து தொழில் புரிகின்றேன். இதுதான் வேற்றுமை. நானும் தமிழன்; நீயும் தமிழன், நமது மொழியோ தமிழ். இந் நிலையில் நீ கேட்டிருக்கும் கேள்வியைப் பார்த்தால் ஒரு புறம் வேதனையாகவும், மறு புறம் வெட்கமாகவும் இருக்கின்றது. நீ கேட்டிருப்பது முற்றிலும் தவறானதொரு கேள்வி. 'நீ ஆங்கிலம் கற்றது உன் விருப்பத்திற்குத் தானே? அப்படியிருக்க நான் சிங்களம் கற்றாலென்ன?' என்று ஏன் என்னிடம் மறைத்து மறைமுகமாக கேட்டிருக்கின்றாய்? எனக்குத் தெரியாதா என்ன? நானும் அரசாங்க உத்தியோகத்தன் தானே! 'சிங்களம் கற்க வேண்டும் என்று அரசினர் வற்புறுத்துகின்றனர்; கற்காவிட்டால் வேலை போய் விடும், கற்கவா?' என்று கேட்பதற்குப் பதிலாக மறைமுகமாக அப்படிக் கேட்டுவிட்டாய் அல்லவா?

இது அவரவர் விருப்பம் என நான் பதில் இறுக்க மாட்டேன். ஏனெனில் மொழிப்பற்று இருக்கின்றதே அது எதையும் செய்யத் தூண்டும். இங்கு எனக்குக் கூட,

சிங்களம் தான் படித்திட
வேண்டு மென்று
சில நாளாய்ப் பெருந் தொல்லை
ஓயவில்லை
ஆபிசர் அழைக்கின்றார் அடிக்
கொரு தரம்
அவருக்கும் பதில் சொல்லி
ஓயவில்லை!

இந்நிலையில் சொந்தவூரில் வசிக்கும் நீ வேலை போய் விடுமோ என்று பயந்து சிங்களம் கற்கவே கூடாது என் பதுதான் எனது கருத்தும் அறிவுரையும்;

வேலை போய் விட்டாலும்
வெறுமனே வாழ்ந்திட்டாலும்
கெஞ்சி நான் வாழமாட்டேன்
கேவலம்; ஐயோ வெட்கம்!

இது எனது கொள்கை. இதை நீயும் மனதிற் கொண்டு செயலில் இறங்க வேண்டும் என்பதுதான் எனது அவாவும் ஆசையும் கூட.

பிறரது மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றைக் கற்பதோ, பின்பற்றுவதோ தவறல்ல. ஆனால், பலாத்காரத்திற்கு மட்டும் அடிமையாகக்கூடாது. ஏதோ மொழிப் பற்று தலைக்கேறி அண்ணன் உளறுகின்றானே யென்று எண்ணாதே. உண்மையைத் தான் கூறுகின்றேன். இதை எதிர்த்து உயிர்விடவும் தயாராகவிருக்கின்றேன்;

கொடுந் துயரைச் சகிப்பதற்கும்
உறுதியுண்டு
கோழையாய் வாழ்வதற்கோ
அஞ்சுகின்றேன்
உடலென்ன விலையுயர்ந்த
வைரக் கல்லா?
உயிர் பிரியின் நரி தின்னும்
பண்டந்தானே!

இதற்காகவா நாம் அஞ்சி வாழ வேண்டும்? நமது முன்னோர்கள் கோழைகளல்ல. அவர்களது வீரத்திற்கு மாசுகற்பிக்கும் விதத்தில் நாம் நடந்து கொள்ளவே கூடாது. நமது உடல் பெரிதல்ல; மானம் தான் பெரிது, மொழிதான் பெரிது.

கோமான்கள் வாழ்ந்த இந்நாட்டில் காட்டிக் கொடுக்கும் கோழைகளும், ஆள்வோருக்குப் 'பந்தம் பிடித்து' அவர்களுக்கு அடிமையாகி வாழ்வோரும் இருக்கத்தான் செய்கின்றனர். எனக்கு மட்டும் நெற்றிக் கண்ணிருந்தால்........

ஏனின்னும் இவ்வளவு தயக்க
மென்று
என்னாலே அறிய முடியவில்லை
விடிந்தவுடன் பிரிக்கின்றேன்
பத்திரிகையை
வரவில்லை வரவில்லை இச்செய்தி
மட்டும்
ஏன்தான் தாமதமோ
போராட்டத்திற்கு
எங்கள் தமிழன்னை துயர்
துடைப்பதற்கு

ஆமாம்! உடனே போராட்டம் தொடங்க வேண்டும். நாம் தயங்கித் தயங்கிச் சிங்களம் கற்றோமானால் நாம் நம் தமிழன்னைக்குத் துரோகம் செய்பவர்களாவோம்.

இனிப் பொறுக்க மாட்டேன்
நான் ஒரு கணமும்
ஈழமணித் திருநாட்டின்
துரோகந்தன்னை
விரைவினிலே போராட்டம்
தொடங்காவிட்டால்
வேலையையே ராஜினாமா
செய்வேன் உண்மை.

ஆமாம்! எவ்வளவு ஆத்திரம், எனக்கு நெஞ்சம் குமுறுகின்றது. நேர்மை அதற்குத் தடை போகின்றது. அதற்குத் தடையாக இருப்பது ஒன்றே ஒன்றுதான். அந்தத் தடையை நீக்க எங்கள் தந்தையால் தான் முடியும். அவர் மட்டும் வாய்திறந்து ஒரு சொல் சொல்லட்டும்.

எங்கள் தந்தை எழிலரசர்
செல்வர் ஐயா!
என்னதான் சொல்லிடினும்
ஏற்றிடுவோம்
பலாத்காரம் பிரயோகித்தால்
அரசினர்கள்
பாய்ந்திடுவோம் புலிபோல
உண்மை, உண்மை

ஆமாம் தம்பி! எதற்கும் தயாராகத்தான் இருக்கின்றேன். சிங்களம் படிக்காதோரை அவர்கள் பலாத்காரப்படுத்தினால் எதிர்க்கவும் தயாராக உள்ளேன். வேலை போனாலென்ன? வேளாண்மை காத்திருக்கின்றது. உள்ளத்தில் உறுதியிருக்கின்றது. விரைவில் ஒரு போராட்டம் தொடங்குமாயின் அந்த அணிவகுப்பில் முதல் நபராக நான் தான் இருப்பேன்.

என் கோரிக்கையும், எண்ணமும், உன் மனதிற்கும் பொருந்தும் என எண்ணுகின்றேன். மிகுதி உன்னோடு பார்த்துச் செய், கோழையாகி விடாதே.

அன்புத்தமிழ் வணக்கத்துடன்,

உனது அண்ணு,
தமிழரசன்.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து 'வளர்மதி' C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 5

பெயர் ______

பாடசாலை ______

விலாசம் ______

______

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் ______ கையொப்பம் ______

## மழைத்துளி!

— சிப்பிரியன் —

முத்துப்போன்ற மழைத்துளி!
முகில்கள் சிந்தும் மழைத்துளி!
சத்து நிறைந்த உணவினைச்
சகத்திற் பெருக்கும் மழைத்துளி.

செடியைக் கொடியை மரத்தினைச்
செழிக்கச் செய்யும் மழைத்துளி!
இடியை மின்னைக் கண்டுதான்
இங்கு பயந்து வந்ததோ?

கான மயில்கள் ஆடவே
களிப்பை ஊட்டும் மழைத்துளி!
வானில் வாழுந் தேவர்கள்
வழங்கும் அமுதின் சாரமோ?

ஆற்றில் பாய்ந்து செல்வதும்
ஆழி நிறையச் சேர்வதும்
ஊற்றில் ஊறி வழிவதும்
உருவிற் சிறிய மழைத்துளி.

பெரிய பெரிய மலைகளைப்
பிளந்து பிளந்து மணலெனச்
செறிய வைக்கும் தொழிலினைச்
செய்யும் வலிய மழைத்துளி.

பயிரை வளரச் செய்வதால்
பருகும் நீரும் ஆவதால்
உயிரை வாழச் செய்வதால்
உலகில் தெய்வம் மழைத்துளி.

மண்ணில் நீராய் வீழ்வதும்
வானில் முகிலாய்த் தவழ்வதும்
எண்ணில் எதற்கும் பிறவிகள்
இருப்பதென்ப துண்மையே.

அளவிற் சின்ன மழைத்துளி
ஆற்றல் மிகுந்து திகழ்வதால்!
வளருந் தம்பி தங்கைகாள்!
வாழ்க நீங்கள் அஃதுபோல்.

## கண்டேன் அறப்போரை

தி. மதுரம், அளவெட்டி

சரித்திரப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாண நகரிலே தமிழ் மக்கள் மானத்தையும் உயிரினும் இனிய சுதந்திரத்தையும் காப்பதற்காக படைகளையும் உள்நாட்டு விரோதிகளையும் எதிர்த்து அறப்போரில் ஈடுபட்டனர்.

கச்சேரி முன்னே தமிழ்நாட்டின் பெண் தெய்வங்கள் என்று போற்றும்படி பெண்கள் இருந்து பாடல்கள் படிக்கின்றனர். பஜனைகள் ஓதுகின்றனர். பசியையும் வெயிலையும் பொருட்படுத்தாது அவர்கள் வருங்காலத் தமிழர்கள், அதாவது, தமது சந்ததியினருக்காகத் தங்கள் உயிரையும், அர்ப்பணித்துச் சுதந்திரத்தையடைய முயல்கின்றார்கள்.

பாடல்கள், பஜனைகள், "அரோகரா" என்ற ஒலி. சிறு குழந்தைகள் முதல் வயது முதிர்ந்த பாட்டி பாட்டன் வரை கடவுளை வேண்டித் தேவாரம் ஓதுகின்றனர். இந்தக் காட்சியைக் கண்ணால் கண்ட எவரும் கண்ணீர் விடத் தவற மாட்டார்கள்.

இரவு பகலாகத் துதித்த வண்ணமாக இருப்பார்கள். இப்படித் துதித்தவண்ணம் இருக்கும் பெண்களைப் பார்த்தால், பெண் தெய்வங்களா? என்று வியக்கத் தக்கதாக இருந்தது. இடையிடையே ராணுவ லொறிகள் செல்லும் போதும் அவர்கள் தங்கள் பாடல்களைக் குறைக்கவேயில்லை. 'சுற்றி நின்று சுட்டு வீழ்த்தச் சட்டம் வந்த போதிலும் வெற்றியுண்டு-வெற்றியுண்டு போரிலே', என்று முழங்கினார்..

கச்சேரிக்கு எதிர்ப்பக்கத்தில் ஆண்கள். அவர்கள் தூய வெண்மை நிறைந்த உடையுடன் நின்றுகொண்டும், இருந்து கொண்டும், சத்தியாக்கிரகம் செய்தனர். ஒவ்வொரு தொகுதி மக்களாகக் கூட்டமாக வருவார்கள். பண முடிப்பு, அரிசி முதலிய பொருள்களும் கொண்டு, கறுப்புக் கொடியுடன் வரும்போது "தூக்கு மேடை பஞ்சு மெத்தை" என்று பாடிக் கொண்டே வருவார்கள்.

இப்படியாக இருந்தது தமிழரசு அறப்போர். இந்த அறப்போரைப் பார்த்தவர்களில் கண்ணீர் விடாதவர்கள் இல்லை. இந்த அறப்போரில் யாழ்ப்பாண மக்களது இன ஒற்றுமையைக் காண முடிந்தது. எவ்வளவு ஒற்றுமை!

எனவே அவர்கள் இந்த ஒற்றுமையுடன் தங்கள் சுதந்திரத்தையும் பெற வேண்டும் என்றும், தந்தை செல்வா பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

## வளர்மதி புதிய மருமக்கள்

3471 க. அருளானந்தம், மட்டக்களப்பு.

3472 ஆ. கந்தையா, மாத்தளை.

3473 ச. கனகலெட்சுமி, சுந்துளாய்.

3474 க. அன்னம்மா, கல்லாறு.

3475 வெ. மீனும்பிகை, உரும்பராய்.

3476 [illegible] பருத்தித்துறை.

3477 சி. திருமேனி, எட்டியாந்தோட்டை.

3478 வெ. கறுப்பையா, கண்டி.

3479 த. தங்கவேல், திருநெல்வேலி.

3480 ச. சுப்பிரமணியம், கைதடி.

3481 வே. கண்மணி, கைதடி.

3482 மு. வ. சிதம்பரநாதன், வட்டுக்கோட்டை.

3483 இ. கந்தசுவாமி, அச்சுவேலி.

3484 கி. ப. சச்சிதானந்தம், மட்டக்களப்பு.

3485 (செல்வி) க. சீனிப்பிள்ளை, இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### பெற்றார்-ஆசிரிய சங்கக் கூட்டம்

நிலாவெளி மெ. மி. பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் ஆசிரியமணி திரு. கே. எம். சிதம்பரப் பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராசவரோதயம் அவர்கள் பேசுகையில் "இப்பாடசாலையில் ஓர் விஞ்ஞானக் கூடம் அமைக்க என்னால் இயன்ற உதவி செய்வேன். இப்பாடசாலையில் சைவப் பிள்ளைகளுக்கு சைவசமயப் பாடமும், முஸ்லிம் பிள்ளைகளுக்கு முஸ்லிம் மதப் பாடமும் தனித் தனியே கற்பிப்பது இரு சமூகத்தினரதும் ஒற்றுமையையும, நல்லெண்ணத்தையும் வளர்க்க உதவும்." எனக் கூறினார்.

நிலாவெளி கி. ச. தலைவர் திரு. நா. கனகசபை ஜே. பி, கி. மு. ச. தலைவர் திரு. க. சுதிரவேற்பிள்ளை, க. முருகேசு ஆசிரியர், காரியதரிசி ப. வேலாயுதம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். தமிழ் மொழி வாழ்த்துடன் கூட்டம் முடிவுற்றது.

---

### மாத்தளை மகாத்மா காந்தி சபை

மாத்தளை மகாத்மா காந்தி சபையின் செயற்குழு 5-7-62 வியாழக்கிழமை மாலை கூடி காந்தி சபை செயல்பட வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றி ஆராய்ந்தது. காந்தி சபையின் பொதுச் செயலாளர் திரு. கிருஷ்ணன் அவர்கள் தமக்குரிய கடமைகளைப் புறக்கணித்தும், மறந்தும் பொறுப்பற்ற முறையில் நடக்கிலுர் என்று குற்றஞ்சாட்டப்பட்டார். அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமுகமாக அவர் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது. திரு. கிருஷ்ணன் அவர்கள் காந்தி சபை நிர்வாகத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அவர் ஸ்தானத்துக்குப் புதிய பொதுச் செயலாளராக திரு. பிலிப் சத்தியசீலன் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

---

### தமிழர் முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டம்

வெள்ளிக்கிழமை 27-7-62-ல் நடைபெற்ற தமிழர் முன்னேற்றக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

(1) பன்னெடுங்காலமாக தமிழர் பிரதேசமாக இருந்து வருகின்ற பகுதிகளை அரசாங்கத்தினர் சிங்களமயமாக்கிக் கொண்டு வருகின்றது. இந்த நோக்கிலே திருகோணமலையில் உப்புவெளி எனும் இடத்திலுள்ள ஒரு பகுதிக்கு ஸ்ரீயாபுரம் எனப் பெயர் வைக்கப் பட்டிருப்பதை இக் கழகம் வன்மையாகக் கண்டிப்பதுடன் உடனடியாக இந்தப் பெயரை மாற்றி ஒரு தமிழ்ப் பெயரைச் சூட்டும்படி நகராண்மைக் கழகத்தைத் தமிழர் முன்னேற்றக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

(2) பகுத்தறிவையும் மறுமலர்ச்சியையும் ஊட்டி வந்த திராவிட முன்னேற்றக் கழகம் தடை செய்யப்பட்டது இலங்கையில் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அரசாங்கம் கையாளுகின்ற இச்சர்வாதிகாரப் போக்கை கைவிடும்படி கேட்டுக் கொள்வதோடு, தி. மு. கவுக்கு விதித்துள்ள தடையை உடனடியாக நீக்கும்படி த. மு. கழகம் வேண்டிக் கொள்கிறது.

(3) மக்கள் வாழ்க்கைக்கு பெரும் இடையூறு தருவதாகவும் இன்னல் விளைவிப்பதாகவும் ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வை கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. பங்கீட்டு அரிசி வெட்டை நீக்கி இரண்டு கொத்து அரிசியையே தொடர்ந்து கொடுத்து வரும்படி கேட்டுக் கொள்வதோடு, மக்கள் மீது விதித்துள்ள வரிப் பளுவை நீக்கி, அவர்களது வசதியான வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் திட்டம் வகுத்துச் செயலாற்றுக என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

(4) இலங்கைப் பிரஜைகளல்லாதவர்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசி, மருத்துவ வசதி, கார் செலுத்தும் அனுமதி ஆகிய உரிமைகளை மறுக்க வேண்டும் என்று பதுளை நகரசபையில் வரவிருக்கின்ற தீர்மானத்தை த. மு. கழகம் வன்மையாகக் கண்டிப்பதோடு அத் தீர்மானத்தைத் திருப்பிப் பெறுமாறும் வேண்டிக் கொள்கிறது.

---

### மட்டுநகர் செபஸ்தியார் விளையாட்டுக் கழகம்

மிகச் சமீபத்தில் தான் முத்தமிழ் காவலர் திரு. எம். எஸ். பாலு அவர்களைத் தலைவராகக் கொண்டு, நிறுவப்பட்டதான புளியடிக்குடா அர்ச்-செபஸ்தியார் விளையாட்டுக் கழகத்தாருக்கும், மட்டுநகரில் பலம் வாய்ந்ததும், புகழ் பெற்றதுமான, "யுனைட்டற்" (பீ) கோஷ்டியினருக்கும் மட்டுநகர் மைதானத்தில் நடந்த சினேகபூர்வமான உதை பந்தாட்டத்தில் அர்ச்-செபஸ்தியார் கழக வீரர்களின் ஆரம்ப விளையாட்டென்றாலும், 'யுனைடெட்' கோஷ்டியினரின் பலத்த தாக்குதல்களை யெல்லாம், மிக மிக இலகுவாகச் சமாளித்து, இடைவேளைக்குப் பின், முதலாவது கோலையும் போட்டது.

போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது(1-1).

செபஸ்தியார் கழக வீரர்களுக்கு, "ஆட்லண்ட்" ஹோட்டலில், எம். எஸ். பாலு அவர்களால் ஒரு மதனிர் விருந்து அளிக்கப்பட்டது. அவ்வேளை, வீரர்களையும், விளையாட்டுப் பயிற்சியாளர் திரு எஸ். அரியம் அவர்களையும், செயலாளர் திரு. எம். எஸ். அந்தோனி அவர்களையும், மத்தியஸ்தரையும் தலைவர் பாராட்டி வைத்தார்.

---

### நபிகள் நாதர் பிறந்த தின விழா

உலகை நல் வழிப்படுத்திய உத்தம சீலர் "உம்மி நபி" முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தை அப்புத்தளை முஸ்லிம் இளைஞர் சங்கத்தினர் வரும் 14-8-62-ல் கொண்டாடத் தீர்மானித்துள்ளனர். இத்தின விழாக் கூட்டத்தில் முக்கிய பேச்சாளர்களாக-மௌலவி கே. எம். எம். ஹசன் (காத்தான்குடி), பண்டாரவளை ஸாஹிறாக் கல்லூரி அதிபர் ஜனப் எஸ். எச். எம். யாசீன், மௌலவி அபுல் அப்பாஸ், மௌலவி யு. எல். மன்சூர் ஆகியோர் கலந்து கொள்வர். இவ் விழாவிற்கு ஜனப் ஏ. எஸ். முஹம்மத் மீராசாஹிப் தலைமை தாங்குவார். கௌரவ பேச்சாளராக பண்டாரவளை வட்டார வித்தியாதரிசி ஜனப் ஏ. எம். மஜீத் கலந்து கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விழாவிற்காக பாடசாலை மாணவர்களிடையே பாட்டு, பேச்சு, கட்டுரைப் போட்டிகள் நடைபெறும்.

---

### ஈழத்து இளம் கலைஞர் இயக்கம்

ஈழத்து இளம் கலைஞர் இயக்க பொதுக் கூட்டம் 4-8-62 சனிகாலை 10 மணியளவில் டாக்டர் அ. வை. தங்கக் கணபதி தலைமையில் செந்தமிழ் செல்வி நூலகக் கட்டிடத்தில் நடைபெற்றது. கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

(1) இ. தி. மு. கவை அரசாங்கம் தடை செய்தது தவறு.

(2) புரட்சி நடிகரின் வருகை தடை செய்யப்பட்டது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விஷயம். எந்தக் கலைஞருக்கும் இலங்கை வர அரசாங்கம் தடை விதிக்காமல் இருக்க வேண்டும். தமிழ்க் கலை வளர அரசாங்கம் முட்டுக்கட்டை போட்டு வருவது வருந்தத் தக்கது மட்டுமல்ல; கண்டிக்கப்பட வேண்டியதுமாகும்.

(3) இலங்கையில் நாடகக் கலை வளர இளம் கலைஞரிடையே ஐக்கியமும் கட்டுப்பாடும் ஒத்துழைப்பும் தேவை.

(4) கலை மன்றங்கள், நாடக மன்றங்கள், இசை மன்றங்கள், நடன மன்றங்களை மாவட்டங்கள் தோறும் நிறுவ, இலங்கையில் ஐக்கியத்தை வளர்க்கும் கலைஞர் பெருமன்றம் அமைக்க ஒத்துழைக்குமாறு கலைஞர்களை வேண்டுகின்றேம்.

---

### புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவு

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் நுவரெலியா மாவட்ட ஜில்லாக்கமிட்டித் தேர்வுக் கூட்டம், 2-8-62-ல் மாவட்ட பிரதிநிதி திரு. எஸ். முருகையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருடத்துக்கு, கீழ்க்கண்ட உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: கே. பெருமாள் உப தலைவர்: ஏ. எஸ். அய்யாக்கண்ணு. காரியதரிசி: ஏ. மாரிமுத்து. உப. காரியதரிசி: எம். எஸ். முத்துசாமி. பொருளாளர்; பி. வெள்ளையன். உப. பொருளாளர்: நல்லுசாமி. கமிட்டி அங்கத்தவர் [illegible] ஆர். [illegible] வீரன், பீ. சிவனு.

# தோட்டத் தொழிலாளருக்கு வயிற்றில் அடி

## அரிசி வெட்டு பற்றி திரு. செல்லையா

"மக்களுக்கு அளிக்கப்பட்டு வந்த பங்கீட்டு அரிசியிலிருந்து அரைக் கொத்து வெட்டப்பட்டிருப்பதைவிட்டு எங்கள் சங்கம் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது. இதனுல் பாதிக்கப்பட்டவர்கள் ஏற்கனவே பல கஷ்டங்களுக்குள்ளாகி அவஸ்தைப்படும் தொழிலாளர்களே—அதுவும், முக்கியமாகத் தோட்டத் தொழிலாளர்களே." இவ்வாறு அகில இலங்கை ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு. எஸ். செல்லையா, உணவு, கடற்றொழில், வர்த்தக மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தமது கடிதத்தில், அரசாங்கத்தின் வகுப்புவாதக்கொள்கை இந்நாட்டின் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க உதவாதென்றும், குறுகிய மனப்பான்மையை விட்டு விட்டு, அரசாங்கம் ஆக்க பூர்வமான திட்டங்களை வகுத்துச் செயலாற்றினுலே பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்றும் கூறியுள்ளார்.

தோட்டங்களில் மரக்கறி உற்பத்தியை மேற்கொள்வது உணவுப் பிரச்சினையைத் தீர்க்க உதவுமென்றும், தோட்ட முதலாளிகள் தங்கள் நிலங்களில் உணவுப் பொருட்களை உற்பத்திசெய்யும் வண்ணம் அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் மந்திரியை திரு. செல்லையா கேட்டுள்ளார்.

### மக்கள் குரல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகளுக்கும் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படுகிறது?

சிங்கள அறிவு இல்லாவிட்டால் பாடசாலைகளில் கல்வி புகட்ட முடியாதா? உண்மையில் இது தமிழ் மக்களை சிங்கள இனமாக்க எடுக்கப்படும் ஒரு சூழ்ச்சியா? பதில் கூறுவார்களா மொழி வெறிபிடித்த அரசியற் தலைவர்கள்?

ஆசிரியர்கள் ஒன்று சேர்ந்து ஒருமித்து இந்த ஏகாதிபத்தியக் கொள்கைகளை எதிர்த்துப் போராடுதல் வேண்டும்.

சம்பள உயர்வு, ஆட்சி மொழியறிவு இல்லாதவர்களுக்கு உத்தியோக உயர்வு கிடையாது. உத்தியோக உயர்வுக்குத் தகுதியானவர்கள் வட கிழக்கு மாகாணங்களில் இல்லை என்ற முடிவு ஏற்படும். எனவே ஒவ்வொரு பாடசாலை அதிபரும்—உப—அதிபரும் சிங்கள ஆசிரியர்களில் இருந்து தான் தெரிவுசெய்யப்பட்டு வட கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

அன்றுதான் எமது ஆசிரியர்கள் சிந்திக்கக் கற்றுக் கொள்வார்கள். இது தமிழ் மக்களை மேலும் அடக்கி ஒடுக்குவதற்கு உடந்தையாய் இருக்கும். எனவே, வரம்பைக் கட்டிப் பெருகி வரும் வெள்ளத்தைத் தடுத்து தங்களையும் தமிழ் இனத்தையும் காப்பாற்ற முற்படல் வேண்டும், எமது அறிவைப் புகட்டும் தெய்வங்களாகிய ஆசிரியர்கள்.

மு. சுவாமிநாதன்

---

### காண்டபம் காணீர்!

இன்று எமது சமுதாயத்தின் பிற்போக்குவாதிகட்கும், சுரண்டும் கும்பல்களுக்கும், அரசினரின் அடிவருடிகட்கும், ஆட்சியாளரின் சர்வாதிகாரத்தனத்திற்கும், அருச்சுனனது காண்டீபம் போன்ற "ஆட்சிப் பீடமே! சமஷ்டி அளித்து சமரசம் காண்பாயா" என்று மகுடம் இட்ட தேன் தமிழ் சொட்டும் கணைகளுக்கு, ஆளும் கட்சியினரின் மமதையும் சர்வாதிகாரமும் இன்றில்லாவிட்டால் என்றே ஒரு நாள் அடிபணிந்தே தீரும். எமது சமுதாயத்தில் திருமதி சுந்தரி அருச்சுனு போன்ற மாதர்கள் முன் னின்று விடாமுயற்சியுடன் தமிழ்த் தாய்க்காக போராடுவார்களேயானுல் எமது தமிழ்த்தாய் இறுமாப்புடன் இழந்த உரிமைகளைப் பெற்றே தீருவாள்!.........

எம். கே. நாதன்,
கிளிநொச்சி.

### தமிழ் வளர்த்த...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக உள்ளது. இந்நூல் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை விளக்குகிறது. இந்நூலின் ஒரு இடத்தில் புலவர் அராபிய நாட்டை சோலையாக வர்ணிக்கும் கவிதை நம் கவனத்தை ஈர்க்கிறது.

"வண்டு தேனுண்டு கீதம்
பாடச்
சோலை மாமயிற் றேகையினீத்தாடக்
கண்டு களித்து நிழலிமே
வித்திகம்
கஞ்சம் செறிவயலும்
புனல்மிஞ்சும்
பன்மலர் நதியும் பிற
வளமும்
கண்ட றசூல் நடந்தனரே"

இவர் 1898-ம் ஆண்டில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.


## ஏஜண்டுகள் தேவை

கீழ்க்காணும் ஊர்களில் சுதந்திரன் விற்பனை செய்வதற்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

| | | |
|---|---|---|
| கொத்மலி | நிவித்திகலே | நெடுங்கேணி |
| வேலணை | முள்ளியவளை | உயிலங்குளம் |
| வாரியப்பொல | புலத்சிங்கள | ரம்புக்கனை |
| மன்னம்பிட்டி | மொனராகல | நாரம்மல |
| நாத்தாண்டியா | நல்லூர் | கல்வேவ்வ |
| மயிலிட்டி | அளுத்கம | நாவற்குழி |

நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
நிர்வாகி,
"சுதந்திரன்"
த. பெ. இல. 1183
194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3-வது வாரம்!

# சென்ட்ரல்

(மருதானை)

சிவாஜி



அந்தஸ்து — அதிகாரம் — ஆடம்பரம் அத்தனைக்கும் அப்பாற்பட்ட சக்தியே அன்பு! ஆனால்......போலீஸ் கமிஷனர் ரங்கநாதம் அன்பைவிட, அந்தஸ்தையே உயர்வாக மதிப்பவர். அந்தஸ்துக்காக எல்லாவற்றையும் இழக்கிறார். அந்த அன்பின் சக்தியை ரங்கநாதம் உணர்வதற்குள் ஒரு உணர்ச்சிக் காவியமே நடந்து முடிந்து விடுகிறது!

மற்றும்

6 திரைகளில்!

நம்பியார்



# நிச்சய தாம்பூலம்.

ரங்கராவ்

ஜமுனா





வசனம்:
விருதை இராமசாமி

பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

இசை:
விஸ்வநாதன்-ராமமூர்த்தி





---

ஆகஸ்ட் 17ந் திகதி வெள்ளி முதல்!

கிங்ஸ்லி (கொழும்பு) ★ பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) * மனோகரா (யாழ்ப்பாணம்) * விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் சில திரைகளில்!

நெஞ்சை உருக்கும் அநேக நிகழ்ச்சிகள் அடங்கிய அற்புதப் படைப்பு

மக்கள் திலகம்
எம். ஜி. ராமச்சந்திரன், ● கன்னடத்துப் பைங்கிளி பி. சரோஜாதேவி,
எம். ஆர். ராதா ● கண்ணாம்பா
அசோகன், சாண்டோ சின்னப்பா தேவர்
மற்றும் பலர் நடித்த

தேவர் பிலிம்ஸ்



# தாய் சொல்லைத் தட்டாதே

---

விரைவில் எதிர்பாருங்கள்!

எல்பின்ஸ்டன் [மருதானை] றெக்ஸி [வெள்ளவத்தை]

மற்றும் 8 திரைகளில்

ஜெமினி கணேசன் — அஞ்சலிதேவி

கே. ஏ. தங்கவேலு — பி. எஸ். வீரப்பா

எம். என். ராஜம் — எம். என். நம்பியார்

கமலா லெட்சுமணன் — எம். சரோஜா

முதலியோர் நடித்த



# "வீரக்கனல்"

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org